# வெற்றிமணி

London
GERMANY

Vettimaniy

மணி 65 ஆடி .July. 2015





Rathy
JEWELLERS LTD
London's Largest Selections
லண்டனில் முன்னணி நகைமாளிகை!
எப்பொழுதும் நியாயமான விலை
புத்தம் புது டிசைன்கள்
28 Ealing Rd
Wembley
HAO 4TL London
Tel: 02089033063
209 upper Tooting Road
Tooting SW17 7TG
0208682 2233




## உலகில் முதலாவது தமிழ்ப் பிரதமர்

## தனிமையை இனிமையாக்க! சில வழிகள்

## பெண் எனும் பேராச்சரியம்!

## வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும்– அதை வாங்கித் தந்த பெருமை எல்லாம்...





New Asia Fashions பக்கம் 14




செல்வராஜா
கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்
எம்மிடம் தாலிக்கொடிகள் செய்பவர்களுக்கு கூறைப்புடவைகள் பட்டுப்புடவைகள் அனைத்தும் 50% விலைக்கழிவில்
162 B, Mitcham Road London SW17 9NJ
Tel : 020 8767 3795 | 07825 005 269

வேலை 4U
Job for Sales assistant
இங்கிலாந்தில் கீழ் குறிப்பிட்ட இடங்களில் Sale Assistant வேலைகளுக்கு இடம் உண்டு தேவையான தகமைகள் ஆங்கில அறிவு, இவற்றுடன் அன்பு, நேர்மை ஆகிய தகமைகள் தேவை!
உங்கள் உழைப்புக்கு ஏற்ப பதவி உயர்வுகள் கிட்டும்.
யேர்மனியில் இருப்போரும் தொடர்பு கொள்ளலாம்.




Areas: Gloucester-Coventry
Birmingham- West Midlands
தொடர்புகளுக்கு: M&M Family One Ltd
Tel: 077 80 55 4919 / 074 29 31 5993














மாதவி

# காதல் சுமை தாங்க முடியாமல்

## பாலம் கதறல்! பூட்டுக்கள் அகற்றல்!!

பாரீஸ் பாலத்திற்கு வரும் காதலர்கள் தாங்கள் வாழ்வில் பிரிவது இல்லை என்ற மன உறுதியுடன் தங்கள் காதல் என்றும் நிலைத்திருக்க ஒரு பூட்டை அந்த கம்பிவலை வேலியில் ஒரு இடத்தில் பூட்டிவிடுவார்கள். பூட்டப்பட்ட இந்த இணைப்பு இனி விடுபடவேண்டியதே இல்லை. அந்தத்தேவையும் இல்லை.

எனவே இதயப்பூட்டுள் காதலர்கள் தம்மைப் உள்வைத்து பூட்டிவிட்டு, இனிவாழ்வில் காதலைவிட்டு இருவரும் வெளியேறுவது இல்லை என்ற முடிவுடன் பூட்டிய சாவியையும் நதிக்குள் வீசிடுவார்கள்.

இப்போது பாரிசில் உள்ள அப்பாலத்தில் ஒரு மில்லியன் கணக்கைத் தாண்டிவிட்ட காதல் பூட்டுக்கள். இப்போ பாலத்திற்கு பெரும் சுமையாகிவிட்டது. காதலர் நகரம் எனப் பெயர்பெற்ற பரீஸ் இப்போது காதல் சுமை தாங்க முடியாமல் அவ்வளவு காதல் பூட்டுக்களையும் அகற்றம் முடிவுக்கு வந்துவிட்டது.

கடந்த ஆனிமாதம் முதல் வாரத்தில் இந்தப் பூட்டுக்களை அகற்றும் பணி ஆரம்பமானது. (Paris begins removing nearly 1 million love locks from iconic bridges)
சுமார் 155 மீற்றர் நீளமான பாலத்தில் காதலர்கள் தங்கள் நினைவாக பூட்டிவைத்த பூட்டுக்கள் தொங்கிய வண்ணம் உள்ளன. பல காதலர்கள் பூட்டுக்கள் அகற்றும் போது கண்ணீர்விட்டனராம். பலர் தமது பூட்டுக்களை அடையாளம் கண்டு இறுதியாக தொட்டுப்பார்த்தும் மகிழ்ந்தனராம்.
இதுபோன்று யேர்மனியிலும் கோலின் நகர புகையிரத நிலையத்தோடு ஒட்டி பாலத்தில் பல காதலர் பூட்டுக்களைக் காணலாம்.

இவையும் சுமைதாங்கும் எல்லையைத் தாண்டிவண்ணமே உள்ளன.




என்னமோ ஏதோ பாரீஸ் பாலம் தப்பியது அரசதரப்புக்கு மகிழ்வே. இங்கு பாலம் காதலர் பூட்டுக்களால் சுமைதாங்கமுடியாது விழிக்க அரசு விழித்தக்கொண்டது. அங்கு இலங்கையில் பலர் பிள்ளைவரம் வேண்டி மரத்தொட்டில்களை கோவில் மரங்களில் தொங்கவிட்டு மரத்தை சுமையாக்கி வரம் கேட்கின்றனர். உலகே நம்பிக்கையில்தான் சுற்றுகிறது.





வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க
ஓசை 226



ஆரம்பம்:1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
01575 83 94 325

e-mail: vettimaniy@hotmail.com
Company No: 8876276

"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Vettimaniy Ltd
Sanje:07824 61 83 83
vai g (U.K) 00 44 7788 195962

Vettimaniy has no responsibility of the contents of the articles and advertisements

# தமிழர்களின் இராஜதந்திரம் எது?

-அ.நிக்ஸன்-

முன்னர் எதற்கெடுத்தாலும் புலிகள் சொல்கிறார்கள் அதைத்தானே செய்ய வேண்டும் என்று கூறியவர்கள், இன்று இந்தியாவும் அமெரிக்காவும் சொல்கின்றது நாங்கள் அதைத்தானே செய்ய வேண்டும் என்று கூறுவது வேடிக்கையானது.
-அ.நிக்ஸன்-

இனப்பிரச்சினை என்றால் என்ன என்று கேள்வி கேட்ட மாணவன் ஒருவன் தமிழர்களிடம் இராஜதந்திரம் இருக்கின்றதா என்றும் ஒரு வகையான கோபத்துடன் கேட்டான். அதற்கு பதிலளித்த அரசியல் விஞ்ஞான விரிவுரையாளர் இனப்பிரச்சினை என்றால் என்ன என்பதற்கு விடைகூற கடந்த 60 ஆண்டுகால வரலாற்றை புரட்டிப்பார்க்க வேண்டும் என கொஞ்சம் கிண்டலாக சொன்னதுடன் அப்படி பார்க்கின்றபோதுதான் தமிழர்களிடம் இராஜதந்திரம் இருந்ததா இல்லையா என்பதையும் உன்னால் உணர்ந்து கொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டார். மீண்டும் கேள்வி தொடுத்த அந்த மாணவன் அப்படியானால் இன்னுமொரு 60 ஆண்டுகாலம் என்னையும் காத்திரு என்றுதானே நீங்கள் சொல்கின்றீர்கள் என விரிவுரையாளரைப் பார்த்து ஆவேசமாகக் கேட்டான். பதில் கூறிய விரிவுரையாளர் உனது கேள்வியில் நீ வெளிப்படுத்திய அந்த ஆவேசம்தான் தமிழர்களின் இராஜதந்திரம் எனவும் அதுதான் இத்தனை அழிவுகளுக்கும் காரணம் என்றும் கூறி முடித்தார்.

## அறிவு நிலைசார்ந்த அரசியல்

தமிழர்களின் தற்போதைய நிலைமை தொடர்பாக கேள்வி எழுப்பிய மேற்படி மாணவனுக்கு விரிவுரையாளர் கூறிய இரண்டு விடயங்கள் முக்கியம் பெறுவதாக இன்னுமொரு விரிவுரையாளர் கூறினார். ஒன்று 60 ஆண்டுகால வரலாற்றை புரட்டிப்பார்க்க வேண்டும் என்பது. இரண்டாவது- ஆவேசம்தான் தமிழர்களின் இராஜதந்திரம் என்பது. இந்த இரண்டு விடயங்களுமே பட்டறிவு தமிழ்த் தலைமைகளிடம் இல்லை என்பதை கோடிட்டு காட்டியுள்ளதாக அந்த விரிவுரையாளர் நியாயப்படுத்தினார்.
ஆனால் பட்டறிவு தமிழ்த் தலைமைகளுக்கு இன்னமும் வரவில்லை என்பதை ஏற்றுக்கொண்டாலும் ஆவேசம்தான் அன்றிவிருந்து தமிழர்களின் இராஜதந்திரமாக இருந்தது என்பதும், அந்த ஆவேசம்தான் இத்தனை அழிவுகளுக்கு காரணம் எனவும் கூறிய கருத்தை ஏற்க முடியாது என குறித்த அந்த மாணவன் கூறினார். ஏனெனில் ஆவேசம் என்பது தொடர்ச்சியான அடக்குமுறையின் ஊடாகவே வெளிப்படுகின்றது. ஆகவே ஆட்சியாளர்கள் தமிழர்களை தொடர்ச்சியாக அடக்கி ஆண்டார்கள் என்பதைத்தான் அந்த ஆவேசம் வெளிப்படுத்துகின்றது என்றும் கூறி அந்த மாணவன் தனது வாதத்தை முன்வைத்தான்.

## உணர்ச்சி அரசியல்

தேசிய இனங்கள் விடுதலைக்காக போராடும்போது உணர்ச்சியை எந்த இடத்திலே வெளிப்படுத்துவது எந்த சந்தர்ப்பத்தில் அறிவுபூர்மாக சிந்திப்பது என்ற ஒரு வரையறை முக்கியமானது. உணர்ச்சி அரசியல் மக்களை எழுச்சியடைச் செய்யும் என்று கருதி செயற்படுவது விடுதலை வேண்டி போராடுகின்ற தேசிய இனங்களுக்கு ஆரோக்கியமானது அல்ல. அரசியல் ரீதியாக மக்கள் சிந்திக்கும்போதுதான் போராட்டம் வலுவடையும். உணர்ச்சி அடிப்படையில் நடத்தப்படுகின்ற போராட்டங்கள் அந்த உணர்ச்சி வேகம் குறைவடைந்ததும் நின்றுவிடும். ஆனால் அரசியல் முறையில் சிந்தித்து செயற்படுகின்ற போராட்டங்கள் விடுதலைக்கு வழி வகுக்கும். இது தொடர்பாக கருத்து வெளியிட்ட ஆய்வாளர் ஒருவர் விடுதலை வேண்டி போராடுகின்ற தேசிய இனங்களிடையே இருக்கின்ற உணர்ச்சிப் பிரவாகம்தான் ஆட்சி புரியும் அரசாங்கத்துக்கு அடக்கியாள வசியாக அமைகின்றது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.
இங்கு தமிழர்களிடையே காணப்படுகின்ற ஆவேசம் என்பதுதான் அவர்களின் இராஜதந்திரமாக இருந்தது என கூறிய அந்த விரிவுரையாளரின் கருத்தின் உட்பொருளை அவதானிக்கும்போது தமிழ் மக்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சி மற்றும் அரசியல் அறிவுசார்ந்த கருத்துக்களை தமிழ்த் தலைமைகள் பரப்பவில்லை அதற்கான எந்த ஒருவொரு வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டையே காணமுடிகின்றது. அது ஒருவகையில் உண்மையாகவும் உள்ளது. 1920 ஆம் ஆண்டு இலங்கைத் தேசிய இயக்கம் பிளவுபட்டதில் இருந்து இன்றுவரை வரலாற்றை பார்க்கும்போது தமிழ்த் தலைமைகள் தேர்தல் காலங்களில் தங்கள் வெற்றிக்காக அவ்வப்போது உணர்ச்சிகளை கிளப்பிவிட்டு ஆவேசமாக பேசுகின்றனர்.

## மக்களை நம்பவைத்தல்

மக்களும் அந்த பேச்சுக்களை நம்பி வாக்களித்து வெற்றிபெறச் செய்கின்றனர். 30 ஆண்டுகால அஹிம்சைப் போராட்டம் நடைபெற்றபோதும் இவ்வாறான ஆவேசமான உணர்ச்சிகளை கிளப்பிவிடுகின்ற பேச்சுக்களைத்தான் அன்றை தலைவர்கள் செய்தார்கள். 30 ஆண்டுகால ஆயுதப் போராட்டத்தின் பின்னரான காலகட்டத்திலும் அதன் தொடர்ச்சிதான் காணப்படுகின்றது. ஆனால் 30 வருடகால ஆயுதப்போராட்டம் குறிப்பிட்ட அளவிலேனும் மக்களை சிந்திக்க வைத்தது எனலாம். அரசியல் ரீதியான சிந்தனைகள் என்பதை விட இராணுவ நோக்கிலான செயற்பாடுகள் அன்று கூடுதலாக இருந்தமையும் போராளிகளின் தாக்குதல்கள் வெற்றியடைகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மக்கள் உணர்ச்சியாக பொங்கியெழுந்த நிலைமையும் அரசியல் ரீதியான உரிமைகளை அன்று உணரவைத்தது.

ஆனால் அந்த அரசியல் ரீதியான உண்ர்வுகளை ஆயுதப்போராட்டத்திற்கு வெளியே நின்று கொண்டு பார்வையாளராக இருந்த சில தமிழ்த் தலைமைகள் தொடர்ச்சியாக முன் நகர்த்த தவறிவிட்டன. விடுதலைப் புலிகள் அதற்கு அனுமதிதரவில்லை என்று கூறி அவர்கள் குற்றச்சாட்டுக்களை அடுக்கினார்கள். தமிழ் ஈழம் என்ற கோட்பாடு அரசியல் விழிப்புணர்ச்சிகளை மக்களிடையே தோற்றுவிக்க தடையாக இருந்தது. அதற்கு அப்பால் வேறு எந்த அரசியலையும் முன்னெடுக்க முடியவில்லை என்று தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் உள்ள சில தலைவர்கள் அப்போது கூறினர். ஆனால் நோர்வேயின் ஏற்பாட்டுடன் பேச்சுக்கள் நடைபெற்றபோது கிளிநொச்சிக்கு சென்று வந்த அந்த தமிழ்த் தலைமைகள் புலிகள் கூறியதையே மீண்டும் தங்கள் கருத்தாக கூறி மார்தட்டினர்.

தொடர்ச்சி 08ம் பக்கம்...









# அமைதியை நோக்கி மனதை செலுத்த செய்யும் பயிற்சியே யோகா!

சர்வதேச யோகா தினத்தை 21.06.2015 முன்னிட்டு டெல்லி ராஜ்பாத்தில் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பிரதமர் மோடி 35 நிமிடங்களில் 15 ஆசனங்கள் செய்து அசத்தினார். சர்வதேச யோகா தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இதையொட்டி டெல்லி ராஜ்பாத்தில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் யோகா நிகழ்ச்சி நடைபெற்றது. காலை 7 மணிக்கு துவங்கிய நிகழ்ச்சியில் 35 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு யோகா செய்தனர். வெள்ளை நிற உடையில் மோடி சிறப்பாக யோகா செய்ததை பார்த்து பலரும் வியந்தனர்.

ஆசனங்கள் 64 வயதிலும் அவர் தனது உடலை வளைத்து யோகா செய்ததை பார்த்த பலரும் மோடி இந்த வயதிலும் இத்தனை சுறுசுறுப்பாக உள்ளாரே என்று கூறி ஆச்சரியப்பட்டனர். மோடி 35 நிமிடங்களில் 15 ஆசனங்களை செய்து அசத்தினார்.

யோகா யோகா என்பது உடலை கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்ள மட்டும் அல்ல. அது அதையும் தாண்டிய விஷயம். அமைதியை நோக்கி மனதை செலுத்த செய்யும் பயிற்சியே யோகா என்று நிகழ்ச்சியில் மோடி தெரிவித்துள்ளார்.

மோடி யோகா நிகழ்ச்சியில் தனது கண்ணாடியை கழற்றி விட்டு கழுத்தில் மூவர்ண ஷாலை அணிந்து அனை வருக்கும் முன்பாக நின்று யோகா செய்தார். யோகா செய்வதாலேயே தான் குறைவாகத் தூங்கினாலும் நெடுநேரம் பணிபுரிய முடிகிறது என்கிறார் மோடி.

கின்னஸ் முன்னதாக 2005ம் ஆண்டு குவாலியரில் 29 ஆயிரத்து 973 மாணவர்கள் யோகா செய்தது தான் ஒரே நேரத்தில் அதிகமானோர் யோகா செய்ததாக கின்னஸ் சாதனை புத்தகத்தில் உள்ளது. இந்நிலையில் இன்று ராஜ்பாத்தில் 35 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் யோகா செய்து புதிய கின்னஸ் சாதனை படைத்துள்ளனர்.

ஜூன் 21ம் தேதியை ”சர்வதேச யோகா தினமாக” கடைப்பிடிக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியா கொண்டு வந்த தீர்மானம் 177 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது மனித குலத்தின் சிறந்த உடல்நலத்திற்கு வழி அமைத்துக் கொடுத்து, ஆரோக்கியமான வாழ்வுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுக்கும் பணியில் முக்கிய வெற்றியாகவே கருத வேண்டும்.

மக்களுக்கு பொதுச் சுகாதார சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுப்பது அரசு நிர்வாகத்தின் முக்கிய அம்சம். ஆகவே, ஆரோக்கியமான மன நிலைக்கும், உற்சாகமான உடல் நலத்திற்கும் நாம் அனைவருமே முயற்சி செய்ய வேண்டும். அதற்கு யோகா கலை மிகவும் உதவிகரமாக இருக்கிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே யோகா கலை இந்தியாவுக்குச் சொந்தமாக இருந்தாலும், இன்றைய தினம் உலக நாடுகளே யோகாவை ஏற்றுக் கொண்டு அந்த பயிற்சியில் ஈடுபடுகின்றன என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி.












# யாழ்ப்பாணத்தில் எழுச்சிபெற்றுள்ள இசைப்பாமாலை வெளியீடுகள்

## புலம்பெயர் உறவுகளால் எங்கள் தாயகக் கலைஞர்களுக்கு உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

**ச.லலீசன் (யாழ்)**

தமிழ் இலக்கிய வரலாற்றில் பல்லவர் காலத்தைப் பக்தி நெறிக் காலம் என்று குறிப்பிடுவர். சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் மற்றும் ஆழ்வார்கள் இக்காலத்திலேயே பக்திப் பயிர் வளர்க்கப் பல இலக்கியங்களைப் படைத்தனர்.

பல்லவர் காலப் பக்தி இலக்கியங்கள் ஊடாகப் பல வரலாற்றுச் செய்திகள் வெளிப்படுத்தப் படுகின்றன. அந்த வகையில் இலங்கையில் தமிழர் வாழ்வியல் குறித்த பதிவுகளும் முக்கியமானவை. திருஞான சம்பந்தரும் சுந்தரரும் இலங்கையின் தலங்கள் மீது தேவாரங்களைப் பாடினர். “வங்கம் (வள்ளம்) மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகர்” என்கிறார் சுந்தரர். திருக்கேதீச்சரம் மீது பாடிய பாடலில் அத்தலச் சூழலின் சிறப்பு எடுத்துரைக் கப்படுகின்றது. இன்னும் தெங்கம் பொழில் சூழ்ந்த திருக்கேதீச்சரம் என்றும் மாவின் கனி தூங்கும் பொழில் மாதோட்டம் என்றும் அவர் பதிவு செய்கின்றார். அருணகிரியாரது பாடல்களில் கதிர்காமம், யாழ்ப்பாணப் பட்டினம் பற்றிய செய்திகள் வருகின்றன.



வீரமணி ஐயர்

ஈழத்தில் எழுந்த தலபுராணங்கள், குறிப்பிட்ட தலம் பற்றிய செய்திகளை வரண்முறையாக உரைக்கின்றன. ஈழத்தின் பெரும்பாலான ஆலயங்கள் தத்தமக்கெனத் தனித்துவமான ஊஞ்சற் பதிகங்களைக் கொண்டுள்ளன. அப்படி ஊஞ்சற்பதிகக் காய்ச்சல் தொற்றியிருந்ததும் ஒரு காலம்.

### கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்

ஈழத்தில் ஊஞ்சற்பதிகங்கள் மற்றும் இசைப் பாடல்களை ஆக்கியோருள் முதன்மையானவர் இணுவில் மகாவித்துவான் வீரமணி ஐயர் ஆவார். கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நடனபாட விரிவுரையாளரான இவர் இசைப்பாக்களை ஆக்குவதில் வல்லவர். கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன் என்ற பாடலால் உலகோரால் அறியப்பட்டவர் அவர். இப்பாடல் மயிலாப்பூர் மீது பாடப்பட்டதாகும். அத்தலத்தில் இப்பாடல் கல்வெட்டாகச் செதுக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றது.

ஈழத்துத் தலங்கள் மீது இசைப்பாடல்களைப் பாடும் மரபுக்கு அடித்தளம் இட்டவரும் வீரமணிஜயர்தான். இவர் ஈழத்துத் தலங்கள் மீது பாடிய பாடல்களுள் பிரபலமான பாடல் சுட்டிபுரம் வாழும் சிவசுந்தரியே கண்ணகியே என்ற பாடல் ஆகும். 1970 களில் முதன்முதலாக சீர்காழி கோவிந்தராஜன் இலங்கைக்கு வருகை தந்தார். அவரது முதலாவது கச்சேரி வரணி சுட்டிபுரத் திலேயே நடைபெற்றது. இதற்கென வீரமணி ஐயர் எழுதிய பாடலே சுட்டிபுரம் வாழும் சிவசுந்தரியே கண்ணகியே என்ற பாடலாகும்.

பாடலை எழுதுவதற்காகக் கோவிற் சூழலைப் பார்வையிட வந்த வீரமணி ஐயரின் கார், பசுக்கூட்டங்கள் வீதியைக் கடந்தமையால் தாமதமாகியதாம். இதை வைத்தே பட்டிப்பசு இனங்கள் எல்லாம் பாலாபிஷேகம் செய்யும் அம்மா என்று பாடினார் ஐயர். ஏடிலங்கும் ஏரிலங்கும் ஏழிசைத் தமிழ் இலங்கும் என்றும் வரணியின் சிறப்பை அவர் பதிவு செய்தார்.
சினிமா, உலகை ஆளுகின்ற இக்காலத்தில் எல்லோரையும் கவரக்கூடிய வகையில் இசைப்பாடல்களை வெளியிட்டு பக்தி வளர்க்கும் மரபை தற்போது காண முடிகின்றது. 2000 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பலநூற்றுக்கணக்கான இசை இறுவட்டுக்கள் இலங்கையில் வெளியிடப் பட்டுள்ளன. இவற்றுள் மிகப்பெரும்பாலானவை பக்தி அல்பங்கள் ஆகும்.

விடுதலைப் பாடல்கள் எழுச்சி பெற்ற காலத்தில் ஈழக்கலைஞர்களுக்கு மிகப்பெரும் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அவர்களது பாப்புனை திறம் தமிழக கவிஞர்களின் தரத்தைவிட விஞ்சி நின்றமையை நிரூபிக்குமாறு அந்தக் களம் அமைந்திருந்தது. தற்போது விடுதலைப் பாடல்களைப் பாடுவதற்கோ எழுதுவதற்கோ சாதகமான சூழல் இல்லாத நிலையில் பக்திப் பாமாலைகள் சிறப்பிடம் பெறத் தொடங்கியுள்ளன.

ஈழத்து இசை அமைப்பாளர்கள் பலர் இதில் ஆர்வம் செலுத்தத் தொடங்கியுள்ளனர். இதனை மையப்படுத்திய ஒரு வணிகம் இங்கு தழைத் தோங்குகின்றது. ஒரு பாடலை ஆக்குவதற்குரிய தற்போதைய செலவு இலங்கைப் பணத்தில் இருபதாயிரம் ரூபாவாக உள்ளது. பின்னர் இசை அமைப்பாளரால் வழங்கப்படும் முதன்மை இறுவட்டை வைத்து வேண்டியளவு பிரதிகளைத் தயாரிக்க வேண்டும். இதற்கான செலவு பிரதி ஒன்றுக்கு நூறு ரூபா வரையில் தேவைப் படுகின்றது. ஈழத்தில் பிரபலம் பெற்ற சாந்தன், சுகுமார் போன்ற பாடகர்களை வைத்துப் பாடுவ தானால் ஒரு பாடலுக்கு மேலதிகமாக எட்டாயிரம் ரூபா வரையில் வழங்க வேண்டி யிருக்கின்றது. ஒலிப்பதிவாளர்கள் தொடக்கம் இசைக் கலை ஞர்கள் வரை நன்மையடையக் கூடிய தொழிற் முயற்சி என்பதற்கு அப்பால் ஒரு வரலாற்று ஆவணப்படுத்தலாகவும் இதனைக் கொள்ள முடியும்.

இசைப்பாடல்களை எழுதும் பெரும்பாலான பாடலாசிரியர்கள் ஒரு பாடலுக்குரிய இலக்கியத் தரத்தைக் கவனிக்காமற் பாடல்களை எழுது கின்றனர் என்பதை வேதனையுடன் சுட்டிக்காட்டியே ஆகவேண்டும். வரலாறு பற்றிய தகவற் தேடலின் மட்டுப்பாடு மற்றும் சமய இலக்கியங்கள் குறித்த அறிவின் பற்றாக்குறை என்பவையே இதற்கான காரணங்கள் ஆகும்.

இசைப்பாடல்களுக்கு அடியெடுத்துக் கொடுத்த வரணி சுட்டிபுரம் பதியில் இவ்வாண்டுதான் (12.06.2015) கோவிலுக்கெனத் தனித்துவமான ஓர் இசை அல்பம் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. இதன் பின்னணயில் பன்னிரண்டாம் திருவிழா உபய காரர்கள் இருந்தனர். பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், மாகாண அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம், மாகாண உறுப்பினர்களான சோ.சுகிர்தன், அங்கஜன் இராமநாதன் முன்னிலை வகிக்க நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இறுவட்டை வெளியிட்டு வைத்தார்.
புலம்பெயர் உறவுகளுடைய நிதிப்பங்களிப்பு டனேயே இத்தகைய செயற்பாடுகளில் பல ஈழமண்ணில் முன்னெடுக்கப்படுகின்றன.
இத்தகைய இசைப்பாக்களை சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதற்கும் எங்கள் தாயகக் கலைஞர் களுக்கு உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அவர்களால் முடியும்.
இங்கு - ஈழக்கலைஞர்கள் தம் திறமையை வெளிப்படுத்துவதற்குரிய களமாக இசைப்பா வெளியீடுகள் அமையும்.



தமிழர் மரபுத் திங்கள் – ஆடி







# “ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை”

(முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்)

தமிழர் வாழ்வியலில் ஆடித் திங்கள் ஆண்டின் ஏழாவது திங்களாக அமைந்துள்ளது. ஓராண்டின் பின் அரைவாசியில் முதல் திங்களாக உள்ளது. முதுவேனிற் காலத்தின் முடிவுநிலை ஆகவும் உள்ளது. இத் திங்களில் உணவுப் பொருட்கள் மிகவும் அருந்தலாகிவிடும். பயிர்கள், விளைபொருட்கள் எல்லாம் பயன்தரு நிலை அருகிவிடும். கால நிலையிலும் மாற்றம் வந்துவிடும். காற்று மிக வேகமாக வீசும். இக் காலத்திலே வீசுகின்ற காற்றின் வலிமையை விளக்க ஒரு முதுமொழி வழக்கிலே உள்ளது. அது வருமாறு:

“ஆடிக் காற்றிலே அம்மியும் நகரும்.”

மிகவும் பாரமான பொருள் அம்மி. கருங்கல்லால் செய்யப்பட்டது. பொருட்களை அரைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. ஆனால் மின்சாரத்தால் இயங்கும் பொறிகள் பயன்பாட்டில் இருப்பதால் அம்மியைச் சமையலறையிலே காணமுடியாது. திருமண மணடபத்தில் மட்டும் சடங்கு நிலையிலே அம்மி பயன்படுத்தப்படுகிறது. ஆடித்திங்களில் மீண்டும் பயிர்ச் செய்கையைத் தொடங்கவேண்டும. இயற்கையின் மாற்றங்களைக் கொண்டு வாழ்வியல் நடைமுறைகளைத் திட்டமிட்ட தமிழர் 'ஆடி விதை தேடி விதை' என்ற முதுமொழியிலே இப் பண்பாட்டைப் பதிவுசெய்து வைத்துள்ளனர். அந்த வகையில் ஆடி நெல் விதைக்கப்படும் திங்களாகும்.

உணவு நிலையிலே எஞ்சியிருக்கும் தானியத்தை மிகவும் கவனமாகப் பயன்படுத்த வேண்டும். எனவே நாளாந்தம் சோறு சமைத்து உண்ணும் நிலையை மாற்றி அரிசி மாவிலே கூழ் காய்ச்சிக் குடிக்கும் வழக்கம் தோன்றியது. “ஆடிப் பிறப்பு” எனத் தமிழ் ஆடித் திங்கள் முதலாம் நாள் இப் பண்பாட்டின் நினைவூட்டும் நாளாகக் கொண்டாடப்பட்டது. ஈழத்து நவாலி ஊரிலே வாழ்ந்த சோமசுந்தரப் புலவருடைய “ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை” என்ற சிறுவர் கவிதை இந் நடைமுறையினை அழகாகப் பதிவுசெய்துள்ளது. ஆடிக் கூழ் காய்ச்சும் முறையும் அதனோடு இனிமையான கொழுக்கட்டையும் இணைந்திருப்பதையும் புலவர் சிறப்பாகவே பாடியுள்ளார். முற்காலங்களிலே ஆடிப் பிறப்பைக் கொண்டாட விடுமுறை வழங்கும் மரபு இருந்தது. தற்போது அவ்வாறு விடுமுறை வழங்கும் மரபு அற்று விட்டது. பனங் கருப்ப நீரை விட்டு அரிசி மாவுடன் சேர்த்துப் பதமாகக் கூழ் காய்ச்சிப் பலா இலையில் அதை அள்ளிக் குடித்த அனுபவம் பலருக்கு உண்டு.

பனம்பழம் பழுத்து விழும் காலமும் ஆடித் திங்கள் ஆகும்.. இப் பழம் ஏழைகளின் மதிய உணவாக விளங்கியது. பனம்பழத்தைக் காடியுடன் பிசைந்து உண்பர். இந்த உணவு மாற்றத்தை எல்லோரும் திட்டமிட்டுக் கடைப்பிடித்தனர். அவ்வாறு திட்டமிடாவிட்டால் உணவுப் பஞ்சத்தால் எல்லோருமே பெரிதும் துன்புற நேரிடும். “ஒரு ஆடி கலங்கினால் ஏழு ஆடி கலங்க வேண்டும்” என்ற நம்பிக்கையும் மக்களிடையே நிலவியுள்ளது. இயற்கை நிலையில் ஆற்றிலே புது வெள்ளம் வரும் காலமும் இதுவே. 'ஆடிப் பெருக்கு' என ஒரு சிறப்பு வழக்கும் பயன்படுத்தப்பட்டது. ஆற்றிலே புது வெள்ளம் வந்தால் மக்கள் கூட்டாகச் சென்று வழிபடும் மரபும் உள்ளது. இவ் வழக்கம் பண்டைத் தமிழரிடையேயும் இருந்ததைப் பரிபாடல் நூலிலே தொகுக்கப்பெற்ற வையை பற்றிய பாடல்கள் பதிவுசெய்துள்ளன.

ஆடித் திங்கள் தமிழர் வழிபாட்டு மரபிலும் மிகவும் சிறப்புப் பெற்றுள்ளது. ஆடித் திங்களில் வருகின்ற செவ்வாய்க் கிழமை சிறப்பான நாளாகக் கணிக்கப்பட்டுள்ளது. முருகனையும் அம்பாளையும் வழிபட உகந்த நாளாகும். திருமணமாகாத கன்னிப் பெண்கள் இந்நாளிலே விரதமிருப்பர். இதனால் விரைவில் திருமணம் கைகூடும் என்ற நம்பிக்கை நீண்ட காலமாகவே நிலவிவருகிறது. செவ்வாய்க் கிரக தோ'முடையவர்களும் இவ்விரதத்தை மேற் கொள்வர். ஒரு பொழுது மட்டும் அன்னமோ பால் பழமோ உண்டு இவ்விரதத்தைக் கடைப்பிடிப்பர்.

இத் திங்களிலே வருகின்ற அமாவாசை நாளும் சிறப்பானது. பிதிர்க் கடன் செய்வதற்கு மிகவும் உகந்த நாளாகும். தந்தையை இழந்தவர்கள் இந்நாளிலே விரதமிருந்து வழிபட்டுத் தானங்கள் செய்வர். அவ்வாறு செய்வதால் உலகை விட்டுப் பிரிந்த ஆன்மாக்கள் ஈடேற்றம் அடைவார்கள். இம்மரபு மேலைத் தேயப் பண்பாட்டில் இல்லை. அங்கு உயிரோடு இருக்கும் தாய், தந்தையை நேரில் கண்டு உறவாடி வருவதற்கென்றே சிறப்பான நாள் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆடித் திங்களில் வருகின்ற பூரம் நட்சத்திரத்தன்று அம்பாள் பக்குவப்பட்ட (ருதுவாகிய) நாளாகக் கருதப்படுகிறது. அன்றைய நாள் அம்பாளுக்குச் சிறப்பான குடமுழுக்கு நீராட்டி அலங்காரம் செய்வர். சிறப்புப் படையலாக உழுத்தம் களி இடம்பெறும். இப் படையல் மரபு சிறப்பான ஓர் உணவுப் பழக்கத்தையும் விளக்குவதாக உள்ளது. பெண் பூப்படைந்தால் அவள் உடல் வலுப்பெற உழுத்தம் களி கொடுக்கும் வழக்கம் இன்றுவரை நிலவுகிறது. ஆடிப்பூர நாள், அம்பாளை வழிபட்டு அம்பாளின் எட்டு வகைச் சித்திகளையும் பெறப் பெரிதும் உதவுகிறது. அம்பாளை நினைந்து ஏழு செவ்வாய்க் கிழமை விரதம் இருந்தால் திருமணம் விரைவிலே கைகூடும் என்ற நம்பிக்கை உண்டு.

தமிழர் மரபுத் திங்கள் பற்றிய கட்டமைப்பிலே ஆடித் திங்கள் மக்களின் பொது வாழ்வியலிலும் வழிபாட்டு மரபுகளிலும் சிறப்பான திங்களாகக் கருதப்பட்டுள்ளது. இன்று விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியால் காலம் பொறிமுறையால் உணர்த்தப்படுகிறது. ஆனால் பண்டைக் காலத்தில் இயற்கையின் மாற்றங்களைக் கொண்டே கணிப்பு நடைபெற்றுள்ளது. ஆடித் திங்களின் பிறப்புக் காலக் கடப்பின் விரைவை உணர்த்தும் ஒரு நிகழ்வாகும். ஆறு திங்கள் கடந்துவிட்டது. இன்னும் ஆறு திங்களே உள்ளன. இதுவரை தேடிய விளைபொருட்கள் அருகி விட்டன. 'இனிமேல் மீண்டும் விளைபொருட்கள் தேடும் முயற்சியை எல்லோரும் மேற்கொள்ள வேண்டும். முழுமூச்சாகப் பயிர்ச் செய்கையிலே ஈடுபடவேண்டும்.' என உணர்த்தும் திங்களாக உள்ளது. மனித வாழ்விலே முன்னோர் பற்றிய நினைப்பும் வழிபாடு பற்றிய எண்ணமும் நிலைத் திருக்க வேண்டும் என்பதையும் ஆடித் திங்கள் உணர்த்தி நிற்கிறது.

இன்று மரபுத் திங்கள் பற்றிய நடைமுறைகள் பேணப்படுவதில்லை. எல்லாவற்றையும் எக்காலத்திலும் பெற்றுக்கொள்ளலாம் என்ற எண்ணம் எல்லோரிடமும் குடிகொண்டுள்ளது. 'ஆடிக் கூழ் எப்போதும் குடிக்கலாம்' என்ற நம்பிக்கையும் வலுவடைந்துள்ளது. ஆனால் இயற்கை தன் இருப்பு நிலையையும் இடையிலே வெளிக்காட்டும் பேராற்றல் கொண்டது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.








# பெண் எனும் பேராச்சரியம்

அமரர் கனக்ஸ்

**நீங்கள் எப்படியோ தெரியவில்லை** ஆனால் என்னால், இந்த வயதில் தான் சிந்திக்கத் தொடங்கியுள்ளதால் போலும், பெண்ணினைப் பற்றிப்பிறப் புரிமையியல் (Genetics) ரீதியாகச் சிந்திக்க ஆச்சரியம் ஆச்சரியமாய் வருகிறது. ஒரு மனிதனிலே உள்ள இயல்புகள் யாவற்றையும், உயரமோ, குள்ளமோ, கறுப்போ, சிவப்போ,கூர்மூக்கோ, சப்பை மூக்கோ, சுருட்டை மயிரோ, வணங்கா முடியோ என ஒவ்வொன்றையும் 23 சோடி நிறமூர்த்தங்களில் (Chromosomes) அமைந்த பரம்பரை (Genes) அலகுகள் தான் தீர்மானிக்கின்றன என்பது நீங்கள் அறிந்ததே. ஒருவரிலே உள்ள பரம்பரை அலகுகளின் எண்ணிக்கை கிட்டத் தட்ட 100,000 ஆகும். இருபத்தி நான்கு சோடி நிறமூர்த்தங்கள் என்று சொன்னாலும் கூட அவற்றிலே 23 சோடிகள் மாத்திரமே உடல் இயல்புகளுக்குக் (somatic characters) காரணமானவை. ஏனவே அவற்றினை தன்மூர்த்தங்கள் (autosomes- குறியீடு-n) என அழைப்பர்.

மற்றைய ஒரு சோடி மட்டும் சற்று வித்தியாசமான தன்மை காட்டுபவையாக உள்ளன. அவற்றிலும் உடல் இயல்புகளுடன் சம்பந்தமான பரம்பரை அலகுகள் காணப் பட்டாலும் கூட அவற்றின் பிரதான தொழில் இலிங்கத் தீர்வையே ( Sex determination) அதாவது பிறக்கப் போகும் பிள்ளை ஆணா? பெண்ணா? என தீர்மானிப்பது இவ்நிறமூர்த்தங்களே. எனவே அவை இரண்டும் அயன்மூர்த்தங்கள் அல்லது இலிங்க நிறமூர்த்தங்கள் ( allosomess- குறியீடு-X) எனப் படுகின்றன.
இங்கேதான் நான் சொன்ன பேராச்சரியம் காத்திருக்கிறது. நிறமூர்த்தங்கள் எப்பொழுதும் சோடியாக அமைவதாலே இலிங்க நிறமூர்த்தங்களை XX எனும் குறியீட்டினால் குறிப்பிடலாம்.

மனித இனத்தின் கூர்ப்பின் ஆரம்பக் காலங்களிலே இவை இரண்டும் அச்சொட்டாக ஒத்திருந்தாலும் பின்னர் அவற்றில் ஒன்று சற்றே போக்கிரித் தன்மை காட்டி அதன் விளைவாக தன்னகத்தே கொண்ட பரம்பரை அலகுகள் பலவற்றை இழந்து சிதைந்து பரிதாபத்துக்குரியதாய் நின்றது.
கௌரவம் இழந்த இந்தப் போக்கிரி நிறமூர்த்தத்தை மற்றைய X, ஒப்புக்குச் சோடியாகக் கொண்டிருந்த போதிலும் இதனுடன் எந்த விதமான இணைதலோ அதன் விளைவாக ஏற்படக் கூடிய பகுதிப் பரிமாற்றமோ செய்ய முன்வராமையால் இந்நிறமூர்த்தம் கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரியாகவே வாழ வேண்டிய கொடுமை. இதன் கையாலாகாத தன்மையைப் பிட்டுக் காட்டும் முகமாக இதனை Y எனும் குறியீட்டினால் பரம்பரையியலறிஞர்கள் குறித்தனர்.
அடுத்ததாக ஒரு பெரும் பிரச்சனை! இந்த அவைக்குதவாத Y நிறமூர்த்தத்தை எங்கே கொண்டு போய் குப்பை கொட்டுவது.? " செல்லும் செல்லாததற்குச் செட்டியார் வீடு" என்பார்கள். எனவே, ஆண்வர்க்கத்துக்கு முதல் அடி விழுந்தது. Y நிறமூர்த்தம் ஆணின் ஏகபோக உரிமையாயிற்று.

பெண்ணியம் பேசுபவர்கள் கவனியுங்கள், அன்றே பெண்ணுக்கு கௌரவமான அந்தஸ்து கொடுக்கப் பட்டுள்ளது என்பதை.
அன்று தொட்டு கருக்கட்டப்படுகையில் XX நிறமூர்த்தம் வருமானால் குழந்தை பெண்ணாகவும், XY வந்தால் குழந்தை ஆணாகவும் விருத்தியுறுகிற நியதி ஏற்பட்டது. நிறக்குருடு, குருதி உறையாமை, மாலைக்கண், வழுக்கை போன்ற இயல்புகள் X நிறமூர்த்தத்தில் அமைந்த பரம்பரை அலகுகளால் தீர்மானிக்கப்படுபவை. எனவே, அவை இலிங்கம் இணைந்த இயல்புகள் எனப் படுகின்றன. Y நிறமூர்த்தத்தில் பரம்பரை அலகுகள்? அண்மைக் காலம் வரை குடும்பங்கள் சிலவற்றில் பிரச்சனை ஏற்படக் காரணமான செய்தி ஒன்றைப் பிறப்புரிமையியலாளர் கூறி வந்தனர்.
சில ஆண்களிலே காதுச் சோணையில் மயிர் காணப் படுகின்றதை கண்டிருப்பீர்கள். இந்த இயல்புக்குரிய பரம்பரை அலகு Y நிறமூர்த்தத்திலேயே அமைந்துள்ளது என்றனர். அப்படியாயின் இவ்வியல்பு தந்தையில் இருந்தால் மகனில் கட்டாயமாக இருக்க வேண்டும். அப்படிக் காணப்படாவிட்டால் தாயின் கற்பு நெறியிலே சந்தேகம் ஏற்படக் கூடிய நிலை ஏற்பட, அது பல பிரச்சனைகளுக்கு வித்திடலாம். இது பிழையான தகவல் என்பது இப்போது தெரிய வந்துள்ளது.
ஒரு முக்கிய தகவல், (ஆண்களுக்கு மாத்திரம்) Y நிறமூர்த்தம் சிதைவடைந்ததால் அது தற்பொழுது X நிமூர்த்தத்தின் மூன்றில் ஒரு அளவு பரிமாணத்திலேயே உள்ளதாம். போகிற போக்கைப் பார்த்தால் அது ஒரு காலத்திலே முற்றாகவே இல்லாமல் போகிற சாத்தியம் நிறையவே உண்டு. அப்போ ஆண்களின் கதி? கவலைப் படாதீர்கள். அது ஏற்பட இன்னும் பல தலைமுறைகள் செல்லும். நாம் அப்போ உயிர் வாழ்ந்தால்தானே அந்தக் கவலை!
ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே பிறப்புரிமை அமைப்பிலே உள்ள வேறுபாடு வெறும் ஒரு X நிறமூர்த்தம் மட்டுமே. இந்த ஒரு சிறு வேறுபாடு எத்தகைய பாரிய வித்தியாசங்களுக்குக் காரணமாக அமைகிறது என எண்ணும் போது ஆச்சரியமாயில்லை? வெறும் பாலியல் சம்பந்தமான வேறுபாட்டுடன் நின்று விட்டால் பரவாயில்லையே! வேறு எத்தனை வேறுபாடுகள்!
பாலியல் வேறுபாடுகள் இருவகைப் படும். அவை முதல் இலிங்க இயல்புகள் ( primary sex characters) துணை இலிங்க இயல்புகள் ( secondary sex characters) பெண்ணிலே பிறக்கும் பொழுதே காணப் படும் சூலகம், கருப்பை, யோனி போன்றவை முதல் இலிங்க இயல்புகள். மார்பகம் போன்ற துணை இலிங்க இயல்புகள் பின்னர் விருத்தியுறுபவை. இவற்றுக்குக் காரணமாக அமைபவை சூலகம் சுரக்கின்ற புறோஜெஸ்ரறோன் ( Progesterone) ஈஸ்றோஜென் ( estrogen) போன்ற ஓமோன்கள் (hormones) ஆகும்.
ஒரு நிஜமான கதை சொல்கிறேன். கேட்கிறீர்களா? 1967ஆம் ஆண்டிலே வினிப்பெக் நகரிலே (கனடா) றெயிமர் தம்பதிகளுக்கு ஒத்த இணைகளாக இரு ஆண் குழந்தைகள் பிறந்தனர். குழந்தைகளுடைய ஆண் உறுப்புக்களில் முன்தோல் மூடியபடி காணப் பட்டமையால் முன்தோலை அகற்றும் பொருட்டு வைத்தியர் ஜீன் மேரி என்பவரிடம் சென்றனர்.

தொடர்ச்சி 08ம் பக்கம்...



## பெண் எனும் ....7ம் பக்கத் தொடர்ச்சி...

வைத்தியர் வெறுமனே அறுவைக் கத்தியைப் பாவித்து அகற்றுதற்குப் பதிலாக மின்காந்தமுறையால் எரிக்க முற்பட்டார். விளைவு? ஒரு பிள்ளையினுடைய ஆண் உறுப்பு பஸ்மமாகிவிட்டது.பரிதாபம். கொடுமை இனிமேல்த் தான்.

அமெரிக்காவில் ஒரு அரைக்கிறுக்கனான வைத்தியர் ஜோன் மனி என்பவர் இயற்கைக்கும் ( Nature) ஊட்டத்துக்கும் ( Nurture) இடையே ஏற்படும் இடைத்தாக்கம் பற்றிய ஆய்வில் ஈடுபட்டிருக்கும் பாலியலாய்வாளர் ( sexologist). அவர் தனது ஆய்வுக்காக ஒத்த இணைகளான இரு ஆண்களைத் தேடிக் கொண்டிருந்தார். ஒரு பிள்ளையை ஆணாகவும் மற்றையதைப் பெண்ணாகவும் வளர்க்க திட்டமிட்டிருந்தார். றெயிமர் தம்பதிகள் அவரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர். அவருக்கோ கொள்ளை ஆனந்தம். இப்படியான ஒரு அற்புதமான இணைகள்கிடைத்து விட்டதே. றெயிமர் தம்பதிகளுக்கோ தம் துன்பத்துக்கு ஒரு முடிவு வரவுள்ளதே என்ற நிம்மதி. உடனடியாக ஆண்குறியிழந்த குழந்தையின் விதைகள் அறுவைச் சிகிசை மூலம் அகற்றப் பட்டன. புறூஸ் என்ற அவன் பெயர் பிறெண்டா என மாற்றப் பட்டு பெண்ணாக வளர்க்கப் படுகிறான். பிறெண்டாவுக்கு எத்தனையோ சித்திர வதைகள், அறுவைகள், பெண்ணுக்குரிய ஓமோன் ஊட்டல்கள் ஆனால் என்ன பிரயோசனம். அவள் பெயரில் மாத்திரமே பெண். காரணம்? பெண்ணின் துணை இலிங்க இயல்புகளை அவளுக்கு ஊட்டப் பட்ட ஓமோன்கள் உருவாக்கியிருக்கலாம். ஆனால் அவளின் முதல் இலிங்க இயல்புக்குக் காரணமாகவிருந்த Y நிறமூர்த்தம் அவளின் ஒவ்வொரு உடற்கலத்திலேயும் உள்ளதே. அதனை எப்படி மாற்ற முடியும்? அதனை மாற்றாத வகைக்கும் ஆண் ஆண்தானே! இறுதியில் வைத்தியர் மனி, மனிதனாகி தன் தோல்வியை ஒப்புக் கொள்கிறார்.

பிறெண்டா மீண்டும் ஆண் ஆகிறார். தன் பெயரை டேவிட் என மாற்றி 1990ஆம் ஆண்டிலே ஜேன் எனும் பெண்ணை மணந்து தாம்பத்திய வாழ்க்கை மேற் கொள்கிறார். துர்ரதிட்டம் ஆண்குறியோ, விதையோ இல்லாமலேயே வாழ்கிறார். X நிறமூர்த்தத்திலே ஏறக்குறைய இரண்டாயிரம் பரம்பரை அலகுகள் வரை உள்ளதாகக் கணிக்கப் பட்டுள்ளது. Y இல் ஒரு 20 வரையிலேதான் உள்ளனவாம். X நிறமூர்த்தம் இலிங்கத் தீர்வையுடன் சம்பந்தப் பட்டது என்றும் அதில் உள்ள பரம்பரை அலகுகள் இலிங்கம் இணைந்த இயல்புகளுக்குக் காரணமாய் உள்ளன என்று கூறுகிறார்கள். ஆனால் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைப் பாருங்கள். இவை எவ்விதம் வந்தன. விந்தை!

1. ஆயுட்காலம்: அலுவலக வேலைப் பழு, வீட்டில் இல்லத் தலைவியாய் ஆற்றும் தொடர் பணி எவ்வளவு தான் பெண்ணின் உழைப்பை சக்கை வாங்கினாலும் கூட ஆண்களிலும் பார்க்கப் பெண்களின் சராசரி ஆயுட்காலம் ஐந்து வருடங்கள் வரை கூடுதலாகவே உள்ளது.

இறப்பு இருவகையினால் ஏற்படலாம். முதுமை ஏற்பட்டு இயற்கையாக இறப்பது ஒரு வகை. நோயினாலோ, விபத்தினாலோ இறக்கின்ற அசாதாரண இறப்பு மற்றைய வகை. இரண்டிலுமே பெண்கள் ஆண்களிலும் பார்க்க சிறப்புத் தேர்வு பெறுகிறார்கள். பெண்ணிலும் பார்க்க நாளாந்தம் அடிப்படை அநுசேப இயக்கங்களுக்காக ஆண் செலவழிக்கின்ற சக்தி அதிகமே. இதனால் முதுமை விரைவில் ஏற்பட வாய்ப்புண்டு.

2.நோயியல் : மாலைக்கண், நிறக்குருடு போன்ற இலிங்கம் இணைந்த வியாதிகள் பெரும்பாலும் ஆண்களிலேயை காணப் பட்டாலும், பெண்களிலும் வரக் கூடிய சாத்தியம் குறைந்த அளவிலே உள்ளதே. இவை இலிங்க நிறமூர்த்தங்களில் அமைந்த இயல்புகள் எனவே ஆண்களில் வருவதைப் பெரிது படுத்த முடியாது. ஆனால் இதயக் கோளாறு, பெண்களிலும் பார்க்க ஆண்களில் அதிகமாயிருப்பதற்கு என்ன காரணம்? பெண்களிலே சுரக்கப் படுகின்ற ஈஸ்றோஜென் காரணமோ எனச் சந்தேகம் எழுகிறது. இதயச் சுவருக்கு குருதி வழங்கும் முடியுரு நாடி (coronary artery) அடைபடுமாயின் மாரடைப்பு (Heart attack) ஏற்படும். இந்நாடி பாதிக்கப் பட்ட ஆண்களுக்கு ஈஸ்றோஜென் கொடுக்கப் பட்டபோது இதயச் சுவருக்கு குருதி விநியோகம் சீரடைந்ததை ஆய்வாளர்கள் கண்டுள்ளனர். ஆண்களுக்கு உயிர் கொடுக்கும் வல்லமை கூட பெண்ணினத்திடம் தான் உள்ளதோ?

உளச்சோர்வு (Depression) ஆண்களிலும் பார்க்கப் பெண்களிலே கூடுதலாக உள்ளது என்பதை ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். ஆண்களிலும் மும்மடங்கு அதிகமான பெண்கள் உளச் சோர்வினுக்கு ஆளாகின்றனர். எல்லா ஆதங்கங் களையும் உள்ளத்திலே அடக்கிப் பெறுமை பேணுதலால்த் தான் இந்நிலை என எண்ண வேண்டியுள்ளது. பெண்களிலும் பார்க்கப் பன்மடங்கு அதிகமா செறற்ரோனின் (Serotonin) எனும் இரசாயனப்பதார்த்தத்தை ஆண்களின் மூளை சுரக்கிறதாம். இது உறக்கம், வன்முறை நடத்தை ( Aggressive behaviour) போன்றவற்றுக்குக் காரணமாய் அமையும். ஆண்கள் தம் ஆதங்கங்களை தமது வன்முறை நடத்தையால் போக்கிக் கொள்கின்றமையால் உளச் சோர்வு அதிகம் பீடிப்பதில்லை என எண்ண இடமுண்டு. 3.நிர்ப்பீடனம்: ஆறு வயதளவிலேயே ஆண்களிலும் பாரக்கப் பெண்களுக்குபற்றீறியா, வைறஸ் மற்றும் ஒட்டுண்ணிகளை எதிர்க்க வல்ல பிறபொருள் எதிரிகள் (Antibodies) கூடுதலாக உள்ளன என அண்மைக்கால ஆய்வுகள் ஊர்ஜிதம் செய்துள்ளன. ஆச்சரியம்தான்! ஆனால் இது இயற்கை பெண்களுக்கு ஈந்த நற்பேறு. பெண் என்பவள் கற்பம் தரித்தல், மகப்பேறு, பாலூட்டல், குழந்தை பராமரித்தல் எனும் பணிகளை மேற்கொள்ளும் போது ஏற்படக்கூடிய அழுத்தங்களை எதிர்கொள்வதற்குரிய உடல் நலம் பெறும் பொருட்டே அவளில் பிறபொருள் எதிரிகள் அதிகம் இருக்குமாறு இயற்கை உதவிற்று என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

## தமிழர்களின் இராஜதந்திரம் எது? 3ம் பக்கத் தொடர்ச்சி

ஆனால் நாங்கள் கூறியதையே நீங்களும் சொல்ல வேண்டும் என்று புலிகள் ஒருபோதும் கட்டளையிட்டதில்லை என தமிழத்தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சி ஒன்றின் மற்றுமொரு தலைவர் அன்று கூறியிருந்தார். தங்கள் இயலாமையை புலிகள் மீது சுமத்திவிட்டு கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இருந்துகொண்டு இலகுவான அரசியல் நடத்திக் கொண்டிருந்தார்கள் என்றுதான் அந்த தலைவர் குற்றம்சுமத்தினார். 2009ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான அரசியல் சூழலில் தமிழ்த் தலைமைகள் இந்தியாவையும் அமெரிக்காவையும் சாக்குப்போக்கு கூறி தப்பித் கொள்கின்றனர். அன்று புலிகள் தடுப்பதாக கூறி தப்பியவர்கள் இன்று அமெரிக்காவையும் இந்தியாவையும் சாட்டி தப்பித்துக் கொள்கின்றனர்.

ஆனால் இந்தியாவும் அமெரிக்காவும் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கட்டளையிட்டதாக தெரியவில்லை. இந்தியாவும் அமெரிக்காவும் சொல்கின்றது அதைத்தானே நாங்களும் செய்ய வேண்டும் என்று கூறுவது கூட்டமைப்பின் அரசியல் பலவீனம். ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க வேண்டும் என இந்தியா கூறியது, அமெரிக்கா சொல்லியது என்றும் சர்வதேச விசாரணை தேவையில்லை உள்ளக விசாரணை போதும் என அமெரிக்காவும் இந்தியாவும் கூறுகின்றது நாங்கள் ஏற்கத்தான் வேண்டும் எனவும், சர்வதேச அரசியலுடன் சேர்ந்து போக வேண்டும் என்று நியாயப்படுத்துவதும் ஏற்புடையதல்ல. வேறு நாடுகள் சொல்லிச் செய்வது இராஜதந்திரமும் அல்ல. தலைமைக்குரிய பண்பும் அல்ல. இவ்வாறான அரசியல் நிலைமை தொடருமானால் அந்த மாணவன் கேட்டதுபோல் இன்னும் 50 ஆண்டுகளுக்கு பின்னர் பிறக்கப் போகும் பிள்ளைகளும் இப்படித்தான் கேட்பார்கள்.

## திருடன் எழுதிய கடிதம்!

வாட்ஸ் அப்பில் ஒரு கதை உலா வருகிறது. ஒருவீட்டில் நகை கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. அந்த வீட்டின் உரிமையாளர் போலீஸில் புகார் கொடுக்காமல் இருக்கிறார். அவரிடம் ஏன் புகார் கொடுக்கவில்லை என நண்பர்கள் கேட்கும்போது, அதற்கு அந்த வீட்டின் உரிமையாளர், ”திருடன் ஒருகடிதம் எழுதிவைத்துவிட்டு போயிருக்கிறான். அதில் நீ போலீஸில் புகார் கொடுத்தாலும் பரவாயில்லை. 10 சதவீதம் பொருட்களைதான் திருடியுள்ளேன். எனவே இது குற்றமில்லை!” என எழுதியுள்ளான். அதனால்தான் போலீஸிடம் புகார் கொடுக்கவில்லை.

இது நான் புதிதாக சொல்லவில்லை. வாட்ஸ் அப்பில் வலம் வரும் தகவல். குமாரசாமி தீர்ப்பு இப்படிதான் உலா வருகிறது. அதாவது ஜெயலலிதாவின் உயர் நீதிமன்ற அப்பில் மனுவில் நீதிபதி குமாரசாமி அவரது சொத்து வருவாய்க்கு சில வீதம் மட்டுமே அதிகம் என்பதால் தண்டனையை தள்ளுபடி செய்ததை நீங்கள் அறிவீர்கள்.

**ஸ்ராலின்**


Neuss நகரில்..
ShaRun Saree
all indian traditional dresses
திருமணப் பட்டுப்புடவைகள் பாட்டிசாறிகள் இன்னும் பஞ்சாபிகள்
அனைத்தும் நீங்கள் விரும்பும் ரகத்தில் எம்மிடம்
தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்!
30% முதல் 50% வீதம் வரை
விலைக்கழிவில் பெற்று பயனைடையுங்கள்
August-Macke.Str.79a
41470 Neuss.
02137/92 96 836
0178-35 79 015
0178-35 79 002



# மலவாயிலில் அரிப்பு



**டாக்டர் எம்.கே.முருகானந்தன்**
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
**குடும்பவைத்தியர்**


“சரியான அரிப்பு” என்று சொன்னவரது கை பின் பக்கமாகப் போன வேகத்தைப் பார்த்தபோது வேட்டியைப் பிடுங்கி எறிந்து போட்டுச் சொறிவாரோ எனப் பயம் வந்தது. ஆனால் செய்யவில்லை. “தானைப் புழுத் தொல்லை என்னை விட்டுப் போகுதில்லை” என அலுத்துக் கொண்டார்.
“இவளுக்கு போன மாதம்தான் பூச்சிக் குளிசை குடுத்தனாங்கள். பிறகும் பின் பக்கமாகக் கையைப் போட்டு சொறியிறாள்” இதைச் சொன்னது 4-5 வயது மதிக்கத்தக்க குழந்தையின் தாய்.

இவர்களுக்கெல்லாம் உண்மையில் பூச்சித் தொல்லைதானா?
மலவாயிலில் அரிப்பு எடுத்தால் அது பூச்சித் தொல்லைதான் என்றே பலரும் நம்புகிறார்கள். அது உண்மையா?
மலவாயில் அரிப்பிற்கு அதுவும் முக்கியமாக, இரவில் அரிப்பதற்கு தானைப் புழு (நூல் புழு) என்று பரவலாக சொல்லப்படும் வூசநயன றழசஅ ஒரு காரணமாகும். இருந்த போதும் அது மட்டும் காரணமல்ல. மலவாயில் அரிப்பை மருத்துவத்தில்“சரசவைரள யனை என்பார்கள்.
இது ஒரு அறிகுறி மட்டுமே. இதுவே ஒரு நோயல்ல. பல்வேறு நோய்கள் காரணமாக அங்கு அரிப்பு ஏற்படுவதுண்டு.

கடுமையான அரிப்பு என்பதால் எங்கு நிற்கிறோம் யார் பார்க்கிறார்கள் என்று யோசிக்காது சொறியச் சொல்லும். சொறிந்த பின்னர் 'என்ன மானங்கெட்ட வேலை செய்தேன்' என நாண வைக்கும்.

**இந்த அரிப்பு**

எந்த நேரத்திலும் வரக் கூடுமாயினும் மலம் கழித்த பின்னரும், இரவில் படுக்கைக்குச் செல்லும் நேரங்களிலும் அதிகமாக இருக்கக் கூடும்.
கடுமையான வெக்கை,
அவ்விடத்தில் ஈரலிப்பு,
மலங் கசிதல்,
மனப் பதற்றம் போன்றவை அரிப்பை மோசமாக்கும்.
குழந்தைகளில் இப்பிரச்சனையைக் காண்பது அதிகம். அத்துடன் 40-60 வயதுள்ளவர்களிலும் கூடுதலாகக் காணப்படாலும் எந்த வயதிலும் ஏற்படலாம்.
காரணங்கள் எவை.
பல்வேறு நோய்களால் ஏற்படலாம் என்ற போதும் சரும நோய்களால் ஏற்படுவது அதிகம். எக்சிமா, சோராசிஸ், லைக்கன் பிளேனஸ் போன்ற நோய்கள் சருமத்தின் ஏனைய இடங்களில் தோன்றுவது போலவே மலவாயிலும் வரலாம்.
அதைத் தவிர சருமத்தில் பல காரணங்களால் ஒவ்வாமை அழற்சி ஏற்படுவதுண்டு.
மலவாயில் பகுதியில் ஈரலிப்பு அதிகமாக இருந்தால் அதன் காரணமாக அழற்சி ஏற்படலாம்.
கடுமையாக வியர்ப்பது ஒரு முக்கிய காரணம்.
வயிற்றோட்டம் போன்ற நோய்களால் அல்லது பழக்க தோசத்தால் அடிக்கடி மலங் கழிப்பதால், மலவாயிலில் ஈரலிப்பு ஏற்பட்டு அதனால் அழற்சியும் அரிப்பும் வர வாய்ப்புண்டு.
இயல்பாகவே கடுமையாக வியர்ப்பவர்கள்,
வியர்க்க விறுவிறுக்க வேலை செய்பவர்கள்,
மலவாயிலை அண்டிய பகுதியில் உரோமம் அதிகம் இருப்பவர்களுக்கு அதேபோல வியர்வை ஈரலிப்பால் அழற்சியும் அரிப்பும் ஏற்படும்.
கடுமையான மற்றும் கிருமிஎதிர் சோப் வகைகளை உபயோகிப்பதாலும் அரிப்பு ஏற்பட வாய்ப்புண்டு.
ஈரலிப்புத்தன்மை அதிகமாக இருப்பதால் அழற்சி மாத்திரமின்றி பங்கஸ் தொற்றும் ஏற்படலாம். ஈரலிப்புடன் மடிப்பும் உள்ள இடமாதலால் இறுக்கமாகவும் வெப்பமாகவும் காற்றோட்டமின்றி இருப்பதால் பங்கஸ் தொற்று ஏற்பட வாய்ப்பு அதிகமாகும். இதுவும் அரிப்பை ஏற்படுத்தும்.
நீரிழிவு நோயுள்ளவர்களுக்கு அவ்வாறு பங்கஸ் தொற்று ஏற்படும் வாய்ப்பு அதிகமாகும்.
மலம் இறுக்கமாகப் போவதால் சிலருக்கு குதத்தில் சிறு வெடிப்புகள் தோன்றலாம் Anal fissure எனப்படும் இவை வேதனையை ஏற்படுத்தும். அத்துடன் அரிப்பையும் ஏற்படுத்தலாம்.




**The anus with an anal fissure**

அதே போல சிலருக்கு அவ்விடத்தில் சில தோற்தடிப்புகள் முளை போல வருவதுண்டு. Anal tags என்படும் இவற்றின் இடையே ஈரலிப்பும் மலத் துகள்களும் தேங்குவதால் அரிப்பை ஏற்படுத்தும்.
மூலக் கட்டிகளும் அவ்வாறே மலவாயில் அரிப்பிற்கு காரணமாகலாம்.

சில வகை உணவுகளாலும் ஒரு சிலரில் அரிப்பு ஏற்படும். புளிப்புள்ள பழங்கள், தக்காளி திராட்சை, சுவையூட்டிகள் போன்றவை அரிப்பை ஏற்படுத்தலாம். அதிகளவில் பால், தேநீர், கோப்பி, பியர் போன்ற பானங்களை அருந்துவதாலும் ஏற்படலாம். கடுமையான காரமுள்ள உணவுகளும் சிலருக்கு அரிப்பை ஏற்படுத்துவதுண்டு.

**தானைப் புழு**
இவ்வாறு பல காரணங்கள் இருந்தபோதும் தானைப் புழு என்று பொதுவாகச் சொல்லப்படும் Thread wo rmm ஒரு முக்கிய காரணம் என்பதை மறுக்க முடியாது. இது எந்த வயதிலும் தொற்றக் கூடியது என்ற போதும் குழந்தைகளில் முக்கிய பிரச்சனையாக இருக்கிறது. இங்கிலாந்தைப் பொறுத்த வரையில் 10 குழந்தைகளில் 4 பேர எப்பொழுதாவது தானைப் புழு தொற்றிற்கு இலக்காகி இருப்பார்கள் என கள ஆய்வுகள் சொல்கின்றன.

தொடர்ச்சி 12ம் பக்கம்...



T.T.S.Brothers GmbH&Co.KG

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!
MoneyGram Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

Graphic design Vettimaniy Ltd

கதை சொல்ல ஓர் கதை...




மீரா. குகன்

# பெரியோர் சொல்லை தட்டாதே

ஒரு அழகான சோலைவனத்தில் ஒரு வண்ணாத்திப்பூச்சிக் குடும்பம் வாழ்ந்து வந்தது. அப்பாஇ அம்மாஇ மகள் என மூன்று பேரே அந்த குடும்பத்தில் இருந்தனர். அவர்கள் மூவரும் ஒவ்வொரு நாளும் வித விதமான பூக்களிடம் சென்று தேன் அருந்தி விட்டு தமது வீடு வந்து சேர்வார்கள்.
அப்பா வண்ணாத்திப்பூச்சியின் முக்கிய கட்டளை எது நடந்தாலும் மகள் வண்ணாத்திப்பூச்சியான ஷாலினி அந்த சோலைவனத்தை விட்டு எங்கும் போகக்கூடாது என்பதே .
அந்த சோலைவனத்தில் நிறைய பலவிதமான அழகழகான பூக்கள் பூத்திருந்தன. அவைகள் பல நிறங்களிலும் காணப்பட்டன. ஷாலினி ஒவ்வொருநாளும் ஒவ்வொருவிதமான பூக்களுடன் விளையாடி பொழுதை கழிப்பாள். ஒரு நாள் மல்லிகை பூவில் விளையாடினால் அடுத்த நாள் செவ்வரத்தை பூவை நாடிச் செல்வாள். அவர்களும் ஷாலினியை மிக அன்பாக வரவழைத்து உண்ண தேனும் கொடுத்து அரவணைப்பார்கள். ஆனாலும் ஷாலினிக்கு அந்த சோலைவனத்தில் மட்டும் காலத்தை கழிப்பது சலிப்பாக இருந்தது.
அந்த சோலைவனத்துக்கு அப்பால் ஒரு பூங்கா இருந்தது. அப் பூங்காவிற்கு சிறுவர்கள் வந்து விளையாடுவார்கள். அச் சிறுவர்களின் சிரிப்பு சத்தங்களை கேட்கும் ஷாலினிக்கு அங்கு என்ன நடக்கிறது என்பதை பார்க்க ஒரே ஆவலாக இருக்கும். ஆனாலும் அப்பாவின் சொல்லுக்கு மதிப்பு கொடுத்து தனது ஆவலை அடக்குவாள்.
இவ்வாறு இருக்கையில் ஒரு நாள் ஷாலினிக்கு மிகவும் சலிப்பாக இருந்தது. என்ன விளையாடுவது என்று தெரியாமல் ஒரே அலுப்புடன் யோசனை செய்து கொண்டிருந்தாள். பக்கத்து பூங்காவில் இருந்து சிறுவர்களின் சத்தம் அன்று மிக பெரிதாக கேட்டுக் கொண்டிருந்தது. ஷாலினியால் தனது ஆவலை கட்டுப்படுத்த முடியவில்லை. மெல்ல தனது அழகான செட்டைகளை அடித்துக் கொண்டே பறந்து அந்த பூங்காவினுள் புகுந்தாள்.
அந்த பூங்காவிலும் பல விதமான பூக்கள் பூத்திருந்தன. " அட இந்த அப்பாவுக்கு இந்த பூங்காவைப் பற்றி சொல்ல வேண்டும்" என தீர்மானித்துக் கொண்டிருக்கையில் யாரோ அவளது செட்டையை இழுப்பது போல் இருந்தது. திடுக்கிட்டு நிமிந்து பார்க்கையில் ஒரு குழப்படிக்கார சிறுவன் ஒருவன் ஷாலினியை ஒரு போத்தலினுள் இட்டு அடைப்பதை கண்டாள். அப்பொழுது தான் அப்பா ஏன் தன்னை அவ்வாறு எச்சரித்தாள் என்பதை உணர்ந்துக் கொண்டாள்.
இப்பொழுது என்ன செய்வது? எப்படி இங்கிருந்து தப்பிப்பது? அப்பாவும் அம்மாவும் என்னை காணாது தேடப்போகினமே என ஷாலினி கவலைக் கொண்டாள். அந்த குழப்படிக்கார சிறுவன் போத்தலை எடுத்து மேலும் கீழுமாக குலுக்கிப பார்த்தான். ஷாலினிக்கு தலையே சுற்றுவது போல் இருந்தது. பின்னர் அப்போத்தலை ஒரு கரையில் வைத்து விட்டு மற்றய சிறுவருடன் விளையாட்டை தொடரச் ஓடிச் சென்றான். அவர்கள் கால் பந்தாட்டம் விளையாடிக் கொண்டிருந்தனர். ஷாலினிக்கு தப்பிக்க ஒரு வழியும் புலப்படவில்லை. கண்ணீருடன் பார்த்துக் கொண்டிருக்கையில் ஒரு சிறுவன் அடித்த பந்து நேரே வந்து அப்போத்தலின் மீது விழுந்தது. அதன் மூடி அப்போத்தலிருந்து திறப்பட்டு வேறாக விழுந்தது . ஷாலினி இது தான் தருணம் என உடனே அப்போத்தலின் வாயினூடாக வெளியே வந்து மிக வேகமாக பறந்து சோலைவனத்துக்குள் வந்து சேர்ந்தாள்.
தனது சோலைவனத்துக்குள் வந்த பிறகு தான் அவளுக்கு மூச்சே வந்தது." அப்பாடா எனக்கூறி கொண்டு " திரும்புகையில் அம்மா " ஷாலினி எங்கே போகிருந்தாய்? நான் இவ்வளவு நேரம் உன்னை தேடிக்கொண்டிருந்தேன் " என்று வந்தாள். அம்மாவை கண்டவுடன் ஷாலினி சந்தோஷத்துடன் இறுக கட்டி அணைத்தாள். அன்றிலிருந்து அம்மா அப்பாவின் பேச்சை என்றும் மீறாது கேட்டு நடக்க முடிவும் செய்தாள்.

## துபாய் பெருமையும் சிறுமையும்



எதோ அரபு நாடு துபாய் என்றதும் நமக்கு அங்கு பெற்றோல் உள்ளது! அவர்களுக்கு காசுக்கு என்ன குறை! என்போம். ஆனால் எண்ணெய் வளம் துபாயின் மொத்த வருவாயில், எண்ணெய் வளத்தின் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருவாய் வெறும் 6% தானாம். மற்றவை எல்லாம் சுற்றுலா மற்றும் எஸ்டேட் மூலமாக தான் வருகிறதாம்.

ஒட்டக பந்தயத்திற்கு ரோபோட்கள் பல மில்லியன் டாலர்கள் புரளும் விளையாட்டான ஒட்டக பந்தயத்தில், அவைகளை ஓட்ட ரோபோக்கள் பயன்படுத்தப்படுகிறது. இதில் பயன்படுத்தப்படும் ரோபோக்களின் விலை மட்டும் 300 - 10,000 அமெரிக்க டாலர்கள்.

2,250 டன் தங்கம் 2013ஆம் ஆண்டு மட்டும் 2,250 டன் தங்கத்தை ஒட்டுமொத்தமாக வர்த்தகம் செய்தது துபாய். இது 354 யானைகளின் எடைக்கு சமமாகும்.
வெறும் 13 கார்கள்
1968ஆம் ஆண்டு துபாயில! வெறும் 13 கார்கள் தான் இருந்ததாம். ஆனால், இன்று போக்குவரத்து நெரிசல் பிரச்சனை தாளாமல், இரண்டடுக்கு சாலைகளில் பயணம் செய்து வருகின்றனர்.
கற்பழிக்கப்பட்டவருக்கு சிறை தண்டனை
தொழில் ரீதியாக துபாய்க்கு சென்ற சில பெண்கள் கற்பழிக்கப்பட்டது மட்டுமின்றி, குற்றம் சாட்டியதற்காக தண்டனையும் வழங்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். உதாரணமாக நோர்வே நாட்டை சேர்ந்த மர்டே டேபோராஹ் டேல்வ் என்ற பெண்மணி, தன்னை கற்பழித்ததாக தனது சக ஊழியர் மீது குற்றம்சாட்டியதற்காக, அந்த பெண்மணிக்கு 16 மாதங்கள் சிறை தண்டனை விதிக்கப்பட்டதாம். அட இத்தனை பெருமையாக நினைத்த துபாயை இறுதியில் வாசித்த செய்தி சிறுமையாக்கிவிட்டதே!




KSR BRIDAL ARTIST
தங்கத்தில் வைரம் பதித்ததுபோல் உங்கள் அழகுக்கு
அழகூட்ட எம்மை நாடுங்கள்.
மணப்பெண் அலங்காரம்.
மாலைகள் மற்றும் பூச்செண்டுகள் அனைத்தும் ஓர் இடத்தில்.
KSR BRIDAL
Make up......
Bridal, wedding, puperty, party
Christian Make up......
Threading Eye brow Face.....
Facial..........
hair style
hair straightening
hair curls
Video & Foto
E-mail : kajas.makeup@hotmail.de
facebook : KSR Bridal Artist
KSR BRidal
Tel:02323 39 88 470
contact : 015236649870





# அழகின் சிரிப்பு



- சுருதி

ஷோபனா நிலைக்கண்ணாடி முன் நிற்கின்றாள். தன் ஆடைகளை சரி செய்தவாறே அழகு பார்க்கின்றாள்.
பிறை நிலவிற்குள் செந்நிறப்பொட்டு. முகமெங்கும் மெல்லிதாக அரும்பி நின்று மினுப்புக் காட்டும் வியர்வைத் துளிகள். லிப்ஸ் ஸ்டிக்கில் கூரிய செவ்வாய். நீலநிற சுடிதாரில் அழகாய்த்தான் தெரிந்தாள். சரி! பார்த்தது போதும் என்று தனக்குள் எண்ணியவாறே பின்னால் திரும்புகின்றாள்.

"எப்படிடா செல்லம்! நான் வடிவா இருக்கிறேனா?"

பதில் இல்லை.

ஆடைகளைக் களைந்துவிட்டு அடுத்த உடுப்பை மாட்டுகின்றாள். எல்லாம் புத்தம் புதிதான பளிச்சென்ற விலையுயர்ந்த ஆடைகள்.
"இப்ப எப்படி இருக்கிறேனாம். இது போன தீபாவளிக்கு என்ரை தம்பி சுவிசிலை இருந்து அனுப்பினது!"

அதற்கும் பதில் இல்லை.

ஒரு மழலைச் சிரிப்பு வருகிறது. திரும்பிப் பார்க்கின்றாள். தொட்டிலிற்க்குள் இருந்த குழந்தை பால் போத்திலுடன் விளையாடிக் கொண்டிருக்கிறது. வெளியே ஜன்னலை எட்டிப் பார்க்கின்றாள். வீட்டின் பின்புறம் அவளது மூன்று வயதுப் பெண் - இவளைப் போலவே - ஒரு "பாபி டோலுடன்" தனிமையில் விளையாடிக் கொண்டிருக்கிறாள்.
"பானு! ஓடி வா.. ஓடி வா.. அம்மாவுக்கு இந்த உடுப்பு வடிவா? பாத்துச் சொல்லு!"

அந்தப்பெண் வாயில் விரலை வைத்து சிந்தித்தபடியே அம்மாவைப் பார்க்கின்றாள்.

"பாபி டோல் போல கிடக்கு" என்கின்றாள். பின்னர் அம்மாவின் முகம் கறுத்தது கண்டு, "எனக்குச் சொல்லத் தெரியல்ல" என்கின்றாள். குழந்தையின் வெளிப்படையான உண்மை ஷோபனாவைச் சுடுகிறது. இவ்வளவு நேரம் கஸ்டப்பட்டுப் போட்டதற்கு நல்லாயிருக்குதென்று சொல்லக் கூடாதா? குழந்தைக்கு என்ன தெரியும்?

இவர் வரட்டும். இவர்தான் என்னை அடிக்கடி "வடிவா இருக்கின்றேன்" என்று சொல்கின்றவர். வந்து சொல்லட்டும் உடுப்பு எப்படி இருக்குதென்று!

"எத்தனை உடுப்புகள் வைத்திருக்கின்றேன். அம்மா அப்பா தந்தது அக்கா வாங்கித் தந்தது மாமா தந்தது இவற்றைவிட "இவர்" வாங்கித் தந்தது. இவற்றையெல்லாம் அணிந்து கொண்டு போவதற்கு ஒரு இடமோ விழாவோ அல்லது ஒரு இனசனமோ இங்கு இல்லையே! அயலவர்கள்கூட ஒருபோதும் எங்களை தமது வீட்டுக் கொண்டாட்டங்களுக்கு கூப்பிடுவதில்லை. அவரவர்களுக்கு நிறையவே உறவினர்கள், நண்பர்கள். தொலை தூரத்தில், கண்காணாத தேசத்தில் தொழிலுக்கான வயிற்றுப் பிழைப்பில் காலம் கரைகிறது. வயது போகிறது. முதுமை வருகிறது" அவளுக்குக் கவலை வருகிறது. ஏக்கம் வருகிறது. இண்டைக்கு "இவர்" என்னை வெளியே கூட்டிக் கொண்டு போவதாகச் சொன்னவர். வெளியே என்றால் கடைக்குத்தான். சிலவேளை "றெஸ்ரோரண்டும்" போகலாம். பிள்ளைகளுக்கும் சந்தோசமாக இருக்கும். ஆனால் இன்னமும் காணவில்லையே!

திரும்பவும் உடுப்புகளை மாட்டுகின்றாள். களைகின்றாள். முகத்துக்கு அலங்காரம் செய்கின்றாள். அழிக்கின்றாள். கண்ணாடிக்கு முன் நின்று மேலும் கீழும் பக்கவாட்டிலும் அசைந்து அசைந்து பார்க்கின்றாள். மேலுதடையும் கீழுதடையும் உள் இழுத்து - பின் மின்னல் வெட்டுவது போல் உதடுகளைச் சுழித்து. கண்ணாடிக்குள் தெரிந்த அவள் முகம் "ஸ்மைல் பிளீஸ்" என்கிறது. அந்த பிம்பத்திற்காக "ஒரு ஸ்மைல்". தானே தனக்குள் ரசிக்கின்றாள். புன்முறுவல் செய்கின்றாள். மீண்டும் மீண்டும் தனக்குள் சிரிக்கின்றாள். விலையுயர்ந்த ஆடைகளுடன், புன்முறுவல் ஆத்மார்த்தமாக பெருமிதம் கொள்கிறது.
இத்தோடு பத்தாவது தடவைக்கு மேல் ஆடை அலங்காரம் செய்தாயிற்று. இவருக்கு வேலை. படு "பிஷி". எத்தனை மணிக்கு வருவாரோ?

வெளியே இருள் கவிகிறது. குழந்தைகளுக்கு சாப்பாடு குடுத்து உறங்க வைத்து விட்டாள். கடைசியாகப் போட்டுப் பார்த்து "இதுதான் பேரழகு" என முடிவு செய்த உடுப்புடன் "செற்றி"க்குள் கணவனின் வரவைப் பார்த்தபடி காத்திருக்கின்றாள்.
உறங்கிவிட்டாள். இரவு எட்டு மணி. வெளியே கடும் மழை. அற நனைந்த கோழி போல கணவன் வேலை முடித்து வீடு வருகின்றான்.

"இனி எங்கை போறது. தெரு முழுக்க வெள்ளம்" களைப்புடன் அவன்.
"கடைக்குக் கூட்டிக் கொண்டு போறதெண்டு சொன்னியள்!"

"நாளைக்குப் பார்ப்போமடா!" அவளைக் கட்டி அணைத்து சமாதானம் சொல்கின்றான். முத்தம் பொழிகின்றான். அவள் கண்கள் பனிக்கின்றன. அழகின் சிரிப்பு கண்ணீராக...




உங்கள் அனைத்துக் காப்புறுதிகளுக்கும் அதிக பணம் செலுத்துவதாக உணர்கின்றீர்களா?
உங்களுக்கு உகந்த காப்புறுதி எதுவென்று தெரிந்து அதை நான் உரிய முறையில் செய்துதரக்காத்திருக்கின்றேன்.
அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்.



Thuvaragan Nesapalan
Telefon: 0202/5270-250
Mobil: 0171/6412008
www.rmb3.de
Düsseldorfer Str. 128
42115 Wuppertal

rmb³ Versicherungskonzepte Finanzdienstleistungen
rmb³ ist Partner der Gothaer

Nandy's Catering & Partyservice

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் சுடச்சுட சுவைகுன்றாது உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுவகைகளை தயாரித்து நாம் வழங்குகின்றோம்!

ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!

உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டப நடுப்பகுதிச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளனர்.

Mobil 0173-7424955
Tel:0211 76 91 974

NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf

www.Nandys.de
e.mail:info@nandys.de



9 பக்கத் தொடர்ச்சி...

# மலவாயில் அரிப்பு...



இப்ப பழக்கள் குடலில் வாழ்ந்தாலும் முட்டை இடுவதற்காக மல வாயிலுக்கு வருக்கினறன. முக்கியமாக இரவு அரிப்பிற்கு இது முக்கிய காரணமாகக் கருதலாம். ஒரே குடும்பத்தில் பலருக்கு மலவாயில் அரிப்பு இருக்குமானால் அதற்குக் காரணம் இப்பூச்சிகள்தான் எனக் கருதலாம்.

இதற்கு சிகிச்சையாக குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் ஒரே நேரத்தில் பூச்சி மருந்து கொடுக்க வேண்டும். 2 வாரங்களின் பின்னர் ஒரு முறை மீண்டும் கொடுப்பதும் உதவலாம்.

அவ்வாறு பூச்சி மருந்து கொடுத்த பின்னரும் அரிப்பு இருக்குமானல் அதற்குக் காரணம் வேறு நோய் என்றே கருத வேண்டும். இலகுவான மலப் பரிசோதனை மூலம் பூச்சி இருக்கிறதா என்பதைக் கண்டறியலாம்.

"சுத்திச் சுத்தி சுப்பற்ரை கொல்லைக்குள்ளே" என்று ஊர்புறங்களில் ஒரு வார்த்தையாடல் இருக்கிறது. பலருடைய மலவாயில் கடி அதைப் போன்றதுதான்.

ஏதாவது ஒரு காரணத்தால் ஒருவருக்கு மலவாயில் கடி ஏற்பட்டிருக்கும். சுத்தத்தைப் பேணுவது காணாது, அசுத்தம், அழுக்கு பட்டிருக்கும்..' என்றெல்லாம் எண்ணி அடிக்கடி மல வாயிலைக் கழுவுவார்கள். ஈரலிப்பு அதிகமாவதால் அரிப்பு அதிகரிக்குமே ஒழியக் குறையாது.

கழுவியது காணாது என எண்ணி மருந்து கலந்த சோப் வகைளை உபயோகிப்பார்கள். அதிலுள்ள மருந்து காரணமான ஒவ்வாமையால் அரிப்பு மேலும் அதிகரிக்கும்.

எனவே டெட்டோல் சவ்லோன் போன்றவற்றால் சுத்தம் பண்ண முயல்வார்கள். அவை மென்மையன சருமத்தை உறுத்தி அரிப்பை அதிகரிக்கும்.

எனவே காரணத்தைக் கண்டறியாது சுயவைத்தியத்தில் ஈடுபடுவது நோயை அதிகரிக்குமே ஒழிய தீர்க்காது.

**நீங்கள் செய்யக் கூடியவை**

காரணத்தை கண்டறிய முடியாவிட்டால் நீங்கள் செய்யக் கூடியவை எவை?
சருமத்தை உறுத்தக் கூடிய எந்தப் பொருளையும் உபயோகிக்க வேண்டாம்.
வாசனையூட்டிய சோப், மருந்து கலந்த சோப் போன்றை வேண்டாம். ஒவ்வொரு தடவையும் சோப் போடுவது கூடாது. சோப் போட்டு கழுவிய பின்னர் அதன் எச்சங்கள் சருமத்தில் ஒட்டியிருக்காதவாறு நன்கு அலசிக் கழுவுங்கள். வாசனைத் திரவியங்கள், ஸ்பிரிட், போன்றவற்றைத் தவிருங்கள். அவ்விடத்தில் பவுடர் போடுவதும் கூடாது. நிறம் மணம் அற்ற சோப் வகைகளை உபயோகியுங்கள். மலம் கழித்த பின் கழுவியம் ஈரத்தை ஒற்றி எடுங்கள். கடுமையாத் தேய்க்க வேண்டாம்.

உங்களுக்கு ஏதாவது உணவு வகைகள்தான் அரிப்பை ஏற்படுத்துகிறது என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்தால் அதைத் தவிர்க்கவும். அரிப்பு சிலகாலத்தில் மறைந்துவிடும்.

மலம் கழித்தால் உடனடியாகக் கழுவுங்கள். மலவாயிலால் வாய்வு கழியும்போது அங்கு ஈரலிப்பு ஏற்படுவதாக உணர்ந்தாலும் கழுவுங்கள். அதேபோல படுக்கப் போகும் முன்னரும் ஒரு தடவை கழுவுங்கள்.

கழுவுவதற்கு சுத்தமான நீரையே உபயோகியுங்கள். சோப் ஒவ்வொரு தடவையும் உபயோகிக்க வேண்டியதில்லை. சோப் உபயோகித்தால் அது எத்தகையதாக இருக்க வேண்டும் என்பதை ஏற்கனவே கூறினோம்.

தினமும் குளியுங்கள் குளித்த பின்னர் ஈரத்தை ஒற்றி எடுத்து நீரை அகற்றுங்கள். மென்மையான துணியிலான டவல்களால் ஒற்றி எடுங்கள். கடுமையான அரிப்பும் முடி அதிகமாகவும் உள்ளவர்கள் ஹெயர் டிரையர் கொண்டு உலர்த்துமாறு மேலைநாட்டு மருத்துவர்கள் ஆலோசனை கூறுகிறார்கள். ஆனால் வெப்பமான சூழலில் வாழும் எங்களுக்கு ஈரத்தை நன்கு ஒற்றி எடுத்தாலே சிறிது நேரத்தில் சருமம் உலர்ந்து விடும்.

உள்ளாடைகளை தினமும் மாற்றுங்கள். துவைத்து, நன்கு உலர்ந்த உள்ளாடைகளையே அணியுங்கள். மலம் கழித்து கழுவிய ஈரம் அல்லது குளித்த ஈரம் நன்கு உலர்ந்த பின்னரே உள்ளாடைகளை அணிய வேண்டும்.

அரிப்பு எடுத்தாலும் சொறிவதை கூடியவரை தவிருங்கள். முக்கியமாக நகமுள்ள விரல்களால் சொறிவது கூடாது. நகங்களை குட்டையாக வெட்டி அழுக்கின்றி பராமரிப்பது அவசியம். அரிப்பு கடுமையாக இருந்தால் அதற்கு எதிரான அன்ரிஹிஸ்டமின் மாத்திரை ஒன்றை இரவில் உபயோக்கிக்கலாம். அவில் (Avil) பிரிட்டோன், லொராடடின், செற்றிசின் போன்ற பல இவற்றில் அடங்கும்.

கிறீம் வகைகள் பல உள்ளன. பங்கசுக்கு எதிரானது, அரிப்பை குறைக்கும் ஸ்டிரொயிட் கிறீம், குளிர்மையாகக்கும் கிறீம் எனப் பலவகை. எனினும் மருத்து ஆலோசனை இன்றி கண்ட கிறீம் வகைகளையும் உபயோகிக்க வேண்டாம்.

மருத்துவத்தைப் பொறுத்த வரையில் மலவாயில் அரிப்பிற்கான அடிப்படைக் காரணத்தைக் கண்டு பிடித்து அதற்கான மருந்துகளை உபயோகிக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் பூச்சி மருந்துகளை உபயோகிப்பதில் பயனில்லை.

எந்த மருத்துவமானாலும் மேலே சொன்ன வழிமுறைகளை கடைப்பிடிப்பது அவசியம்.

நன்றி: டாக்டரின் ஹாய் நலமா

# வயதானால் இப்படி வேடங்களில் நடித்தும் கலக்கலாமே!

## கடந்த ஆறுமாதத்தில் வந்த அதிசிறந்த படங்களில் இதுவும் ஒன்று



பிக்கு டோனர் படத்தின் மூலம் விந்தணு தானம் பற்றி கூறிய இயக்குநர் சுஜித் சிர்காரின் மற்றுமொரு உன்னத படைப்பு பிக்கு. தந்தை(அமிதாப்), மகள் (தீபிகா) மற்றும் டிராவல்ஸ் ஓனர் ரானா(இர்பான்) மூவரையும் வைத்து திரைக்கதை அமைத்து அந்த முயற்சியில் மாபெரும் வெற்றி கண்டிருக்கிறார் இயக்குநர். மலச்சிக்கலால் அவதிப்படும் முதிய தந்தையாக வரும் அமிதாப்பிற்கு நிம்மதியாக வயிற்றுக் கழிவினை அகற்றுவது தான் தலையாய கடமை. மகள் பிக்குவிற்கு அலுவலகத்தை கவனித்துக் கொள்வதை விடவும் தந்தையைக் கவனித்துக் கொள்வது பெரும் வேலையாக இருக்கிறது. இந்த நிலையில் சொந்த ஊரான கல்கத்தாவிற்கு செல்ல வேண்டும் என்று அமிதாப் அடம்பிடிக்க, பிக்குவின் பேரைக் கேட்டாலே டாக்ஸி ஓட்டுனர்கள் தெறித்து ஓடுகின்றனர். வேறு வழி இல்லாமல் ட்ராவல்ஸ் ஓனரான இர்பான் தானே அவர்களைக் கல்கத்தாவிற்கு கூட்டிச் செல்கிறார். இம்மூவரின் பயணம் உண்டாக்கும் மாறுதல்களே படத்தின் கதை. பலரும் மூக்கைப் பிடிக்கின்ற ஒரு விஷயத்தைக் கையில் எடுத்து அதனை முகம் சுளிக்காமல் தந்த விதத்தில் ஸ்கோர் செய்திருக்கிறார் இயக்குநர் சுஜித். விமர்சகர்கள் மற்றும் ரசிகர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்ற இந்தப் படம் சுமார் 350 மில்லியன் செலவில் எடுக்கப்பட்டு 100 கோடிக்கும் சற்று அதிகமாகவே வசூல் செய்தது. இந்த ஆண்டில் வெளிவந்த படங்களில் 100 கோடியைத் தொட்ட முதல் படம் என்ற பெயரையும் பாக்ஸ் ஆபிசில் பெற்றது. (வயதானால் இப்படி வேடங்களில் நடித்தும் கலக்கலாமே!)




# விஞ்ஞான மருத்துவத் தமிழ் முன்னோடி

**1847–1872 மேனாட்டு மருத்துவக்கலை – அமெரிக்க மிஷன் ஊழியரின் முயற்சியால் யாழ்ப்பாணத்திலே வளர்க்கப்பட்டது.**

"புத்தம் புதிய கலைகள் பஞ்சபூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும் மெத்த வளருது மேற்கே - அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.." - பாரதி.




Dr Samuel Fisk Green

அன்று பாரதி அறியாத ஒரு சாதனை யாழ்ப்பாணத்திலே, ஈழத்தமிழகத்திலே நடந்து முடிந்ததை பாரதி அறியவில்லை. 1847ஆம் ஆண்டிற்கும் 1872ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்திலே, குறிப்பாக அந்தக் கால் நூற்றாண்டு காலத்தில், புத்தம் புதிய கலைகள், குறிப்பாக, மேனாட்டு மருத்துவக்கலை - அமெரிக்க மிஷன் ஊழியரின் முயற்சியால் யாழ்ப்பாணத்திலே வளர்க்கப்பட்டது. இதற்கு அச்சாணியாக இருந்து செயற்பட்டவர் டாக்டர் சாமுவேல் ஃபிஸ்க் கிறீன் (Dr Samuel Fisk Green) என்ற அமெரிக்க வைத்தியரும் கிறிஸ்தவ மத ஊழியருமாவார். யாழ்ப்பாணத் தமிழரையும் சென்னையில் இருந்த கிறிஸ்தவ மத ஊழியரையும் தவிர, பிறர் இந்த முன்னேற்றத்தைப் பற்றி அறியவில்லை.

அமெரிக்க மிஷன் ஊழியராக யாழ்ப்பாணம் வந்து ஊழியஞ் செய்த அப்பெருமான், மேனாட்டு மருத்துவக் கலையை நம்மக்களிடையே படிப் படியாக அறிமுகப்படுத்தினார். மானிப்பாயிலே மருத்துவ மனை நிறுவி, மருத்துவம் செய்ததுடன் அன்னார் நின்று விடவில்லை. தொடர்ந்து, சுதேசிகளுக்கு மேனாட்டு மருத்துவப் பயிற்சி அளித்தார்.

காலப்போக்கில், தமிழிலே மருத்துவக் கல்வியை ஆரம்பித்தார். ஆங்கில மொழி மூலம் 29 மருத்துவர்களுக்குப் பயிற்சி அளித்தார். தமிழ் மொழி மூலம் 33 மருத்துவர்களுக்குப் பயிற்சி அளித்தார்.தமிழ் மக்களிடையே பணியாற்றச் செல்கிறேன் என அறிந்தபடியால், வருமுன்பே சிலரிடம் ஓரளவு தமிழ் பயின்றார், வந்தபின், கிரமமாகத் தமிழ் பயின்று, மேனாட்டு மருத்துவ நூல்களைத் தமிழாக்கம் செய்வதில் ஆர்வம் கொண்டார். அதனால், தமிழருக்குக் கிடைத்த மருத்துவ நூல்கள் எத்தனை?
கட்டரின் அங்காதிபாதம், சுகரணம் (1857) மோன்செல்ஸ் மாதர் மருத்துவம் (1857) துருவிதரின் இரணவைத்தியம் (1867) கிறேயின் அங்காதிபாரதம் (1872) மனுஷசுகரணம் (1883) வைத்தியாகரம் (1872) கெமிஸ்தம் (1875) வைத்தியம் (1875) கலைச் சொற்கள் இவைதவிர, பெண்கள் குழந்தைகளுக்கான மருத்துவ நூல்களும் பதார்த்த சாரம், சிகிச்சம், மருத்துவம் முதலிய வேறுபல சிறு கைநூல்களும் அவரால் வெளியிடப்பட்டன.

**யாழ்ப்பாணத்திலே தமது மிஷ்னரிச் சேவையை ஸ்திரப்படுத்திய அமெரிக்க மிஷன் மருத்துவ சேவையையும் துவங்குவதென 1819ஆம் ஆண்டிலே தீர்மானித்தது. அதன்படி 1820ஆம் ஆண்டிலே பண்டத்தரிப்பில் முதலாவது மருத்துவ நிலையம் நிறுவப்பட்டது.**
சமயப் பணிக்காகவும் கிறிஸ்தவ மத போதனைக் குமென வந்த மிஷனரிமார் சமூக சேவையும் மனிதாபமான வழிகளையும் தொடர்ந்ததை இது உணர்த்துகிறது. **இறைவனை "மக்களிலே காணவேண்டும்"** என்ற லட்சியத்தை அவர்கள் நடைமுறைப்படுத்தினர்.
மருத்துவச் சேவையை 1820-களிலே துவக்கி வைத்தவர் டாக்டர் ஸ்டேர். அவரைத் தொடர்ந்து பணியாற்ற வந்தவர் டாக்டர் நேதன் உவாட். அவர் தம் சேவைக் காலம் முடிவடைய வந்து பணியை ஏற்றவர் தான் டாக்டர் சாமுவேல் கிறீன். இவர் அமெரிக்க நாட்டிலே, மசச் சூசஸ்ட் மாநிலத்திலே "வூஸ்டர்" என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். நீராவிக் கப்பல் மூலம் வந்த கிறீன், சென்னையில் தங்கி, பின்பு 1847 ஒக்டோபர் ஆறாம் திகதி பருத்தித் துறையை வந்தடைந்தார்.
வட்டுக்கோட்டையிலே தமது பணியை ஆரம்பித்து பின்னர் 1848 இலே மானிப்பாய்க்கு மாற்றம் பெற்றார். அங்குதான் கிறீனின் சாதனை யாவும் இடம்பெற்றன. மருத்துவக் கல்வி, தமிழியற் கல்வி, நூலாக்கம், கலைச் சொல்லாக்கம் இவ்வண்ணம் பல்வேறு முயற்சிகள்.




Dr.green's first medical class

1855ஆம் ஆண்டிலே "கொலரா" நோயால் பலர் பீடிக்கப்பட்டனர். அவர்களுடன் டாக்டர் கிறீனும் ஒருவர். கிறீனின் சகோதரி, அவரை அமெரிக்கா திரும்புமாறு வேண்டிக் கொண்டார்.
ஆனால் அவரோ, மனவுறுதியுடன், "தாம் தொடங்கிய தமிழில் மருத்துவம் தரும் பணியை" இடையிலே நிறுத்திவிட்டுத் திரும்புவதற்கு மறுத்துவிட்டார். "எனது 10 ஆண்டுகளையும் இங்கு நிறைவு செய்யவே நான் விரும்புகிறேன்" என்று முடிவாகக் கூறினார்.

தமது பத்தாண்டுச் சேவை முடிந்தபின் அமெரிக்கா திரும்பி ஓய்வுபெற்ற கிறீன், திருமணஞ் செய்து கொண்டு, ஐந்து ஆண்டுகளின் பின் மீண்டும் யாழ் திரும்பி, தமிழில் மருத்துவங் கற்பித்தல், நூல்கள் எழுதுதல் ஆகிய பணிகளைத் தொடர்ந்தார்.
கல்வி வசதி பெற்ற யாழ்ப்பாணத்தவரின் வாழ்க்கை முறை பற்றி கிறீன் என்ன கருதினார்? 1864ஆம் ஆண்டிலே, அவரே கூறுகின்றார்:

"வேட்டி காற்சட்டையாகவும், சால்வை மேற்சட்டை யாகவும், தலைப்பாகை தொப்பியாகவும், தாவர போசனம் மாமிச போசனம் ஆகவும், குடிசை வீடாகவும் மாறுகின்றன. எனவே, நான் எண்ணுகிறேன்... ஐரோப்பியரின் நடையுடை பாவனைகளைப் பின்பற்றும் இந்துக்களை விடக் கிறிஸ்தவ இந்துக்களையே காண ஆசைப் படுகிறேன்." கிறிஸ்தவராதல் என்றால் தேசியத்தை இழப்பதல்ல என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளார்.

மருத்துவக்கல்வியை மானிப்பாயிலே தமது கல்லூரியில் தமிழில் கற்பதென்று 1855ஆம் ஆண்டிலேயே தீர்மானித்தார்.
அப்போது மாணவர் சிலர் அம்மாற்றத்தை விரும்பவில்லை என உணர்ந்தார். அவ்வேளை யிலே தமது கருத்தை வெளிப்படையாகக் கூறினார்."எதிர்காலத்திலே வைத்தியர்கள் தமது சொந்தக் கிராமங்களிலே சேவையாற்றல் வேண்டும்.
தமது கிராமங்களிலே வாழ்ந்து மக்கட் பணியாற்றலே நோக்கமாகும். அதற்கு இணங்க மறுப்பவர்கள், வேறு தொழிலைத் தேடிக் கொள்ளலாம்.

ஈழத்தில் தமிழில் கற்க இணங்குபவர் மீண்டும் தமது கல்வியைத் தொடரலாம்." இவ்வண்ணம் உறுதியாகக் கூறிய கிறீன், தமிழில் மேனாட்டு மருத்துவதைத் துவங்கிய முன்னோடியாவார். தமிழ்மொழி மூலம் 33 மேனாட்டு வைத்தியரைக் கற்பித்த பின்பே, அவர் அமெரிக்கா திரும்பினார். எனினும், அங்கிருந்தும் தமிழ் நூல்களை வெளியிடும் பணியைத் தொடர்ந்தார். அன்னார் மருத்துவத் தமிழ் எனவும் அறிவியல் தமிழ் முன்னோடி என்றும் தமிழரால் கௌரவிக்கப்படல் தவறில்லையே?
தாம் இறந்தபின் ஒரு நினைவுக்கல் இருக்குமாயின் "தமிழருக்கான மருத்துவ ஊழியர் (Medical Evangelist to the Tamils)" என அதில் பொறிக்குமாறு வேண்டிக் கொண்டார். 1884இல் டாக்டர் கிறீன் அவர்கள் இறந்தபோது அவ்வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டது. வூஸ்டர் கிராம அடக்கசாலையில் அந்நினைவுக்கல் கிறீனை நினைவு படுத்தி இன்றும் நிமிர்ந்து நிற்கின்றது.
மூலம்:
Scientific Tamil Pioneer Dr Samuel Fisk Green written by Ambi (R Ambihaipahar) 1st Edition:Colombo November 1998 தமிழ்ப்பதிவுகள் தமிழ்










# உலகில் முதலாவது தமிழ்ப் பிரதமர்! உருவாகிவிட்டார்!!!

தமிழன் உலகில் எந்த மூலையில் தலை நிமிர்ந்தாலும் உடன் எமக்கும் மகிழ்ச்சி தலைதூக்கும்! ஆம் உலகில் முதல் முறையாக ஒரு தமிழன் பிரதமாரக வந்துள்னார். அவர் பெயர் வீராசாமி நாகமுத்து.

தென்னமரிக்காவில் உள்ள கயானா குடியரசின் புதிய பிரதமராகக் கடந்த மேமாதம் 26ம் திகதி பதவி ஏற்று திரு.மோசஸ் வீராசாமி நாகமுத்து (67) உலகில் பிரதமர் பதவி வகிக்கும் முதலாவது தமிழர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.




பல ஆண்டுகளுக்கு முன்னர் தொழிலாளர் குடும்பமாக கயானாவில் குடியேறியவர்கள் குடும்பத்தில் வந்த இவர், இந்தியாவில் தமிழ்நாட்டில் இருந்து வந்த வம்சாவழித் தமிழராவார். சுமார் 177 ஆண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலேயர்களால் கரும்புத்தோட்டத்தில் கூலிகளாக வேலை செய்ய கயானாவிற்கு கொண்டு செல்லப்பட்டவர்கள் இவரது மூதாதையர்கள்.

கயானாவின் மொத்தசனத் தொகையில் 44 சதவீத ஆட்கள் இந்திய வம்சாவழியினர்.


இவர்களில் தமிழர்கள் 3 சதவீதம் மட்டுமே. முதலில் ஆசிரியராகவும் பின்னர் சட்டத்தரணியாகவும் விளங்கிய இவர் நல்லதொரு எழுத்தாளரும் ஆவார்.

1964 இல் கயானாவில் மக்கள் முன்னேற்றக் கட்சியில் இணைந்து 1992 ஆம் ஆண்டிலிருந்து நாடாளு மன்ற உறுப்பினராகவிருந்த திரு.நாகமுத்து, நான்கு ஜனாதிபதி களின் கீழ் பல்வேறு அமைச்சுப் பதவிகளைத் தொடர்ந்து வகித் துள்ளார். 2011 இல் மாற்றத்துக்கான கயானாவின் கூட்டணிக் கட்சியில் சேர்ந்த, இவர் அதில் போட்டியிட்டு வெற்றிபெற்று இப்போது பிரதமரா கியுள்ளார்.




இதற்குமுன்னர் எந்த ஒரு நாட்டிலும், பிரதமராக ஒரு தமிழர் இருந்ததில்லை.

சிங்கப்பூர் குடியரசின் தலைவராக எஸ் ஆர்.நாதன் இருந்துள்ளார். சிலர் துணைப்பிரதமராக இருந்துள்ளனர்.
அமைச்சர்களாக இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், பிஜி, தென்னாபிரிக்கா, மொரிஷியஸ், ஆகியநாடுகளில் தமிழர்கள் பலர் இருந்துள்ளனர். நன்றி: தமிழர் தகவல் -கனடா.




சிரித்திரனில் அன்று வந்த நகைச்சுவை ஒன்று அது இன்றும் பொருந்தும்

NEW ASIA FASHIONS
http://www.newasiafashions.com
இல்லங்களில் இருந்துகொண்டே இணையத்தில் இணையற்ற சேலைகளைத் தெரிவு செய்யலாம்! (EU) எம்மிடம் பெற்றவர்கள் பெருமகிழ்வு கொள்கிறார்கள்!!



- Contact Numbers
- UK -00442035811020
- 00447448179777
- Swiss- 0041763801073
- Email-info@newasiafashions.com

307 Mitcham Road
Tooting-London
SW17 9JQ / U.K

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது விழா ஒழுங்கமைப்பு எம்மிடம் நிச்சயிக்கப்படுகின்றது!

KS Services




அழைப்பிதழ்கள் முதல் திருமணத்தில் அன்பளிப்பு வழங்கும் வரை மணவறை அலங்காரம் மங்கலவாத்தியம் ஒளி ஒலி உணவு சிற்றூண்டி டீஜே (DJ) என அனைத்தும் நம்வசம்

KS Services

Tel. 0049 21025300247 Mobil. 004917610247194 / 00491722192035

KS Services
Berliner Str. 49- 40880 Ratingen

E-Mail. info@ksservices.de
Web. www.ksservices.de



# உணவுக்கழிவில் இருந்து கண்ணாடி உருவாக்கம்!

ஒரு நாட்டின் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் பொருளாதாரத்தையும் நிர்ணயிப்பதில் அந்த நாட்டின் கனிம வளம்பெரும்பங்கு வகிக்கின்றது. இன்றும் உலகத்தில் பல போர்கள், கனிமவளத்தின் எரிவாயு பேரிலே நடக்கின்றன. பூமிக்குள் புதைந்துக்கிடக்கும் இந்த வளங்களைத்தோண்டி எடுத்து அவற்றை உபயோக நிலைக்கு கொண்டு வரும் அகழ்ந்து எடுத்தல்பணி மிகுந்த பொருட்செலவுடன், ஆபத்தான சூழ்நிலையில் மேற்கொள்ள படுகின்றது.

நமது தேவைகளுக்காக சுரங்கங்கள் அமைத்து மேற்கொள்ளப்படும் அகழ்ந்து எடுத்தல்பணி, பூமியின்மீது நீங்கா வடுக்களை விட்டுச்செல்வதோடு நில்லாமல் பூமியின் சமநிலையையே பாதிக்கின்றது.

கடந்த ஆண்டு வரை விளைவிக்கவோ, ஆராய்ச்சிக் கூடங்களில் உருவாக்கவோ, முடியாத உலோகங்களுக்கு அகழ்த்து எடுத்தல்மட்டுமே ஒரே தீர்வு. காடுகளை அழித்து நமது தேவையை பூர்த்தி செய்து கொண்டு இருக்கின்றோம். ஆனால் இன்று Dr.Ivan Carnejo என்னும் பொறியாளர் நமது தேவைக்கான கனிமங்களை நாமே உருவாக்கலாம் அதுவும் உணவுக்கழிவுகளில் இருந்து உருவாக்கலாம், என்று முன்மொழிந்துள்ளார்.

அதன் முதற்கட்டமாக வாழைப்பழத்தோல், முட்டை ஓடுகள், மற்றும் அரிசி உமி களைப் பதப்படுத்தி, அவற்றில் இருந்து மணச்சத்து (Silica) மற்றும் oxides வேதி பொருட்களை பிரித்தெடுத்து, அவற்றை குறிப்பிட்ட பக்குவத்தில் சமைத்து கண்ணாடிப் பொருள் உருவாக்கியுள்ளார்.

Colorado School of Mines ல் உள்ள ஆராய்ச்சியாளர்கள் உலகில் வீணாகும் உணவுக்கழிவுகளில் அளவு இன்று 36 மில்லியன் தொன்டன் சிலிகா தேவையை பூர்த்தி செய்யும் என்றும் நம்பிக்கைத் தெரிவித்துள்ளனர்.

**சுவீகா பிரதாப்**
**(இங்கிலாந்து)**



இந்த ஆராய்ச்சி உணவுக்கழிவுகளின் மற்றும்மொரு உபயோகத்தையும், நமது இயற்கை வளங்களை சிதைக்காமல், நமது கனிம தேவைகளை பூர்த்தி செய்யும் வழிக்கான கதவுகளையும் திறந்துள்ளது.

# இறைச்சி சாப்பிடுவதை நிறுத்தினால், உயிரே போய்விடுமா?



இறைச்சி இல்லாத உணவில்லையெனில் இறந்துவிடும் அளவிற்கு துயரம் கொள்ளும் நபர்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள் என்னையும் சேர்த்து. சாதாரணமாக வாரத்தில் ஓரிரு முறை இறைச்சி உணவை சாப்பிடுவது பெரும்பாலான வீடுகளில் வழக்கமாக இருக்கும்.

உணவுக் கட்டுப்பாடு என்று வந்தவுடன், முதலில் அனைவரும் ஒதுக்க சொல்லும் உணவு, இறைச்சி தான். சிக்கன், மட்டன், மாட்டிறைச்சி என எதையும் கையில் தொடவேக் கூடாது என்று தடைச்சட்டம் பிறப்பிக்கப்படும்.
ஆனால், நீங்கள் உணவுக் கட்டுப்பாடின் காரணமாகவோ அல்லது திடீரென புதுவருட கொள்கை, அது, இது என இறைச்சியை சாப்பிடுவதை நிறுத்தும் போது உங்கள் உடலில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து நீங்கள் அறிந்துக் கொள்ள வேண்டும் அல்லவா....
உடல் எடைக் குறையும் நீங்கள் இறைச்சி உணவைத் தவிர்க்கும் போது, முதலில் ஏற்படும் மாற்றம் உடல் எடைக் குறைவு தான். குறைந்தது 3



-4கிலோ வரை உடல் எடையில் மாற்றம் ஏற்படும்.
அதற்கென்று, சைவ உணவுகளை மூக்குப்பிடிக்க சாப்பிட்டுவிட்டு, ”எங்க ஒன்னும் மாறலையே.. குறையலையே?” என்றுக் கேட்டால் அதற்கு கம்பெனி பொறுப்பாகாது.

இதய நோய்களில் இருந்து பாதுகாப்பு சைவம், அசைவம் சாப்பிடுவோர் மத்தியில், அன்றாட வாழ்க்கைமுறையை வைத்து எடுக்கப்பட்ட ஆய்வில், சைவம் சாப்பிடும் நபர்களுக்கு 24% இதய நோய்களின் பாதிப்புகள் குறைவாக தான் ஏற்படுவதாக கூறப்படுகிறது.

தொடர்ச்சி 20 ம் பக்கம்


**Laxmi Travels**

**லூர்ஸ் மாதா கோவிலுக்கு அழைத்துச் செல்கின்றோம்.**



Dortmund நகரில் இருந்து பாரீஸ் லூர்ஸ் மாதா திருத்தலத்திற்கு (சிறிய பெரிய வான்கள் ) அழைத்துச் செல்கின்றோம். மேலதிக விபரம் பெற எம்மை அழையுங்கள். (உணவு தங்குமிட வசதிகள் உட்பட )

பாவித்த Car விற்பனையாளர்கள் நாம். எம்மிடம் Car வாங்குபவர்களுக்கு Schusa இருந்தாலும் அல்லது Hartz 4 இல் இருந்தாலும் வங்கிக்கடன் பெற்றுத்தரப்படும் தனிப்பட கடனுக்கும் உதவுவோம்.
Bala.tt334@gmail.com
பாலா: 0151 7510 11 91 சகுந்தலா: 0170 50 85 653 ---0202 244 3104





கோடைக்கால விடுமுறை 2015
எம்மிடம் விமானப் பயணச் சீட்டுகள்களைப் பெற்று
பயணித்த வாடிக்கையாளர்களுக்கு
எமது நன்றிகள்!
உங்கள் பயணங்களுக்கு என்றும் எம்மை நாடுங்கள்.

இன்றைய நாளில் விலைகளையும்
உடனுக்குடன் எமது இணையத்தளத்தில் காணலாம்.

www lucky-fly.de
Tel: 0234 239 90 32 Handy:0179 14 84 892
Lucky Fly Allee Str.38-40 a 44793 Bochum

# தனிமையை இனிமையாக்க சில வழிகள்!





உன்னை உனக்குப் பிடிக்காவிட்டால் தான் தனிமை பிடிக்காமல் போகும்.

**சேவியர்**

சிலருக்கு தனிமை என்பது வரம். எனவே தனிமையைத் தேடிப் பயணங்கள் செல்வார்கள். மலைகளின் உச்சிக்கோ. யாருமற்ற வனாந்தரத்தின் புரட்டப்படாத பக்கங்களுக்கோ. நதிகளின் பிரதேசத் துக்கோ செல்வார்கள்.

அந்தத் தனிமை அவர்களுக்கு புத்துணர்ச்சி ஊட்டி அனுப்பி வைக்கும். உண்மையில் அவர்கள் தனிமையில் இருப்பதில்லை, கூட்டத்திலிருந்து தனியே பிரிந்து இயற்கையின் மடியில் ஓய்வெடுக்கின்றனர்.

இன்னும் சிலருக்கு தனிமை சாபம். கொஞ்ச நேரம் தனியே விட்டாலே என்ன செய்வதென்று தெரியாமல் பதட்டப்படுவார்கள். மக்கள் கூட்டத்தில் இருக்க வேண்டும் என பரபரப்பார்கள். அவர்களுக்கு மற்றவர்களுடைய அருகாமை தான் புத்துணர்ச்சியைக் கொடுக்கும்.

இன்னும் சிலர் எந்தப் பக்கமும் சாயாமல் இருப்பார்கள். தனிமையாய் இருந்தால் தனிமையை ரசித்துக் கொள்வார்கள். கூட்டத்தில் இருந்தால் அந்த கணத்தை நேசிப்பார்கள்.

வாழ்க்கை எந்திரமாகி விட்டது. அலுவலகப் பணிகளுக்கான ஓடல்களில் பெரும்பாலான நேரம் முடிந்து விடும். குடும்பத்தினருக்கான ஓட்டம் மீதி நேரத்தை அபகரித்துவிடும். எஞ்சியிருக்கும் நேரத்தை அரைகுறையாய் கிடைக்கும் தூக்கம் எடுத்துக் கொள்ளும். இதில் நம்மோடு நாமே இருக்கும் தனிமை நிமிடங்கள் கிடைப்பதே அபூர்வம்.

எது எப்படியோ, விரும்புகிறோமோ இல்லையோ, தனிமையில் இருக்கும் சந்தர்ப்பங்கள் நம்மை அவ்வப்போது சந்தித்துக் கொண்டே தான் இருக்கிறது. இந்த தனிமையான கணங்களை இனிமையான கணங்களாய் மாற்றுவது நம் கையில் தான் இருக்கிறது.

தனிமையில் இருக்கையில் நீ உன்னோடு இருக்கிறாய். உன்னை உனக்குப் பிடிக்காவிட்டால் தான் தனிமை பிடிக்காமல் போகும். உன்னை உனக்குப் பிடிக்குமெனில் தனிமை என்பது வரவேற்புக்குரியது.

நாள் முழுக்க ஏதேதோ விஷயங்களுக்காக ஓடிய நம்மை நமக்கென இயங்க வைப்பது தனிமை தான். அத்தகைய தனிமை நிமிடங்களில் என்னென்ன செய்யலாம்.

1. எழுதலாம். நமக்குத் தோன்றும் விஷயங்கள், நமது அனுபவங்கள், அல்லது நமது கற்பனைகள் நமது ரகசிய மனக் கிடங்கு என ஏதோ ஒரு விஷயத்தை எழுதலாம். ஒரு பிளாக் ஆரம்பிப்பதோ, ஒரு டைரி வாங்குவதோ என எழுத்தின் தளம் எதுவாகவும் இருக்கலாம். எழுதுவது நமது மனதை மகிழ்வாக்கும், இலகுவாக்கும் கூடவே தனிமையை இனிமையாக்கும்.

2. "யாருமே இல்லேன்னா இதைச் செய்வேன்" என எல்லாருக்குள்ளும் ஒரு ஏக்கம் இருக்கும். அந்த விஷயத்தைச் செய்யுங்கள். அது கன்னா பின்னாவென நடனமாடுவதானாலும் சரி, சத்தமாய்ப் பாடுவதானாலும் சரி, ஒரு படம் பார்ப்பதானாலும் சரி, உங்கள் வீட்டுச் செல்லப் பிராணியுடன் உருண்டு புரள்வதானாலும் சரி எது உங்கள் ஏக்கமோ அதை நிறைவேற்றுங்கள்.

3. தனிமை தந்திருக்கும் சுதந்திரத்தை உணருங்கள். இது உங்களுக்கான நேரம், உங்களுக்கான தருணம். இங்கே நீங்கள் தான் பாஸ், நீங்கள் தான் வேலையா பவுலர், நீங்கள் தான் பேட்ஸ்மேன், நீங்கள் தான் அம்பயர் ஏன் நீங்கள் தான் பார்வையாளர்கள். எனவே உங்கள் ரசனையை செயல்படுத்துங்கள்.

4. தனிமையில் இருக்கும் போது நீங்கள் யாருடனெல்லாம் பகையாய் இருக்கிறீர்கள், வெறுப்பாய் இருக்கிறீர்கள் என யோசித்துப் பாருங்கள். நீண்ட நாட்களாகப் பேசாமலிருக்கும் நண்பர்களை நினையுங்கள் அந்த பெயர்களை எழுதி வையுங்கள். ஒவ்வொருவராய் அழையுங்கள். "சும்மா தான் பேசி ரொம்ப நாளாச்சு" என இரண்டு நிமிடம் பேசுங்கள். சொல்ல முடியாத மகிழ்ச்சியை உணர்வீர்கள்.

5. உங்களுடைய நண்பர்கள் பட்டியலில், அல்லது உறவினர் பட்டியலில் ஒரு சில பெயர்கள் உங்களிடம் எப்போதும் இருக்கும். "இவனை மன்னிக்கவே கூடாது" எனும் செய்தியுடன். அதில் ஒரு நபருக்கு போன் பண்ணுங்கள். தவறு உங்கள் பக்கம் இல்லாவிட்டாலும் கூட ஒரு மன்னிப்பைக் கேளுங்கள். மனித நேயத்தின் அற்புத தருணத்தை உணர்வீர்கள்.

தொடர்ச்சி 17 ம் பக்கம்....

Dortmund நகரில்
Asia Afro & Europäische Lebenamittel Einzelhandel
TKS BEST FOODS
உடனுக்கு உடன் இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறிவகைகள் கடல் உணவு வகைகள்,மற்றும் மளிகைப் பொருட்களுக்கும் எம்மை நாடுங்கள்
Öffnungzeiten 9:00-20.00
Son & feiertage geschlossen
www.tks- bestfoods.de




tks-bestfoods@web.de
Rheinische str.79 - 44137 Dortmund
Tel: 0231 950 46 881 Fax:0231 950 46 882








சேவியர்

6. உங்கள் வாழ்க்கைத் துணைக்கு ஒரு காதல் கடிதம் எழுதுங்கள். திருமணம் ஆகவில்லையேல் உங்கள் பெற்றோருக்கு ஒரு அன்பின் மடல் எழுதுங்கள். எழுதும்போது அவர்கள் உங்களுக்காய் செய்த நல்ல விஷயங்கள் மட்டுமே மனதில் வரிசையாய் வரட்டும். உங்கள் இதயத்தின் அன்பைப் பிழிந்து வடிக்கும் அந்தக் கடிதம் உங்களுடைய வாழ்க்கையில் ஒரு மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டு வரும்.

7. தனிமை நேரத்தை உங்களுடைய திட்டமிடலுக்குப் பயன்படுத்துங்கள். அல்லது உங்களுடைய பழைய பொருட் களையெல்லாம் புரட்டிப் பார்த்து அடுக்கி வைப்பதில் செலவிடுங்கள். பழைய புகைப்படங்களையெல்லாம் பார்த்து அந்தக் காலத்துக்குச் சென்று வாருங்கள். அந்த நினைவுகள் நம்மை ஆனந்தத்தின் எல்லைக்கே அழைத்துச் செல்லும்.

8. ஒரு புதிய கலையைக் கற்றுக் கொள்ள அந்த நேரத்தைச் செலவிடலாம். அது ஒரு புதிர் விளையாட்டைக் கற்றுக் கொள்வதானாலும் சரி, ஒரு இசைக்கருவியை கற்றுக் கொள்வதானாலும் சரி, அல்லது கார்ட்டூன் வரையக் கற்றுக் கொள்வதானாலும் சரி. ஏதோ ஒரு புதிய விஷயத்தைக் கற்றுக் கொள்ளத் தொடங்குவது உங்களுக்கு உற்சாகமூட்டும்.

9. தியானம் செய்யலாம். தனிமை கிடைப்பது தியானத்துக்கு ஜாக்பாட் போல. செல்போனை சைலன்ட் மோடில் போட்டு விட்டு மனதை ஒருமுகப்படுத்தி தியானத்தில் ஈடுபடலாம். அல்லது வெறுமனே பகல் கனவுக்குள் நுழைந்து மனதை இலகுவாக்கலாம்.

10. வாசிக்கலாம். ஒரு நல்ல நூலை வாசிப்பது உங்களுடைய தனிமைக்குத் துணை. கூடவே உங்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான பல விஷயங்களையும் நீங்கள் கற்றுக் கொள்ளலாம். எந்த புத்தகம் என்றில்லை, எது உங்களுக்குப் பயனளிக்குமோ அதைப் படியுங்கள்.

தனிமையை இனிமையாக்க ஆயிரம் வழிகள் உண்டு. அதை அர்த்தமுள்ளதாகவும், இனிமையுள்ளதாகவும், பயனுள்ளதாகவும் மாற்றவும் ஏராளம் வழிகள் உண்டு. அவற்றில் ஒரு பத்து சிந்தனைகளே இவை. முயற்சி செய்து பாருங்கள்.

## அட அங்கேயும் நிலமை அதுதானா?

வலது கையால் எதையும் கொடுக்க வேண்டும் என்பது நமது செண்டிமெண்ட். இனம், மதம், ஜாதி எல்லாவற்றையும் தாண்டி இந்த செண்டிமெண்ட் உலவுகிறது. இந்த செண்டிமெண்ட் அப்படியே இருக்கிறது தாய்லாந்தில். வலது உள்ளங்கையில் பொருளை வைத்து நீட்ட வேண்டும். இடது கை வலது கை மணிக்கட்டைப் பிடித்திருக்க வேண்டும். இப்படிக் கொடுத்தால் தான் கொடுப்பவருக்கும் நல்லது, வாங்குபவருக்கும் பயன் தரும். இது அவர்களுடைய செண்டிமெண்ட்.

உள்ளங்கை அரிக்குது. இன்னிக்கு நல்ல காசு வரும்போல இருக்கு. என நாம் சொல்வதைப் போலவே துருக்கியில் உள்ளவர்களும் சொல்கிறார்கள். அவர்களுடைய செண்டிமெண்ட் படி, இடது கையில் அரித்தால் பணம் வரும். கொஞ்சம் இடம் மாறி வலது கையில் அரித்தால் அவ்வளவு தான். உள்ளதும் போய்விடுமாம் !

“பெரியவங்க இருக்கும்போ கால்மேல கால் போடாதே” என முந்தைய தலைமுறையினர் சொல்வார்கள். அது எதிரே இருப்பவர்களுக்குச் செய்யும் அவமரியாதை என்பது அவர்களுடைய எண்ணம். இதே செண்டிமெண்ட் தாய்லாந்திலும் உண்டு. கால் மேல் கால் போட்டால் காலால் அடுத்தவரைச் காலால் சுட்டிக் காட்டுவது போல இருக்குமாம். அது அடுத்தவருக்குப் பெருத்த அவமானமாகிவிடும். எனவே கால் மேல கால் போடக் கூடாது என்பது அவர்களுடைய விளக்கம்.

“பூனை குறுக்கே வந்துச்சா வௌங்கினாப்ல தான் “ என்பது நம்ம ஊர் செண்டிமெண்ட் மட்டுமல்ல. அமெரிக்காவிலும் ஒரு காலத்தில் இந்த செண்டிமெண்ட் கொடிகட்டிப் பறந்திருக்கிறது. அதுவும் கறுப்புப் பூனை வந்தால் அதோ கதி தான். அந்த காரியத்தையே அப்படியே விட்டு விடுவார்களாம். காரணம், அவர்களைப் பொறுத்தவரை கறுப்புப் பூனை என்பது சாத்தானின் குறியீடு !

கிராமப் புறங்களில் ஒரு நம்பிக்கை உண்டு. ஏதாச்சும் பை கொடுத்தால் வெறுமனே கொடுக்க மாட்டார்கள். வெற்றுப் பை, வெற்றுப் பாத்திரம் எல்லாம் கொடுக்கக் கூடாது என்பது செண்டிமெண்ட். இது ஹவாய் தீவு மக்களிடையேயும் பிரபலமாய் இருக்கிறது. காசு ஏதும் இல்லாமல் பையைக் கொடுத்தால், அதில் காசே தங்காதாம்.

ராத்திரி நகம் வெட்டக் கூடாது என்பதும் நம்ம ஊரில் கேட்டுப் பழகியது தான். இதே செண்டிமெண்ட் கொரியர்களிடமும் உண்டு. இரவில் நகம் வெட்டினால் அந்த நகத்தை எலிகள் வந்து தின்று விடுமாம். அப்படித் தின்றால் உங்கள் ஆன்மாவை அது அபகரித்துக் கொள்ளுமாம். அடேங்கப்பா !

தமிழ் –யேர்மன்
Nietharshan Magendiran
Vereidigter Dolmetscher und übersetzer
Tamil-Deutsch
Möbil: + 49 176 311 328 73
Email: nietharshan.magendiran@gmail.com



# யேர்மனியில் 102 வயதில் டாக்ரேட் பட்டம் பெற்று உலகில் சாதனை படைத்த பெண்மணி!





மருத்துவக் கல்வி மாணவர்களுடன் மூதாட்டி

கல்விக்கு வயது ஒரு தடையயல்ல! என 102 வயதில் யேர்மனியை சேர்ந்த மூதாட்டி ஒருவர் மருத்துவத் துறையில் டாக்ரேட் பட்டம் பெற்று நிரூபித்துள்ளார். நாஜிக்களின் இனவெறியால் இழந்த தனது கனவை, 77 வருடத்திற்கு பின் வைராக்யத்துடன் மீட்டுள்ளார்.

ஜெர்மனியைச் சேர்ந்த இன்ஜெபோர்க் ரபோபோர்ட் 1938 ஆம் ஆண்டு தொண்டை அழற்சி நோயில் டாக்டரேட் பட்டம் பெறும் கனவுடன் தீவிரமாக படித்து வந்தார். ஆனால் அவர் அம்மா ஒரு யூதர் என்பதால் அவரது தேர்வு படிவங்களை நாஜி அரசு நிராகரித்தது. நாஜிக்களின் இனவெறிக்கு தனது கனவை பலி கொடுத்த அவர் பிறந்த குழந்தைகளுக்கான மருத்துவத் துறையில் பணியாற்றி தனது மருத்துவ வாழ்க்கையைத் தொடர்ந்தார்.

இந்நிலையில், கடந்த வருடம் ஹார்வர்டு பல்கலைகழகத்தில் மருத்துவத்துறை பேராசிரியராக உள்ள அவரது மகன் டாம், அவர் படித்த ஹாம்பர்க் பல்கலைகழகத்தை தொடர்பு கொண்டு தன் தாய்க்கு வழங்க வேண்டிய டாக்டரேட் பட்டம் குறித்து பரிசீலனை செய்யுமாறு கேட்டுக் கொண்டார். அவர்கள் ஒரு வாய் வழித் தேர்வு நடத்தி, ரபோபோர்ட் அதில் தேர்ச்சி பெற்றால் அவருக்கு டாக்டரேட் பட்டம் வழங்குவதாக கூறினர்.

இதையடுத்து, 30 வருடங்களுக்கு முன்னரே மருத்துவப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற 102 வயதாகும் ரபோபோர்ட் தொண்டை அழற்சி நோய் குறித்து மீண்டும் தீவிரமாக படித்தார். அவரது வீட்டிலேயே வாய்வழித்தேர்வு நடைபெற்றது. தேர்வில் அவரிடம் கேள்விகள் கேட்ட (the University Clinic in Hamburg-Eppendorf) ஹாம்பர்க் பல்கலைகழகத்தின் வேந்தரான க்ரோமஸ் "இது ஒரு சிறப்பான தேர்வு. மருத்துவத்துறையில் அவருடைய அறிவுத்திறன் என்னை வியக்க வைக்கிறது." என்றார்.

வாய் வழித் தேர்வில் அவர் தேறியதையடுத்து கடந்த 9-ம் தேதி நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு பட்டம் பெற்றார். இதன் மூலம் உலகிலேயே அதிக வயதில் டாக்டர் பட்டம் பெற்ற ஒரே நபர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

நாஜிக்களின் இனவெறியால் தொலைந்த கனவை 102 வயதில் டாக்டரேட் பட்டம் பெற்று மீட்ட யூத மூதாட்டி இவர்.


ஸ்ரீ விநாயகா ஜோதிட நிலையம்
முகநாடி கைரேகை ஜோதிடர்
அனுபவமுள்ள எண்கணிப்பு ஜாதக ஜோதிடர்
உலகப் புகழ் பெற்ற இந்தியா யோதிடர்
பண்டித் அபிறாம்
அனைத்து மதத்தினரும் வரலாம்
ஆலோசனைகள் மற்றும் தீர்வுகள்
உறவு சிக்கல்கள் • தவறாக புரிந்து கொள்ளல் • நிதி சிக்கல்கள்
மன அழுத்தம் • காதல் பிரச்சனைகள் • வேலை தேடுதல்
குடும்ப வாதங்கள் • குழந்தைகள் இல்லாத தம்பதிகள் • வாகனப் பொருத்தம்
மந்திரம், தந்திரம், காத்துக்கறுப்பு, பீடைபிசாசு என்ன இருந்தாலும் நிவாரணம் செய்து கொடுக்கப்படும்
தங்களுடைய துன்பங்களும், தொல்லைகளும் தீரவதற்கும், உங்கள் சந்தேகங்களை தீர்ப்பதற்கும் நாங்கள் தகுந்த ஆலோசனைகளை
பேசும் மொழிகள்: தமிழ், கிந்தி மற்றும் ஆங்கிலம்
கிழமை 7 நாட்களும் 09:30 முதல் 20:00 மணி வரை வரலாம்
0152-14844789
Rheinischestr. 80
44137 Dortmund

KAILAS
Fisch- Feinkost
டோட்மூண்ட் நகரில்
என்றுமில்லாத வகையில் மிகக் குறைந்த விலையில் மரக்கறிகள்!
Offnungszeiten:
திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 9.00 முதல்
மாலை 20.00 மணி வரை
ஒவ்வொரு வியாழக்கிழமையும் இலங்கை இந்திய மீன்கள் உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்!
தரமான ஆட்டு இறைச்சி எம்மிடம் கிடைக்கும்!
Tel:0231 137 433 95
Handy:,0163 47 60 237
web.kailas-fisch.de
email:info@kailas-fisch.de
Adler Str.05
44137 Dortmund

துரித பணமாற்றுச் சேவை
அதிகூடிய பெறுமதியில் தாயகத்தில் பணம் பெற எம்மை நாடுங்கள்!
VALUTRANS MONEY TRANSFER
NSB National Savings Bank · HNB · Bank of Ceylon BOC · instant cash
இலங்கையில் மேற்படி வங்கிகளில் பணம் பெறலாம் இங்கு வளங்கும் பணத்திற்கு







# “அச்சுப் புத்தகங்கள், பத்திரிகைகள் வீழ்ச்சி கண்கூடு. 2020ல் அச்சுப் பதிப்புக்கள் கொஞ்சமே இருக்கும்.

பிரபல எழுத்தாளர்: –ஜி.பி.டெய்லர்.

ஒவ்வொரு புதிய தொழில் நுட்பம் வரும்போதும் பழைய தொழில் நுட்பத்துக்கு அச்சுறுத்தல் எழும் என்பதை மறுக்க முடியாது. “ஊருக்கு போனதும் மறக்காம கடுதாசி போடுப்பா” என்று இப்போது யாராவது சொல்கிறார்களா ? அவர்களுக்கு செல்போனும், எஸ்.எம்.எஸ் ம் பக்க துணையாய் இருக்கின்றன.

பிறந்தநாள், தீபாவளி, பொங்கல் என வரிசையாய் வரும் பண்டிகைகளுக்காக கடைகளில் போய் வாழ்த்து அட்டைகள் வாங்குவது பழைய பல்லவி. இப்போது எல்லாம் மின்மயம். ஏதோ ஒரு இணையப் பக்கத்தில் போய் ஒரு வாழ்த்தை கிளிக் பண்ணி மெயில் பண்ணிவிட்டால் விஷயம் முடிந்தது !

தந்தி, தந்தி என்றொரு சமாச்சாரம் இருந்தது ஞாபகம் இருக்கிறதா ? அதை இனிமேல் அரசியல் தலைவர்களின் பேட்டிகளில் தான் கேட்க முடியும். எந்த பிரச்சினையானாலும் “பிரதமருக்கு தந்தி கொடுப்பது” அவர்கள் மட்டும் தான். மற்ற எல்லோருமே மின்னஞ்சல், போன், எஸ்.எம்.எஸ், 3ஜி என எங்கேயே போய்விட்டார்கள்.

இப்படியே வழக்கொழிந்து போன விஷயங்கள், அல்லது புதுமையான வகையில் உருமாறிய விஷயங்கள் நிறையவே உண்டு. இப்போது அந்தப் பட்டியலில் நமது புத்தகங்களும் இணைந்து விடுமோ எனும் நிலை உருவாகி வருகிறது.

மென்புத்தகங்களின் வருகையும், அதை வாசிக்க வசதியாக வந்திருக்கின்ற ரீடர்கள், டேப்லெட்கள் போன்றவையும் அச்சுப் புத்தகங்களின் வளர்ச்சியை அசைக்கத் துவங்கியிருக்கின்றன. உலக அளவில் அச்சுப் புத்தகங்களின் விலை பெருமளவு குறைக்கப்பட்டிருப்பதாய்ச் சொல்கிறது இங்கிலாந்தில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்று.

ஒரு புத்தகத்தைச் சுமக்கும் எடையில் ஒரு புக் ரீடரை நீங்கள் தூக்கிச் சுமக்கலாம். சொல்லப் போனால் ஒரு நாவல் சுமார் 300 கிராம் எடை உண்டு. ஆனால் பொதுவான ரீடர்கள் 200 கிராம் எடையை விடக் குறைவு தான். அதில் சுமார் 1400 நாவல்களைச் சேமிக்கலாம். இப்படி மிக எளிமையான வாய்ப்பு வந்திருப்பதால் மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக புத்தகங்களை விட்டு விட்டு மென் பக்கமாய் தலை சாய்க்கத் துவங்கியிருக்கிறார்கள்.

பயணத்தின் போதெல்லாம் ரீடர்கள் ரொம்பவே உதவியாக இருக்கும் என்பதைச் சொல்லவும் தேவையில்லை. இந்த ஆண்டைய முதல் காலாண்டு புள்ளி விவரம் என்ன சொல்கிறது தெரியுமா ? சுமார் 25% அச்சுப் புத்தகங்கள் விற்பனைச் சரிவு ஏற்பட்டிருக்கிறதாம். நீல்சனின் அறிக்கைபடி கடந்த ஆண்டில் சுமார் 11% அச்சுப் புத்தக விற்பனை வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது !

“அச்சுப் புத்தகங்களின் வீழ்ச்சி கண்கூடு. 2020ல் அச்சுப் புத்தகங்கள் ரொம்பக் கொஞ்சமே இருக்கும். மென்புத்தகங்களே ஆட்சி புரியும்” என்கிறார் புகழ் பெற்ற எழுத்தாளர்களில் ஒருவரான ஜி.பி.டெய்லர்.

இசை உலகை எடுத்துக் கொண்டால் இன்றைக்கு சிடிக்களின் விற்பனை ரொம்பக் கம்மி. அதுவும் ஆப்பிள் தயாரிப்புகளான ஐபாட் போன்றவை அறிமுகமானபின் வெளிநாடுகளில் சகட்டு மேனிக்கு சரிவு ஏற்பட்டது. காரணம் மக்கள் பெரும்பாலும் இணையத்திலிருந்து தரவிறக்கம் செய்வதை விரும்பியது தான்! ஐ-டியூன் போன்ற பணம் கொடுத்து இறக்குமதியாகும் தளங்களில் விற்பனை ஜோராக நடக்கிறது. இதே நிலை இனிமேல் புத்தகங்களுக்கும் வரும்.



எப்போது வேண்டுமானாலும் பிடித்தமான நூலை தரவிறக்கம் செய்து வாசிக்கலாம் எனும் நிலை வரும். இதனால் நூலுக்காக கடை கடையாய் ஏறி இறங்க வேண்டிய அவசியம் இல்லை. ஆர்டர் கொடுத்து விட்டு வாரக் கணக்கில் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

புத்தம் புதிய நாவல்களும் மென்வடிவமாகவே தயாரானால் “ஹாரி பாட்டர்” கணக்கான ரசிகர்கள் கொட்டும் பனியில் புத்தகத்துக்காகக் காத்திருக்க வேண்டிய அவசியமும் இல்லை. சுற்றுப்புறச் சூழலுக்கும் இது ரொம்ப நல்லது. மரங்கள் பிழைக்கும். பெரிய பெரிய அச்சு நிறுவனங்களெல்லாம் ஓய்வெடுக்கும் !

ஹாரிபாட்டர் என்று சொன்னதும் நினைவுக்கு வருகிறது. சமீபத்தில் ஹாரிபாட்டர் நாவல்கள் மென் வடிவம் பெற்றன. சில நாட்களிலேயே சுமார் 8 கோடி ரூபாய்களுக்கான நூல்கள் விற்றுத் தீர்ந்தன ! ஒவ்வொரு நிமிடமும் சுமார் 20,000 ரூபாய்க்கான விற்பனை ஹாரிபாட்டர் மூலம் நடந்து கொண்டிருக்கிறதாம் !

மென்புத்தகங்களின் விலை மிகவும் குறைவாக இருப்பதால் அதன் விற்பனை எண்ணிக்கையும் மிக அதிக அளவில் இருக்கிறது. புத்தக வாசனை வேண்டும், சேமிக்க வேண்டும் எனும் எண்ணம் உடையவர்கள் இன்னும் அச்சுப் புத்தகங்களையே நாடி வருகின்றனர்.

மென்புத்தகங்களின் வளர்ச்சி வரவேற்கப்பட வேண்டியதே ! படிக்கும் பழக்கம் அதன் மூலம் அதிகரித்தால் இரட்டை மகிழ்ச்சி !

நன்றி : மவுஸ் பையன்


Akchaya Digital Photography& Decoration

*Weddings,Puberty ceremony.Reception,Birthday,Aranketam,Registration*

உங்கள் திருமணநாள் பிறந்தநாள்,மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்கும் மண்டபம் மணவறை சோடினை,நாதஸ்வரம் பூமாலைகள் கேக் சிற்றுண்டி குடிபானங்கள் உணவுவகைகள்,மேக்கப் வாகன ஒழுங்கு மற்றும் ஐயர், அனைத்து தேவைகளையும் செய்து தருகின்றோம்.

Contakt:E.Akilan. 02641 91 68 98 Mobi: 0163 39 40 474







# கூடித் திரிந்தவர்களைக் கண்ட மகிழ்வில் குடித்து தொலைக்காதீர்கள் அவர்கள் வாழ்வை!



இப்போது கோடை விடுமுறைக் காலம். புலம்பெயர் நாட்டில் இருந்து நம்மவர்கள் பலர் இன்று தாயகத்தில் தமது விடுமுறையை தமது குடும்பத்துடன் சென்று களிக்கின்றனர்.

சென்ற ஆண்டு விமுறைக்கு சென்ற சிலர் தமது பாலிய நண்பர்களைச் சந்தித்து, அவர்களுடன் குடித்து மகிழ்ந்து திரும்பினர். சென்றவர்கள் திரும்பிவிட்டார்கள், ஆனால் அங்கு சென்றவர்களுடன் சேர்ந்து குடித்தவர்கள் குடிப்பழக்கத்தில் இருந்து மீளமுடியாது தவித்துள்ளனர். இதனால் பல குடும்பங்கள் வாடின.

ஒரு லட்சம் ரூபாயில்! ஒரே நாளில் ஆடிப்பாடிக் குடித்து முடித்தவர்களும் உண்டு. எப்படி எதற்கு செலவு செய்வது என்ற விபரம் இன்றி தம் மகிழ்ச்சியை தமது பாலிய நண்பர்களுடன் பகிர்ந்து விட்டு, இங்கு வந்து விடுகின்றார்கள்.
ஒரு இலட்சமா! அது ஒரு சின்னக்காசு மச்சான்! என்று ஒரு பேச்சு வேறு!

தாயகத்தில் நடக்கும் சீரழிவுக்கு, நாமும் காரணமாகின்றோம். ஒரு தாய் அங்கு குறிப்பிடுகையில் "இங்கு ஓடும் மோட்டச்சைக்களின் பெற்றோல், அங்கு உழைக்கும் இவன் அண்ணனின் இரத்தம்", என்று சொல்லிக் கவலைப்பட்டாள்.

முடிந்தவரை எமது உதவிகளை பாத்திரம் அறிந்து போடுவோம். உதவி செய்யாவிட்டாலும் குறையில்லை, குறைந்தளவு ஏனும் அங்கு உள்ள நம்மவர்களுக்கு தொல்லை கொடுக்காத முறையில் நடந்து கொள்வோம்.

பலர் தாயகம் சென்று, பல நல்ல பணிகளைச் செய்து திரும்புகின்றனர், அவர்களுக்கு அதனால் பெரும் மனநிறைவு கிடைக்கின்றது. இந்த நிறைவு அங்கு செல்பவர்கள் ஒவ்வொருவருக்கும் வரும்படியாக எமது பயணத்திட்டங்களை வகுத்துக்கொள்ள வேண்டும். படம் எடுப்பதும் முகப்புத்தகத்தை நிரப்புவதுமாக இன்றி, பயனுள்ள பலவற்றைச் செய்து முகம் மலர்வோம்.

புலம் பெயர் நாடுகளில் இருந்து செல்பவர்கள் பலர் அங்கு பல தொண்டுகளைப்புரிந்து அவர்கள் வாழ்வை மேம்படுத்த பலவழிகளிலும் உதவிவருவதையும் மறுப்பதற்கில்லை. அவர்களது புனிதமான தொண்டை களங்கப்படுத்தாது ஒவ்வொருவரும் நடத்தல் வேண்டும் என்பதும் முக்கியமாகும்

இன்று யாழ்ப்பாணத்தில் மதுபானத்தின் பாவனை 2009 இன் பின்னர் பல மடங்குகள் அதிகரித்துள்ளன என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.
.
மதுவரித் திணைக்களத்தின் ஆதாரங்களின்படி 2009 இல் யாழ்ப்பாணத்தில் 7 இலட்சத்து 62 ஆயிரத்து 610 லீற்றர் பியர் நுகரப்பட்டது.
.அதுவே 2013 இல் ஐந்து மடங்கால் அதிகரித்து 40 இலட்சத்து 56 ஆயிரத்து 999 லீற்றர் பியர் நுகரப்பட்டது. தற்போது இது இரண்டு அல்லது மூன்று மடங்கால் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இதேபோன்று வெளிநாட்டு மதுபான வகைகளின் நுகர்வு 800 வீதத்தால் அதிகரித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

2009 இல் வெளிநாட்டு வகை 6 ஆயிரத்து 598 லீற்றர் மதுபான வகைகள் நுகரப்பட்டன. ஆனால் 2013 இல் 61 ஆயிரத்து 134 லீற்றர் வெளிநாட்டு மதுபான வகைகள் நுகரப்பட்டன எனத் தெரியவந்துள்ளது.

---

## இறைச்சி சாப்பிடுவதை...

15ம் பக்கத் தொடர்ச்சி...





உருசியில் மாற்றம் நீங்கள் திடீரென இறைச்சி உணவுகளை கைவிட்டு முற்றிலுமாக சைவ உணவுகளுக்கு மாறும் போது, ருசியில் பெரும் மாற்றத்தை உணர்வீர்கள். ஏதோ பத்திய சாப்பாட்டை சாப்பிடுவது போல இருக்கும். இதன் காரணமாக தான், இறைச்சியை ஓரிரு நாட்களுக்கு மேல் சாப்பிடுவதை நிறுத்த முடியாமல், மீண்டும் இறைச்சி சாப்பிட ஆரம்பித்துவிடுவார்கள் அசைவ பிரியர்கள்.

தசை வலிமை தசைகளின் வலிமைக்கு புரதச்சத்து மிகவும் முக்கியமான ஒன்றாகும். இறைச்சி மற்றும் முட்டைகளில் புரதச்சத்து மிகுதியாக இருக்கின்றது. எனவே, நீங்கள் இறைச்சி உணவுகளை கைவிடும் போது, அதற்கேற்ற புரதச்சத்து உணவுகளை எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லையேல், தசைகளின் வலிமையில் மாற்றம் ஏற்படும்.



உடல் சூடு குறையும் பெரும்பாலும் இறைச்சி உணவு சாப்பிடுபவர்களுக்கு உடல் சூடு அதிகமாக இருக்கும். எனவே, நீங்கள் இறைச்சி உணவை கைவிடும் போது, உடல் சூடு குறையும். உடல்நிலையில் இலகுவான நல்ல மாற்றம் காண இயலும்.

செரிமானம் சீராகும் இறைச்சி உணவுகள் கடின உணவு வகையை சார்ந்தவை. எனவே, செரிமானம் ஆக அதிக நேரம் எடுத்துக்கொள்ளும். ஆதலால், நீங்கள் இறைச்சி உணவை தவிர்க்கும் போது, செரிமானம் சீராகும்.

சத்தான உணவு புரதம், இரும்பு, போன்ற உடல் வலிமைக்கு தேவையான சத்துகள் இறைச்சியில் மிகுதியாக கிடைக்கும். எனவே, நீங்கள் இறைச்சியை கைவிடும் போது, ரசம், சாம்பார் மட்டுமில்லாமல், அதற்கேற்ற சத்தான சைவ உணவுகள் சாப்பிட வேண்டியது அவசியம்.






# திருதிருப்பென முறியும் திருமணங்கள்



யாழில் இருந்து சுபா

திருமணம் என்பது வாழ்வதற்கே. இன்று திருமணமானவுடனே விவாகரத்து செய்வதுநாகரீகமாக மாறி வருகிறது. இதற்கு காரணம் என்ன? என்று அனைவரும் ஆராய்ந்துபார்க்க வேண்டும். இருவரும் தொழில் பார்ப்போரே விவாகரத்திற்குவிண்ணப்பித்து இருக்கிறார்கள் என்றும் 25-30 வயதிற்குட்பட்டோரே இவர்களில்அதிகம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உண்மையிலே அது கவலை தரக்கூடிய விடயமே. இது எவ்வாறு ஏற்படுகிறது? இதனைஎப்படி தீர்ப்பது? இனிவரும் காலங்களில் இவ்வாறான விவாகரத்துக்கள்ஏற்படாமல் தவிர்க்க என்ன வழி என்பதனை அனைவரும் கருத்தில் எடுத்து
சிந்திக்க வேண்டும். நாம் இதை செய்ய தவறினால் நிர்ச்சயார்தம் அடுத்துதிருமணம் என்று இருந்த காலம் போய் திருமணம் விவாகரத்து என்ற காலம்உருவாகிவிடும்.

விவாகரத்து ஏற்படுவதற்கான முக்கிய காரணங்களாக-
01. மனம் ஒத்த திருமணங்கள் நடைபெறாமை
02. சீதனப்பிரச்சனையை தீர்ப்பதற்காக நடைபெறுபவை
03. வரட்டுக் கௌரவம் காட்டும் பெண்கள்.
04. காதல் விவகாரத்தால் ஏற்படுபவை.

01.மனம் ஒத்த திருமணங்கள் நடைபெறாமை

அதாவது மணமகள் மணமகன் சம்மதத்தை கேட்பதில்லை. பெற்றோர்கள் தாமாகவேதிருமணங்களை பேசி முடித்து விடுவார்கள். நாம் என்ன பிள்ளைகளுக்கு தீமையாசெய்வோம் நல்லது தானே செய்வோம் என்ற எண்ணத்தில் அவர்களே முடிவு செய்துவிடுவார்கள். இவர்களும் என்ன செய்வது என தெரியாது மனம் ஏற்காவிட்டாலும்பெற்றோருக்காக திருமண பந்தத்தில் இணைகிறார்கள். இங்கு இவர்கள் மனம் ஒத்துஇணைகிறார்களா என்றால் இல்லை. சில பெற்றோர் பிள்ளைகளின் ஆசைகள் அவர்களின்எதிர்பார்ப்புக்கள் எதனையும் கருத்தில் கொள்வதில்லை. இவ்வாறானதிருமணங்களில் சில காலத்திலேயே மன வேற்றுமை ஏற்படுகிறது. இதனால் கருத்துமுரண்பாடுகள் ஏற்படுகிறது. அவை விரிசலடைகிறது.அந்த விரிசல் மேலும்விரிவடைய விவாகரத்தை நாடுகிறார்கள்.

02. சீதனப்பிரச்சனையை தீர்ப்பதற்காக நடைபெறுபவை.

அதாவது சில வீடுகளில் சீதனம் ஒரு பிரச்சனை. சீதனம் இல்லை என்பதால்வசதியான ஒரு இடம் கிடைத்தவுடன் திருமணம் செய்து வைக்கிறார்கள். வசதியுடன்இருப்பவர்களை பார்க்கிறார்கள். வசதியுடன் இருப்பவர்கள் நல்ல குணத்துடன்இருக்கிறார்களா என பார்க்க தவறுகிறார்கள். வசதி கூடியவர்கள் தமக்கு ஏற்றபோக்கிலே சில விடயங்களை செய்வார்கள். ஆனால் அது எல்லாவற்றையும் கண்டும்காணாதது போல இருக்க முடியாது. அதனை கேட்க முற்படும் போது நீ என்னத்தைகொண்டு வந்தாய். என் பணம் தான் நான் என்னவென்றாலம் செய்வேன் என கூறிகுடித்து கும்மாளம் அடித்துக் கொண்டு இருப்பார்கள். அவற்றை எவ்வளவுசொல்லியும் திருத்த முடியாதவிடத்து அவர்களுக்கு விவாகரத்தே ஒரு வழியாகதோன்றும்.

03. வரட்டுக் கௌரவம் காட்டும் பெண்கள்.

தொழில் பார்க்கும் பெண்கள் திருமணம் செய்து வைத்தவுடன் அவர்கள் தம்இஷ்டத்துக்கு வாழ ஆரம்பிக்கிறார்கள். தமக்கு தொழில் இருக்கு தானே தாம்ஏன் அடங்கிப்போக வேண்டும் என்று என்ற நிலை ஏற்படுகின்றது. (எல்லாபெண்களும் இல்லை) தொழில் பார்க்கும் பெண்களே இன்று அதிகம் பேர்விவாகரத்திற்கு விண்ணப்பித்து இருக்கிறார்கள். எனக்கு தொழில் இருக்குதானே நான் என போக்கிலே செயற்படுவோம் என்ற எண்ணம் ஏற்படுகிறது. இதனால்சிறு பிரச்சனையும் பெரிதாகிறது. அதனை எப்படி சீர் செய்வது எனசிந்திப்பதில்லை. உடனே விவாகரத்து அது தான் முடிவு என்ற நிலைஏற்படுகிறது. பிரிவு ஏற்பட்டால் அதை எப்படி சீர் செய்வது என்பது இன்றுகௌரவப் பிரச்சனையாகியுள்ளது. அவர்களுக்கு சுய கௌரவம் விட்டுக் கொடுக்காதுஅதனால் விவாகரத்தை நாடுகின்றனர்.

04. காதல் விவகாரத்தால் ஏற்படுபவை.
அதாவது தமது பிள்ளைகள் காதலிக்கிறார்கள் என்று தெரிந்தவுடன் அவசர அவசரமாகவேறு இடத்தில் திருமணம் பேசி முடித்து விடுவார்கள். ஏனெனில் இங்குபெற்றோர் தம் சுய கௌரவத்தை பார்க்கிறார்கள். தமக்கு எற்ற இடமில்லை அதனால்செய்து வைக்க முடியாது என கூறி வேறு இடத்தில் திருமணம் பேசுவார்கள். தமதுதகுதிக்கு ஏற்றவர்களை தானே காதலித்து இருக்கிறார்கள் என எண்ணவதில்லை.பிள்ளைகள் சம்மதிக்காவிடின நாம் உயிருடன் இருக்க வேண்டும் என்றால் இதற்குசம்மதிக்க வேண்டும் என்று அடக்குகிறார்கள். கட்டாயப்படுத்துகிறார்கள். பெற்றோருக்காக திருமண பந்தத்தில் இணைகிறார்கள். அதில் பெற்றோர்கள் தவறுஇழைக்கிறார்கள். தாம் கெட்டித்தனமாக வேறு இடத்தில் திருமணம் செயதுவைத்துவிட்டோம் என சிந்திக்கிறார்களே தவிர முதலில் தம் பிள்ளை காதலித்தவிடயம் தெரிந்தால் அதனால் ஏற்படப்போகும் பிரச்சனைகளை சிந்திக்க தவறுகிறார்கள். ஆனால் இந்த பெண் காதலித்த விடயம் பின்பு தெரியவர திருமணம் முடித்து போன இடத்தில் எத்தனையோ பிரச்சனைகள்.
எதற்கு எடுத்தாலும் சந்தேகம் தோன்றும். ஒவ்வொரு விடயத்திற்கும் ஏதோ ஒரு வழியில் முதலில் காதலித்த விடயத்தை காரணம் காட்டி பிரச்சனை ஏற்படும். எவ்வளவுதடவை தான் பிரச்சனையை தாங்குவாள். முடியாதவிடத்து விவாகரத்தை நாடுகிறாள்.இங்கு அந்த பெண் காதலித்ததையே குற்றம் போல் ஏனையோர் கருதுவார்கள். ஆனால் இங்கு அந்த பெண்ணை குறை கூற முடியாது. கௌரவம் பார்த்து செய்த பெற்றோர் தான் குற்றவாளி. முதலில் கௌரவம் பார்ப்பவர்கள் இப்படி இந்த பெண் விவாகரத்து எடுத்தால் அவர்கள் கௌரவம் என்ன ஆவது?
விவாகரத்து ஏற்படாமல் எப்படி பிரச்சனையை தீர்ப்பது என்று சிந்தித்துமுதலிலே செயற்பட வேண்டும். முதலிலே திருமணம் பேசும் போது தமது பிள்ளைகளின் விருப்பங்கள் சம்மதங்களை கேட்க வேண்டும். நாம் எமது பிள்ளைகளுக்கு தீமையா செய்வோம் நன்னை தானே செய்வோம் என்று தான்தோன்றித்தனமாக சிந்திப்பதை பெற்றோர் முதலில் நிறுத்த வேண்டும்.
ஆதியிலே தான் மணமேடையிலே மணமக்களை சந்திக்கிற காலம். இப்போது அப்படியில்லை. பெற்றோர்கள் பிள்ளைனகளுடன் நண்பர்கள் போல் பழகும் காலம். அவர்களுடன் கதைத்து அவர்கள் விருப்பு வெறுப்புக்களை அறிய வேண்டும்.

தொடர்ச்சி 22ம் பக்கம்

HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN

069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main


India | Singapore | Malaysia | Thailand | Hong Kong | U.A.E. | K.S.A. | Oman | Qatar | Bahrain | Kuwait | U.K. | France | Germany | Australia | South Africa | Canada | U.S.A.



## திடுதிடுப்பென முறியும்...

21ம் பக்கத் தொடர்ச்சி

அவர்கள் மனதில் உள்ள எண்ணங்களை புரிந்து கொள்ளவேண்டும். அவர்களது மனங்களுக்கும் மதிப்பளியுங்கள். அடுத்து சீதன பிரச்சனை என்றவுடன் வசதியான ஒரு மணமகன் வருகிறார் என்றவுடன் எம்மிடம் எதனையும் கேட்கவில்லையே என்று பெருமைபடுவதை நிறுத்தி அவர்களின் குணத்தை முதலில் அறியுங்கள். பணம் எப்போது வேண்டும் என்றாலும் சம்பாதிக்கலாம். ஆனால் அவர்களின் குணத்தை பார்க்க தவறிவிடாதீர்கள். நன்றாக பல இடங்களில் விசாரியுங்கள். எனெனில் வாழப்போவது உங்கள் பிள்ளைகள். அவர்களின் எதிர்காலம்.

அடுத்து வேலை பார்க்கும பெண்கள் என்று குறிப்பிட்டுள்ளேன். அவர்கள் தம் வீட்டில் இருந்து கதைப்பதற்கே நேரம் அற்று இருக்கிறது. இயந்திரம் போல் செயற்படும் வாழ்க்கை இன்று காணப்படுகிறது. இங்கு ஒருவர் விருப்புவெறுப்புக்களை மற்றவர் அறிந்து கொள்ள நேரம் கிடைப்பதில்லை. நேரம்கிடைக்கும் போது மனம்விட்டு பேசுங்கள். அப்போது தான் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முடியும். வீட்டில் ஏற்படும் பிரச்சனைகளை வீட்டிலேயேசுமூகமாக தீர்க்க முற்படுங்கள். அதனை வெளியில் தெரியப்படுத்து வதைதவிருங்கள்.

அடுத்து காதல் பிரச்சனை. பெற்றோர் தமது பிள்ளைகள் காதலிக்கிற விடயம் தெரிந்ததும் தம் கௌரவம் பார்க்கிறார்கள். ஏன் நாமே ஒருவரை தெரிவு செய்யத்தானேபோகிறோம். அதுபோல் எம் பிள்ளைகள் மனம் ஒத்து அவர்கள் தெரிவு செய்தேவரை ஏற்போம் என்கிற மனநிலை பெற்றோரிடம் இல்லை. மனம் ஒத்த இருவரை பிரிக்கிறார்கள் மனம் ஏற்காத இன்னொருவருடன் இணைக்கிறார்கள். இங்கு பிள்ளைகள் தம்மை திருமணம் செய்தவரை முதலில் காதலித்தவருடன் ஒப்பிடுகிறார்கள். இதுவே அவர்களுக்கு வெறுப்பை தரும். பிள்ளைகளின்

### மனங்களுக்கும் மதிப்பியுங்கள்.


பிள்ளைகள் மனம் ஒத்து வாழக்கூடிய வாழக்கையை எப்படி ஏற்படுத்திக் கொடுக்கலாம் எனசிந்தியுங்கள். அவசர திருமணங்களை கட்டுப்படுத்துங்கள். நன்றாக ஆராய்ந்து சரியான முறையில் தெரிவு செய்யுங்கள். திருமணம் என்பது

இருவர் இணைந்து வாழவே தவிர உடனே விட்டுப்பிரிவதற்கல்ல. விவாகரத்து எடுக்க முதல் அதனால் ஏற்படும் பின்விளைவுகள் பற்றி சிந்தியுங்கள். இனி எதிர்காலம் எப்படி அமையும் என்று சிந்தியுங்கள். ஆதை விட்டு நாம் ஏதோ கெட்டித்தனமாக விவாகரத்து எடுக்க விண்ணப்பித்து விட்டோம் என்று சிந்திக்காதீர்கள். விவாகரத்திற்கு விண்ணப்பித்தவுடன் நீதிமன்றத்தில் கிடைப்பதில்லை. விவாகரத்து கடையில் வேண்டும் பொருளுமல்ல.அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு சரியான முறையில் காரணம் கூற வேண்டும் .

சரியான காரணம் இருந்நதால் மட்டுமே விவாகரத்து விண்ணபத்தை ஏற்பார்கள். இப்படி ஏற்காது விட்டால் கூட அதன் பின் இவர்களால் சேர்ந்து வாழ தான் முடியுமா...? ஒரு நாளும் இல்லை. அதனால் எப்படியாவது விவாகரத்தை பெற வேண்டம் என்பதற்காக காரணம் தேடி அலைவார்கள்.

பிரச்சனைகள் என்பன பொதுவானவை. ஒவ்வாருவரும் வெவ்வேறு விதமான எண்ணப்போக்கும் குணவியல்புகளும் உடையவர்கள். பிரச்சனையில்லாமல் முரண்பாடில்லாமல் வாழ்க்கை இல்லை. முரண்பாடான எண்ணங்களே புதிய புதிய கண்டுபிடிப்புக்களை உருவாக்கின. எனவே வாழ்க்கையில் ஏற்படும் முரண்பாடுகளை புத்திபுர்வமாக அணுகி புரிந்துணர்வுடனும் இணக்கப் பாட்டுடனும் பேசித்தீர்ப்பது அவசியம்.

இனிவரும் காலங்களில் இவ்வாறாக விவாகரத்துக்களை எப்படி தடுப்பது திருமணம்விவாகரத்து என்ற நிலையை எப்படி மாற்றுவது என்று ஒவ்வெருவரும் சிந்திப்பதன் மூலமே நல்ல ஒரு எதிர்காலத்தை உருவாக்க முடியும்



# சோதிட உலகின் கலங்கரை விளக்கு

## சோதிடபூஷணம்” கலாபூஷணம்” சிவஸ்ரீ.சி.சிதம்பரநாதக்குருக்கள்



யாழ்ப்பாணம்-மட்டுவில் திருக்கணித நிலைய ஸ்தாபகரும், திருக்கணித பஞ்சாங்க கணிதரும் சரசாலை வீரமாகாளி அம்பாள் ஆலய பிரதம குருவுமாகிய ”வேதாகம சோதிடபூஷணம்” கலாபூஷணம்” சிவஸ்ரீ.சி.சிதம்பரநாதக்குருக்கள் எனும் வித்தகர். தனது 80வது வயதில் 24.5.2015 ஞாயிற்றுக்கிழமை அன்று அதிகாலை 5மணிக்கு காலமானார்.

அன்னார் திருக்கணித பஞ்சாங்கத்தை கணித்து மக்கள் மத்தியில் பிரசித்தமாக்கியவர்.”சோதிடமலர்” எனும் சஞ்சிகை மூலம் சோதிடம் இந்துக்களின் கலைப்பொக்கிஷம்மட்டுமல்ல அது வாழ்க்கைக்கு வழிகாட்டுவது என்று பறைசாற்றியவர். தான்பெற்றநூலறிவு, பட்டறிவு, நுண்ணறிவு என்பனவற்றை ஆதாரமாகக் கொண்டு தனதுகலைத்திறனும், சோதிட ஞானமும் அடுத்த தலைமுறைக்கும் சென்று சேர விரும்பி ”சோதிடம் கற்போம்” என்னும் நூலையும், ”திருமணப் பொருத்தம்” என்னும் நூலையும்,சிவாச்சார்யார்களுக்காக ”ஸ்நபனமஞ்சரி” என்னும் சமஸ்கிருத நூலையும் ஆக்கித் தந்துள்ளார்.

மலேஷியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, சுவிஸ், நோர்வே, கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் இந்துக்களின் பிரயோகத்திற்காக அவ்வவ் நாடுகளுக்கென குருக்கள் அவர்களின் பெருமுயற்சியினால் கணிக்கப்பெற்ற திருக்கணித பஞ்சாங்கங்கள், கலண்டர்கள் என்பன வருடந்தோறும் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

குருக்கள் ஐயா அவர்கள் ”சோதிட உலகின் கலங்கரை விளக்கு” ஆகும்.

தென்மராட்சி சரசாலைப்பகுதியில் இலந்தைத்திடல் வீரமாகாளி அம்மன் ஆலயத்தில்1962ம் ஆண்டிலிருந்து பிரதம குருக்களாகவும், நான்கு தடவை மஹா கும்பாபிஷேகங்களையும்,மகோற்சவங்களையும் பிரதமகுருவாக இருந்து நிகழ்த்தியுள்ளார். அதுமட்டும் இன்றி,இன்னும் பல ஆலயங்களில் கும்பாபிஷேகங்கள், மகோற்சவங்கள் என்பனவற்றைதலைமை ஏற்று சிறப்பாக நடாத்தியுள்ளார்.

தான்பெற்ற செல்வங்களை உலக அரங்கில் சிறப்பாக வாழவைத்திருப்பது இவரின் தனிச்சிறப்பு ஆகும். இவரின் சேவை ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் தேவை என்பதைஊரே திரண்டு வந்து அளித்த கண்ணீர் சாட்சி அளித்தது.அன்னாரின் இழப்பு குடும்பத்திற்கும், ஊருக்கும், உலகிற்கும் பேரிழப்பாகும்.ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி! தொகுப்பு

**”ஸர்வவித்யா சிரோன்மணி”சிவஸ்ரீ.க.சபாநாதக்குருக்கள் (மருமகன்)**

”திருக்கணித ஜோதிடம்” எஸன்-ஜேர்மனி




# கதை கதையாம் காரணமாம்

**கே.எஸ்.சுதாகர்**

## ஏன் வரவில்லை?

சதாசிவம், மகன் சதீஷின் திருமணத்திற்கான அழைப்பிதழ்களை அனுப்பிக் கொண்டிருந்தார். முகவரி இல்லாதவர்களைத் தொடர்பு கொண்டார். நண்பன் சாந்தனிற்கு ரெலிபோன் செய்தார். ரெலிபோனில் 'றிங்' ஓசையுடன் 'டொக்' என்ற சத்தம் கேட்டது.

“உவங்களுக்கு எப்பவும் ஊர் சுத்துறதுதான் வேலை” கோபத்தில் கத்தினார்.

எப்படியோ சாந்தனுக்கும் அழைப்பிதழ் அனுப்பினான் சதீஷ்.

”சதீஷ்... ஏன்ராப்பா சாந்தன் திருமணத்திற்கு வரவில்லை?”

“அப்பா... அவங்கட ஆன்சர்போனிலை நீங்கள் என்னத்தைப் பதிஞ்சனியள்?”

சதாசிவத்திற்கு 'டொக்' சத்தம் ஞாபகத்திற்கு வந்தது.

## நட்புக்கு மரியாதை!




மக்கள் திலககம் பெரியாரின்
பகுத்தறிவுக் கொள்கையைப் பின்பற்றினாலும்
நட்புக்கு மரியாதை செலுத்துபவர் அத்தடன் பிறர் நம்பிக்கைளை
குடைவதும் இல்லை, அவமதிப்பதும் இல்லை,தன்னை வைத்து
பல படங்களைத் தயாரித்த முருகபக்த்தன் தேவர் அவர்களுக்கு
தெய்வமாக நடிக்க ஒப்புக்கொண்டார்
ஒரு பாடல் காட்சியல் முருகனாக வந்தார்.
படம்: தனிப்பிறவி


நீங்கள் புதிய மனை அமைக்கவோ, கடன் பெறவோ, எதுவானாலும் உடனடி உதவி எங்களிடம் உண்டு

சுபா(Schufa) தடங்கல் இருந்தாலும் உங்கள் புதிய முயற்சிக்கு நாங்கள் இருக்கின்றோம்!

தற்போதைய வீட்டுக்கடனை அல்லது (தனிநபர்)கடனை குறைந்த வட்டிக்கு மாற்றுதல்

“Umschuldung”





வீட்டுக்கடன் 1,6% வட்டிவீதத்திலிருந்து

உங்கள் சொந்த வீட்டை புதிய தரத்திற்கு மாற்ற விரும்பினால், 60.000€ வரை உடனடி கடன் உதவி!

தொடர்புகளுக்கு:
gothab Finance
Rheinische Str. 72, 44137 Dortmund
0231/53375365
0231/13029415
0231/10876361
0152/53961138
Th. Gobinath

இத்தாலி-ரோம்- லூட்ஸ் மாதா - போத்துக்கல் பார்த்திமா



புனிதப்பயணம்

லூட்ஸ் மாதா கோவில்

june, july, Aug
இத்தாலி-ரோம்
375 €
போத்துக்கல்-
(பார்த்திமா )
375 €

உணவு,தேனீர், கோப்பி, குளிர் பானங்கள், தங்குமிட வசதிகள் (Room) பஸ் கட்டணம் அனைத்தும் உட்பட ஒரு வருக்கு 200 யூரோ மட்டுமே! பிரயாணம் செய்ய முன்கூட்டியே பதிவு செய்யவும்.

K.முருகா : 02972 7754 Handy: 0175 850 14 89

உங்கள் தாய் மொழியில்....

HK Hammacher

வாகனச் சாரதி பயிற்சி நிலையம்



ஆங்கிலம், யேர்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு. பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651

MPU
ASF
ASP
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

Kaneen Electronics

15 வது ஆண்டு நிறைவான சேவை
Internet-sat,
Receiver,Camera-Alam
கருவிகள் மலிவு விலையில்
பெற்று பயனடையுங்கள்

அனைத்து தொலைக்காட்சியில் உங்கள் விளம்பரங்கள் இடம்பெறவேண்டுமா! மற்றும் உங்கள் கலைநிகழ்ச்சிகள் பெருவிழாக்கள் திருவிழாக்கள் ஒளிபரப்பவேண்டுமா!எம்மை நாடுங்கள்.
Tel: 02053 423 740 Fax: 2053 423 741
Mobil: 0172 2931266- info@ kaneenelectronics.de
Schevenhoferweg-24
42111 Wuppertal
www.kaneenelectronics.de

Sri lanka இல் விடுமுறையைக் கழிக
இதோ சொகுசான இல்லம்!
கொழும்பு கொட்டாஞ்சேனையில் (Colombo 13)
புதிதாகக்கட்டப்பட்ட குளிரூட்டப்பட்ட சொகுசான வீடு உண்டு.
வீட்டின் படமும் தரமும் பார்க்கவேண்டுமா
www.airbnb .com colombo 13 இணையத்தளத்திற்கு
சென்று பாருங்கள்.
Lovely brand new home 3BD 3 Bathroom
தொடர்புகளுக்கு: Mrs.Genevive Antinipillai (Canada)
Jennyanton23@gmail.com
Tel: 001 64 72 15 8444 (Canada)
Germany : Mr.Anton.Handy:0152 15 170 559


Cinematic Storytelling



KIRI VIDEO
Professional Filming
&
Production Service
FOLLOW US ON facebook
KIRI VIDEO
Mob.: 01786709612
01777076958
Home: 02171 948036

Nirubagini Magendiran LL.M.
Vereidigte Dolmetscherin und Übersetzerin
Tamil- Deutsch
Deutsch- Tamil
மொழிபெயர்ப்பாளர்
தமிழ் – யேர்மன்
யேர்மன் – தமிழ்
Mobil: +49176-24012135
Email: nirumagendiran@hotmail.com

வெற்றிமணி வெளியீடு
சிவத் தமிழ்



ஆன்மீக இதழ்

Thushi -Deko

1989 முதல் இன்றுவரை தொடரும் எங்கள் சேவை!
உங்கள் தெரிவுகள் அனைத்தும் எங்கள் கையிருப்பில்.....

Christal mandapa Set round
Rada Krishna Stage
and Raja Gopuram





Elephant Stage



Thushiyanthan.
Thiruselvam

Tel:02305 - 85945 - 0176 608 108 13



# யேர்மனியில் நடைபெற்ற செல்வி மிருதுளா சிவஸ்ரீ அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம்

கடந்த 07.06.2015 ஞாயிற்றுக்கிழமை யேர்மனி சலங்கை ஒலி நாட்டியக் கலாமன்ற மாணவி செல்வி மிருதுளா சிவசிறி அவர்களது பரதநாட்டிய அரங்கேற்றம் சிறப்புற நடைபெற்றது. இவர் யேர்மனி சலங்கை ஒலி நாட்டியக் கலாமன்ற அதிபர் திருமதி சாவித்திரி இமானுவேல் MA அவர்களுடைய மாணவியாவார். திரு.திருமதி சிவசிறி தம்பதிகளின் புதல்வியான அரங்கேற்ற நாயகி செல்வி மிருதுளா சிவசிறி, நீண்டகாலம் தனது குருவிடம் பரதக்கலையின் நுணுக்கங்களைக்கற்று சிறப்பாக அரங்கேறினாள். குறிப்பாக நவரசங்களை சிறப்பாகக்காட்டி பார்ப்பவர் மனங்களை வென்றாள்.

மேற்படி அரங்கேற்றத்திற்கு ஜி.ரி.வி யேர்மன் கிளை அறிவிப்பாளர் முல்லைமோகன் தலைமையுரையாற்ற, பிரதமவிருந்தினராக நாட்டிய கலைமாமணி ஸ்ரீமதி மாலதி யோகேந்திரன் (ஒஸ்லோ) கலந்து சிறப்பித்தார். அவர் தனது உரையில் மாணவியினது திறமையையும், அதற்கு துணையாக இருந்த குருவையும், பெற்றோரையும் பாராட்டினார்.

சிறப்பு விருந்தினராக வெற்றிமணி சிவத்தமிழ் பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சுசிவகுமாரன் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். அவர் தனது உரையில் செல்வி மிருதுளா சிவசிறி தான்கற்ற கலையை இங்கு சிறப்பாக காட்டி மகிழ்ந்தார். மலர்ந்த முகத்திலே கோவத்தையும், மகிழ்ச்சியையும், சிருங்காரத்தையும்,அப்படியே ஆச்சரியப்படும் விதத்தில் அற்புதமாகாட்டி ஆடினாள். ஆடலின்போது இதழ்கள் பாடலை வரிகளை வாசித்தவண்ணமே இருந்தன.

நட்டுவாங்கத்தினை சென்னை பாரதி பல்கலைக்கழகத்தில் MA படிப்பினை சிறப்பாக முடித்த, சலங்கை ஒலி நாட்டி அதிபர் ஸ்ரீமதி சாவித்திரி இமானுவேல் அவர்கள் செய்ய, பாடல்களை மதுரக்குரலோன் திரு கண்ணன் அவர்கள் பாட மிருதங்கம் சங்கீத ரத்தினம் திரு.எஸ் பிரவநாதன், மற்றும் அவர் புதல்வன் பிரசாந் பிரணவநாதனும், வயலின் நெய்வேலி திரு இராதாகிருஷ்ணன், கடம் காஞ்சிமாக்கோடி பீட ஆஸ்தான வித்துவான் திரு உமாசங்கர் அவர்களும் சிறப்பாகச் செய்ய அரங்கேற்றம் மெருகுற்றது. அறிப்பாளர்களாக திரு.ந.புனிதராஜா திருமதி சி.லீபா ஆகியோர் சிறப்பாக கடமையாற்றினர்.







சென்னை பாரதி பல்கலைக்கழகத்தில் MA படிப்பினை முடித்து, பட்டம் பெற்ற அந்த இனிய வேளையில் சலங்கை ஒலி நாட்டி அதிபர் ஸ்ரீமதி சாவித்திரி இமானுவேல் அவர்கள்

இது பாடலை உணந்து, மொழி புரிந்து ஆடல் புரியும் பாங்கினைக் காட்டியது. கலைஞர்கள் பிறரை மகிழ்வித்தாலும் அவர்கள் தமக்குள் மகிழ்வார்கள். அந்த மகிழ்ச்சி ஆத்மாவின் மகிழ்ச்சி. தன்னை மகிழ்விக்காத எந்தக்கலைஞனாலும் பிறரை மகிழ்விக்கமுடியாது.

இங்கு செல்வி மிருதுளா சிவசிறி மகிழ்வுடனேயே ஒவ்வொரு அசைவையும் ஆசையுடன் கொடுத்ததை காண முடிந்தது. மயில் தன்மகிழ்வில் ஆடுகிறது. குயில் தன்மகிழ்வில் மகிழ்ந்து கூவுகின்றது. நீ மயிலாக இரு! குயிலாக இரு! ஆனால் நீ நீயாகவும் தனித்துவமாகவும் இரு என வாழ்த்தினார்.

VTM MiniMarkt und Kiosk
துரித பணமாற்றுச் சேவை!
Ria MONEY TRANSFER
உலருணவுப் பொருட்கள்
கடலுணவுப்பொருட்கள்
உடன் மரக்கறி வகைகள்
இலங்கை, இந்தியா உட்பட உலகின் எந்தப்பாகளுக்கும் அதிகூடியவீதத்தில் பணப்பரிமாற்றம் செய்ய இன்றே நாடுங்கள் NSB,BOC,HNB போன்ற வங்கிகளில் நேரடியாகவும் மற்றும் அனைத்து வங்கிக்கணக்குகளுக்கும் பணமாற்றம் செய்யலாம்.
Tel 0203/98418781
E.mail :- vtm2012@hotmail.de
Neudorferstr 173
47057 Duisburg
inh:Pon.Vijayakumar
Buschhausener Str.16/18
46049 Oberhausen
Tel:0208 468 444 21

# காதோடு காதாக

கலைக் கதிர் கதிர்.துரைசிங்கம்

மனைவி: கல்யாணம் முதல் காதல் வரை என் வாழ்க்கை இந்தத் தெலைக்காட்சித் தொடர் இரண்டும் பார்த்து முடிக்கவேணும்.

உன்ரை கொப்பர் என்னைக் கேளாமல் ஆரையோ இப்ப கூட்டிக்கொண்டு வந்து நிற்கிறார். தேத்ண்ணி கோப்பிகூடப் போடமுடியாது. விவஸ்தை இல்லதா மூளைகெட்ட மனுசன்.

மகள்:
சத்தம் போட்டு பேசாதையுங்கோ அம்மா! நீ பேசியது கந்தோரிலை இருந்து அப்பாவோடு வந்த சினேகிதனுக்கு காதிலை விழப் போகுது.
கணவர்: வடிவாகக் காதிலை விழட்டும். விழுகிறபேச்சை அவர் நல்லாக் காதிலை கேட்கட்டும். ஏன் எண்டால் பிள்ளை. என்னோட வந்தவருக்கு கல்யாணப் பேச்சு நடக்குது. என்ரை கல்யாணம் பேச்சுக் கல்யாணம் எண்டு சொல்ல, உடன் என்ரை வீட்டை வந்து பார்த்துவிட்டு போகவேணும் எண்டு வில்லங்கப்பட்டவர்.
செல்லர்:
என்ரை இளைய மகள் Websit Dating செய்து Facebook இலை Friend ஆகி Whatsapp இல் கதைச்சு Skyp இலை.. தன்காதலைச் சொல்லி ஒரு............



பெடியனுக்கு Propos பண்ணிப்போட்டாள். கல்யாணம் செய்து வைக்கச் சொல்லி என்னைக் கேட்கினம்.

சோமர்:
Twitter இலை காலத்தை கொஞ்சம் கடத்தச்சொல்லும்,பொன்னுருக்கு கல்யாணம் தேன்நிலவு பிள்ளைப்பேறு எல்லாம் கணனிமூலம், ஆளையாள் பார்க்காமல் செய்யக் கூடியதாக, தொழில் நுட்பம் விரைவாக வந்திடும்.

## கனடாவில். அழகுற நடைபெற்ற உதயன் பத்திரிகையின் 1000 ஆவது இதழ் வெளியீடும் பல்சுவைக் கலைவிழாவும்



உங்கள் அபிமான உதயன் பத்திரிகையின் 1000ஆவது இதழ் வெளியீடும் சேர் ஜோன் ஏ மெக்டொனால்ட் உயர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது . பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நகர சபை உறுப்பினர்கள் என பல பிரமுகர்கள் கலந்து சிறப்பித்த மேற்படி விழாவில் சிறப்புப் பேச்சாளராக ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவர் திரு ஸ்டாலின் குணசேகரன் கலந்து கொண்டார்.
கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திரு ஆர். என் .லோகேந்திரலிங்கம் பல அரசியல் பிரமுகர்களால் கௌரவிக் கப்பட்டார்.
ஒரு பத்திரிகை 1000 இதழ்களை விரிப்பது என்பது புலம்பெயர்நாட்டில் சாதரண காரியம் அல்ல. அதனைச் சாதித்த உதயனை வாழ்த்துகின்றோம்.










# வங்கி வட்டியும், வரியும்!

**Bank Interest-Tax**

1. கேள்வி:

2015 ஆண்டு April மாதம் தொடக்கம் சேமிப்பு வருமானத்தில் (Savings in come) செலுத்தப்படும் வரி வீதத்தில் ( Tax rate) மாற்றம் ஏற்பட்டுள்ளதாக எனது நண்பர் கூறினார்.

நான் ஒரு ஓய்வூதியம் பெறும் நபர். (Pensioner) எனவே வங்கி வட்டி வருமானம் எனக்கு மிகவும் முக்கியமானது. இதனைப்பற்றி சற்று விபரம் கூறுவீர்களா?

பதில்:
2015 ஆண்டு April முதல் தங்கள் மொத்த வருமானம் (total in come) தங்களின் தனிப்பட்ட வருட சலுகை அளவை (Personal allowance) Plus பவுண்ஸ் 5000 விட குறைவாக இருந்தால் எந்தவித வரியும் செலுத்தாமல் வங்கியிடம் இருந்து வட்டி வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

சேமிப்ப வருமானம் இந்த 5000 பவுண்ஸ் limit க்கு குறைவாக இருப்பின் R 85 என்கின்ற பத்திரத்தை பூரணப்படுத்துவதன் மூலம் வட்டி லாபத்தை வரிசெலுத்தாமல் பெற்றுக்கொள் முடியும்.

**Rental Income**

2. கேள்வி:

நான் buy to let அடிப்படையில் இரண்டு வீடுகள் மூலம் பலவருட காலமாக rental இலாபத்திற்கு வருமான வரி செலுத்திவருகின்றேன். அண்மையில் ஒரு பத்திரிகையில் எமது rental வருமானத்திற்கு 10% wear and tear என்பதனை, கழித்துக் கொள்ளமுடியும், எனத் தெரிவித்துள்ளார்கள். இதனை எவ்வாறு நடைமுறைப்படுத்தவது என்று கூறுவீர்களா?

பதில்:
ஒவ்வொரு வருடமும் தங்களது rental வீட்டிற்கு எந்தவித செலவும் ஏற்படாமல் இருந்தாலும் 'Net rental" வருமானத்தில் இருந்து 10% 'wear and tear' என்ற அடிப்படையில் கழித்து மிகுதி வருமானத்திற்கே வரி செலுத்த வேண்டும்.

Net rental என்றால் அதாவது நீங்கள் council tax அல்லது water rate செலுத்தியிருந்தால் இதனை மொத்த rental இல் இருந்து கழித்து, மிகுதி rental வருமானததில் மட்டுமே 10% wear and tear ஐ கணக்கிடவேண்டும். அத்துடன் agents fee, insurance கணக்காளர் fee போன்ற செலவுகளையும் rental income ற்கு எதிராகக் கழித்துக் கொள்ள முடியும்.

**Personal allowance**

3. கேள்வி:
எந்த ஒரு தனி நபரும் வரி ( in come tax) 10,000 பவுண்ஸ் ற்கு மேல வருமானம் கிடைத்தால் மட்டுமே செலுத்தவேண்டும் என்பது சரியான ஒரு தகவலா எனக் கூறுவீர்களா?

பதில்:

2015-2016 ஆண்டிற்கு உங்களது முதல் 10,600 பவுண்ஸ் வருமானத்திற்கு எந்த வித வரியும் செலுத்தத்தேவை இல்லை. 2016-2017 ஆண்டிற்கு இந்தத்தொகை 10,800 பவுண்ஸ் ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

எனவே 2015-2016 ஆண்டில் தங்களுடைய மொத்தவருமானம் 42,385 இற்கு குறைவாக இருந்தால், 20% வரியும், 42,385 பவுண்ஸ்க்கு மேலாக இருந்தால் 40% வரியும் செலுத்த வேண்டும்.
வருமானம் 150,000 ற்கு மேல் இருந்தால் 45% வரி செலுதத்வேண்டும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.


**Tex - free income**


4.கேள்வி:
பங்குச் சந்தையில் பங்குகளை வாங்கி விற்பனை செய்து, அதனால் கிடைக்கும் இலாபத்திற்கு எந்த வரியும் செலுத்தத் தேவை இல்லை என்று எனது நண்பர் கூறினார் அது சரிதானா?

பதில்: பங்குச் சந்தை வியாபாரத்தில் கிடைக்கும் இலாபத்திற்கு நீங்கள் Capital gains tax செலுத்த வேண்டும் முதல் 11,100 பவுண்ஸ் இலாபத்திற்கு எந்த வித வரியும் செலுத்தத்தேவை இல்லை.

அதன் பின்னர் தங்களது வரி செலுத்தும் நிலைக்கு ஏற்ப 18% அல்லது 28% வரி செலுத்த வேண்டும். ஆனால் financial spread trading என்ற அடிப்படையில் பங்குகளை வாங்கி விற்பனை செய்தால் இதனால் எந்தளவு இலாபம் கிடைத்தாலும் அதற்கு வரி கட்டத்தேவை இல்லை. தற்பொழுது உலகில் **இங்கிலாந்து நாட்டில் மட்டுமே, இந்த சலுகை தற்பொழுது அமுலில் உள்ளது.**







# உலக அதிசயம் நம் உடலுக்குள்

**ஒவ்வொரு மணி நேரமும் நமது உடலில் ஒரு மில்லியன் அணுக்கள் மாற்றப்படும்.**

(அடேங்கப்பா... ஒரு பெரிய நிறுவனமே இயங்குது போல. லே ஆ.்.ப் பிரச்சினை வராதா ?)

**நமது கண்ணுக்கு 50 வகையான சாம்பல் நிறங்களைப் பிரித்தறிய முடியும்.**

( அடக் கடவுளே ! அப்போ நமக்கு புடிச்ச கலர்ல எல்லாம் எப்படி ? )

**மனிதனுடைய தொடை எலும்புகள் காங்கிரீட்டை விட வலிமையானவை.**

(சந்தேகம் இருக்கிறவங்க மட்டும் தொடையால காங்கிரீட்டை உடைக்க டிரை பண்ணுங்க.. நான் எஸ்கேப் )

**மனித இதயம் முப்பது அடி நீளத்துக்கு இரத்தத்தைப் பீச்சியடிக்கும் வலிமை கொண்டது**

( நல்ல வேளை ஒலிம்பிக்ல இதைச் சேக்கல )

**நமது கண்கள் பிறந்த நாளில் எவ்வளவு இருக்குமோ அவ்வளவு தான் இருக்கும் ஆயுள் முழுதும். அளவு மாறாது. ஆனா மூக்கும் காதும் கட்டும் காலம் பூரா வளந்துட்டே இருக்கும்**

( ஐயையோ... அப்போ யானைக்காது மாதிரி ஆயிடுமா )

**நமது இருமலுக்கு மணிக்கு 60 கிலோ மீட்டர் வேகம் உண்டு**

( அட.. நம்ம ஸ்கூட்டியை விட அதிகம் )

நம்ம உடல்லயே அதிக வேகமாக வளரும் முடி, தாடி தான். ஷேவ் பண்ணாமலேயே இருந்தால் நம் சராசரி வாழ்நாளில் முப்பது அடி நீளம் வரை வளரும்.

( சீக்கிய நண்பர்கள் டிரை பண்ணாதீங்க, எட்டு மீட்டர் தொப்பி தேவைப்படும் )

**பிறந்த ஆறு முதல் எட்டு வாரங்கள் வரை குழந்தைகள் அழுதால் கண்ணீர் வராது**

( அதுக்காக சும்மா சும்மா அழ வெச்சு டெஸ்ட் பண்ணாதீங்க )

சேவியர்




**இன்று விஞ்ஞானம் சொல்வது:**

நினைவுக் கொள்ளும் திறன் இறுதி மூன்று மாத காலத்தில், கர்ப்பமாக இருக்கும் பெண்ணை சுற்றி இருப்பவர்கள் பேசுவதை நினைவில் கொள்ளும் ஆற்றல் சிசுவிற்கு உள்ளது.

**அன்று மெய்ஞானம் சொன்னது**

மகாபாரத கதை உதாரணம்... இது நாம் மகாபாரத கதையிலேயே கண்டது தான். அர்ஜுனன் தனது மனைவி கருவுற்றிருக்கும் போது, தனது மனைவியிடம் சக்ரவியூகத்தை எப்படி உடைத்துக்கொண்டு உள்செல்வது என்று கூறிக்கொண்டிருப்பான். ஆனால், அதை கருவில் இருக்கும் அபிமன்யு கேட்டுக் கொண்டிருந்தான், இதை கண்ணன் தடுத்து வெளிவரும் வியூகத்தை அறியவிடாமல் தடுத்துவிடுவான். அதனால் தான் அபிமன்யு குருஷேத்திரம் போரில் உள் சென்று வெளிவர இயலாமல் மடிந்ததற்கு காரணம்.

## குரும்பசிட்டி
## கதிர்காமத்தம்பி - கமலாதேவி தம்பதிகளின்
## 50 வது திருமண நாள் வாழ்த்துக்கள்
## 12- 07-2015







உதரம் சுமந்து உதிரம் சுரந்து
மகவாய் ஈன்று மனசுள் சுமந்து
உறவைத்தந்து உலகைக்காட்டி
உயிரைப்போல உணர்வுள் காத்த அம்மா!
எங்கள் அன்பின் திருஉருவே!

மண்ணில் பெண்ணாய் மலரச்செய்து
மானுட வாழ்வின் மகத்துவம் உணர்த்தி
அச்சம் மடம் நாணம் பயிர்ப்புடனே
இச்சகத்து வாழ்விலே இன்பத்தேனூட்டி வளர்த்த
எங்கள் இமயம்! அப்பா! அன்பூற்றும்
அமுதசுரபியே!
இல்லறமென்னும் நல்லறவாழ்வில் இன்று
பொன்விழாக்காணும் எங்கள் கண்கண்ட
தெய்வங்களே!

அன்னை,இல்லத்தின் ஆனந்தஜோதிகளே!
எங்கள் வாழ்வின் ஆணிவேர்களே!

தித்திக்கும் தமிழ்ப்பூவால் பாமாலை சூடுகின்றோம்!
மாதவம் செய்து உங்கள் மகள்களாய்ப் பிறந்த
மகிழ்வுடனே வாழ்த்துகின்றோம்!
தாய்மண் காதலோடு தமிழோடு காதலோடு
சீரோடும் சிறப்போடும் நூறாண்டு வாழ்க! வாழ்க!
அன்பு மகள்கள்

**கல்பனா காஞ்சனா கவிதா**

KAREL DOORMANSTRAAT -03 -6045 EA ROERMOND,
THE NETHERLANDS.
TP No:- 0031475785483


யேர்மனியில் பிராங்பேட் நகரில்

# JAFFNA BASAR

உரிமையாளர்: நடராஜா சுதன்

Tel: 069 25 62 63 53

மாதம் மாதம் மாதரைக்கவரும்
புத்தம் புது டிசைன்களில்
தங்க நகைகள்

ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்கும்
குறைந்தவிலையில்
பயணச்சீட்டுக்கள்
மற்றும் இலத்திற்குத்
தேவையான மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்

Kaiserstr.64 (ladan Nr.22) 60329 Frankfurt/Main









# பிற நாட்டில் வாழ்பவர்களுக்கு ஒரு பழந்தமிழ் அறிவுறுத்தல்

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**

நன்னன் என்னும் தமிழ் மன்னன் “பெண் கொலை புரிந்தவன்” என்று கூறும் வழக்கம் உண்டு. அது தொடர்பாக ஒரு செய்தி பண்டைத்தமிழ் இலக்கிய மரபிலே உண்டு.

சேரநாட்டைச் சேரந்த ஒரு பெண் நன்னனுடைய ஆட்சிக்கு உட்பட்ட பூழி நாட்டுக்குச் சென்றாள். அங்கே ஓர் ஆற்றிலே அவள் நீராடும்போது ஒரு மாங்காய் ஆவ்வாற்றிலே மிதந்து வருவதைக் கண்டாள். கர்ப்பம் தரித்திருந்த அப்பெண் அந்த மாங்காயை உண்ணுதற்கு விருப்பமுடையவளானாள்.

ஆனால் அந்த ஆற்றிலே நீராடிக்கொண்டிருந்த அந்நாட்டுப் பெண்கள் அந்த மாங்காயை உண்ணவேண்டாம் என்று சேரநாட்டுப் பெண்ணைத் தடுத்தார்கள்.
அவர்கள் அவ்வாறு தடுத்ததற்குக் காரணம் இருந்தது.

நன்னனுடைய காவற்காட்டு மாமரத்தின் காயை யாராவது உண்டால் அவர்கள் கொலைசெய்யப்படுவார்கள் என்று ஓர் அரச ஆணை அங்கிருந்தது.

இதனைத் தெரிந்திருந்த அவ்வூர்ப் பெண்கள் “நன்னனுடைய காவற்காட்டு மாங்காய் இதை உண்பவர்கள் தண்டிக்கப் படுவார்கள்” என்று கூறி அப்பெண்ணைத் தடுத்தார்கள்.

ஆனால் அப்பெண் விருப்ப மிகுதியினாலே அக் காயினை உண்டாள். காவலர்கள் அவளை மன்னன்முன் நிறுத்தினார்கள்.



மன்னன் அவளுக்குக் கொலைத் தண்டனை விதித்தான்.

இதனாலே நன்னனை பெண்கொலை புரிந்த நன்னன் என சேர மன்னர்களும் ஏனையோரும் கூறினர்.
பிற நாட்டுப் பெண் ஒருத்தி இத்தவறைச் செய்தாள் என்பதை அறிந்து அவளை நன்னன் மன்னித்துவிட்டிருக்கலாம் என வாதாடலாம்.

இச்செய்தி ஊடாக நமக்கு ஒரு நல்ல பாடம் புகட்டப்படுகின்றது. பிற நாட்டுக்குச் செல்பவர்கள் அந்நாட்டுச் சட்டங்களை அறிந்து அவற்றை மீறாமல் வாழவேண்டும்.

## BBC யின் தமிழோசை” ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டில் ஓர் அரிய செய்தி!

# “தமிழோசை” என பெயர் சூட்டியவர் நம் நாட்டவர் சோ.சிவபாதசுந்தரம்”

**வானொலி அறிவிப்பாளர் பி.எச் அப்துல் கமீத்**

நம் போன்ற ”ஒலிபரப்பாளர்கள்-காற்றில் கலைபடைக்கும் துர்பாக்கி யசாலிகள்” என அடிக்கடி நான் கூறுவதுண்டு. அச்சுவாகனம் ஏறிய ஒரு ஆக்கம், நம் மறைவுக்குப் பின்னரும் நம் பெயர்சொல்லும். ஆனால் காற்றலையில் நாம் படைத்த எத்தனையோ ஒப்பற்ற ஆக்கங்கள்- ஒலிக்கும் வேளையில் நேயர்களுக்கு மனமகிழ்வைத் தந்து அறிவுக்கும் விருந்தானாலும், பின்னர் காற்றோடு காற்றாய்க் கலந்து மறைந்து மறந்தும் போய்விடும்.
இந்த அவல நிலை தொடர்ந்தே வருகிறது. இதோ இன்று அதற்கோர் உதாரணம்- "BBC யின் தமிழோசை” ஆரம்பிக்கப்பட்டு 75 வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் ”பவழ விழா” (3.5.15) என்று, ஒரு பதிவினைப் பார்த்தேன்.
அந்தத் தமிழோசையின் பிதாமகர் யார் என்பதை அதில் ஏனோ? குறிப்பிட மறந்துவிட்டார்கள். எங்கள் இலங்கை மண்ணின் மைந்தர் ”வானொலிக் கலை” எனும் வழிகாட்டி நூலை முதன்முதலில் எழுதிய பெருமைக்குரிய எங்கள் முன்னோடி- சோ.சிவபாதசுந்தரம் அவர்களை, இந்நாளில் நினைவு கூரவேண்டும் என்பதற்காகவே இணையத்தளத்தில் இருந்து அவர்பற்றிய பதிவினை இங்கு தருகிறேன்.
”1941 ஆம் ஆண்டு லண்டன் பிபிசி நிறுவனத்தில் தமிழ் ஒலிபரப்பு தொடங்கப்பட்டது. இலங்கைக் கடிதம் என்ற பெயரில் ஒலிபரப்பான அந்த நிகழ்ச்சியை வழங்கியவர் தம்பு (Tampoe) என்பவராவர். இலங்கையரான இவர் இந்திய சிவில் சர்விஸ் சேவையில் சென்னையில் கலெக்டராக பணியாற்றியவர். இரண்டாவது உலக யுத்தம் முடிவடைந்த





பின்னர் தமிழ் ஒலிபரப்பை விரிவு படுத்தும் நோக்குடன் பிபிசி நிறுவனம் சிவபாதசுந்தரத்தை அழைத்தது. 1947 செப்டம்பரில் இவர் அங்கு சென்று பணியில் சேர்ந்தார். 1948 இல் தமிழ் ஒலிபரப்பை ஒரு சஞ்சிகை நிகழ்ச்சியாக நடத்த முடிவு செய்யப்பட்டது.
லண்டனில் இலங்கை தூதரகத்திலிருந்த குமாரசுவாமி, இந்திய தூதரகத்திலிருந்த பார்த்தசாரதி ஆகியோருடன் ஆலோசனை நடத்தி சஞ்சிகை நிகழ்ச்சியாக விரிவுபடுத்தப்பட்டது. அப்போது (1948இல்) பாரதியாரின் ”தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்” என்ற பாடலை வைத்து தமிழ் ஒலிபரப்புக்கு தமிழோசை என பெயர் சூட்டினார் சோ.சிவபாதசுந்தரம்”

ராஜு பொதிகள் சேவை
Raju Parcel Service
எமது பொதிசேவைகள் இந்த நகரங்களில் உண்டு!
Box and packing tape free (max 40 Kg)
கொழும்பு
நீர்கொழும்பு 40€
யாழ்ப்பாணம் கிளிநொச்சி
வவுனியா முல்லைத்தீவு
திருகோணமலை மட்டக்களப்பு
மன்னார் புத்தளம்
சிலாபம் களுத்துறை
காலி கண்டி 55€
மற்றும் ஏனைய பிரதேசங்களுக்கும்
Germany Berlin Bremen Dortmund Duisburg
Essen Frankfurt Geilenkirchen Hamm Hannover
Heilbronn Karlsruhe Kaufbeuren Landau Oberhausen
Stuttgart
Belgium: Antwerpen
Holland: Amsterdam
Heerlen Rotterdam Zaandam Zeist Almer
Berverwijk Den Haag Den helder Nijmegen Roosendaal
தொடர்புகளுக்கு Raju Parcel Service RPS
DE:0049(0) 163 5065 663
NL:0031 (0) 645 664 110





# நீங்க நினைச்சா நடக்காதா ..

# நான் நினைச்சது நடக்காதா ....



மக்கள் திலகத்தின் ஆளுமைகளை ஜெயலலிதா தன்னுடய பாடல் காட்சிகளில் அவரை புகழ்ந்து பாடிய வரிகள் அத்தனயும் பொருத்தமாக உள்ளைதைப்பாருங்கள்.

நீங்க நினைச்சா நடக்காதா .. நான் நினைச்சது நடக்காதா ....

உன்னை நான் சந்தித்தேன் .. நீ ஆயிரத்தில் ஒருவன் ... என் ஆலயத்தின் இறைவன்

உள்ளத்தால் வள்ளல்தான் ... ஏழைகளின் தலைவன்

நீ அருகில் இருந்தால் உலகம் எனக்கு தூசு .....

உனக்கும் எனக்கும் தான் பொருத்தம் இதில் எத்தனை கண்களுக்கு வருத்தம் .....

இளன் சூரியன் உந்தன் வடிவானதோ .....

ஒரே முறைதான் உன்னோடு பேசி பார்த்தேன் .. நீ ஒரு தனிப்பிறவி ....

என்னை பாட வைத்தவன் ஒருவன் ... குற்றமில்லாத மனிதன் .. என் பாட்டுக்கு தலைவன் .

இன்று நாளை எண்ணி ...காவிய வள்ளலை புகழ் பாடுது ..

எத்தனை பிறவி சேர்ந்து வாழ்வோம் ....யாரறிவாரோ ....

அடிக்கட்டுமா முரசு அடிக்கட்டுமா அழகன் நீதான் நீதான் .....

இருப்பதில் கொடுப்பதில் தகப்பனின் பேர் எடுப்பான்

நீங்க நினைச்சா நடக்காதா .. நான் நினைச்சது நடக்காதா ....

காலத்தை வென்றவன் நீ .. காவியமானவன் நீ

புண்ணியம் செய்தேனே நான் உன்னை அடைய ... புன்னகை புரிந்தாயே பூ முகம் மலர

தன்னலம் கருதாத தலைவா நீ வாழ்க!





கண்ணன் எந்தன் காதலன் கண்ணில் ஆடும் மாயவன் . என்னை சேர்ந்தவன் என் மன்னன் முகம் எங்கே எங்கே என்று தேடுதோ ....
**நல்லது கண்ணா கனவு கனிந்தது நன்றி உனக்கு ...**




**ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்**

துர்க்கா பூஜா துரந்தரர் சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்

Tel: 02304- 910 9445- 0177 20 16 941

Tel: 02304/ 16721 Robert koch Str.5- 58239 Schwerte

**Milin Impex GmbH**

Dortmund நகரில்

இலங்கையர்களுக்கான எவ்வித உணவுப்பொருட்களையும்
மொத்தமாகப் பெற்றுக்கொள் எமது இணையத்தளத்தை நாடவும்

Web :www.milinimpex.de

Geschäftszeiten:
Dienstag, Mittwoch, Freitag
10:00 bis 19:00 Uhr
Montag & Donnerstag
07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 bis 16:00 Uhr
Sonn. und Feiertags: Geschlossen





Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17 /28 Fax: 0231 18 15 288

# விஜய்யின் புலி படத்தில்
# ஸ்ரீதேவி கலக்குகின்றார்!



இன்று சிங்கம் சிறுத்தை கங்காரு என்று மிருகங்களின் பெயரே படத்திற்கு வெற்றி தருவதாக அமைந்து வருகின்றது. இந்த வரிசையில் அடுத்து வருவது புலி. சத்தியராஜ் நடித்தால் கரடி என்று பெயர் வைக்கலாம். வடிவேலு நடித்ததால் எலி. சந்தானம் நடித்தால் சுண்டெலி! விவேக் நடித்தால் அணில் ஏன் செந்தில் கவுண்டாமணி ஜோடியாக நடித்தால் எருமை என்று எல்லாம் பெயர் வைக்கத் தோன்றுகிறது அல்லவா!

என்ன பெயர் வைத்தாலும் படத்தின் பெயர் திரையில் வரும்போது அங்கு கொடுக்கப்படுகின்ற அந்த அதிர்வுடன் கூடிய இசைதான் பெயரை நினைவுபடுத்துவதாக அமையும். இந்த புலியின் உறுமல் இசைக்காக இரசிகர்கள் காத்துக்கிடக்கின்றனர்.





படத்தில் ஸ்ரீதேவி நடிக்கிறார் என்றதுமே இப்ப அறுவதை தாண்டியவர்கள் கூட சைக்கில் எடுத்துக்கொண்டு யாழ்ப்பாணம் ராணித்தியேட்டருக்கு ஓடத்தயாராகிவிட்டனர். ( இப்ப ராணித் தியேட்டர் இருந்த இடத்தில் கடை கள்தான் உண்டு)

புலி படத்தில் ஸ்ரீதேவி கலக்குகின்றார்!
படத்தில் இடம் பெறும் சண்டைக் காட்சிகளுக்காக வாள் சண்டை கற்றுக் கொண்டாராம் நடிகர் விஜய். சிம்பு தேவன் இயக்கி வரும் புலி படம் சரித்திர மற்றும் அதியுச்ச கற்பனை கதையை அடிப்படையாகக் கொண்டது. இதில் போர்வீரனாகத் தோன்றுகிறார் விஜய். நடிகை ஸ்ரீதேவி ராணி வேடத்தில் நடித்துள்ளார். இந்தப் படம் எப்படி இருக்கும் என்பது குறித்து இயக்குநர் சிம்புதேவன் கூறுகையில், "புலி, இதுவரை இல்லாத பிரமாண்டம் மற்றும் புதுமையுடன் இருக்கும். இந்தப் படம் வரலாற்று புனைகதை. ஆனால் கடந்த காலத்தில் நிஜத்தில் நடந்த எந்த சம்பவத்தையும் காட்சிப்படுத்தவில்லை. இந்தப் படத்தில் போர் வீரனாக வரும் விஜய், வாள் சண்டைக் காட்சியில் நடிக்க வேண்டியிருந்தது. இதற்காக அவருக்கு சிறப்பு வாள் பயிற்சி அளிக்கப்பட்டது. திலீப் சுப்பராயனும், சீன ஸ்டன்ட் கலைஞர் சாங் லின்னும் அவருக்குப் பயிற்சி அளித்தனர்," என்றார்.
சரி வழமைபோல் படம் வெளிவரும் நேரம் கதை எனது அல்லது படத்தில் வசனங்கள் புண்படுத்தும்படியாக உள்ளது. வேறு அரசியல் காரணங்களால் இப்படி தடைகள் வந்து ஆனால் நிச்சயம் வெளிவரும். இப்போ இந்த தடைகள்தான் படத்துக்கே வெற்றியைக்கொடுக்கின்றது. விஸ்வரூபத்தை விஸ்வரூபமாக்கியதே பிரச்சினைகள்தான். கத்தியைக் கூராக்கியதும் பிரச்சினைகள்தான்.

# நான் கடவுளின் குழந்தை.

- த்ரிஷா



நடந்து முடிந்ததை எண்ணி வருத்தப்பட்டு கொண்டே இருந்தால், அடுத்தக் கட்டத்துக்குச் செல்ல முடியாது என்று திருமணம் ரத்தானது குறித்து நடிகை த்ரிஷா பேட்டியளித்துள்ளார்.
நடிகை த்ரிஷாவுக்கும், படஅதிபர் வருண்மணியனுக்கும் இடையே நடப்பதாக இருந்த திருமணம் எதிர்பாராதவிதமாக ரத்தானது. இதுகுறித்து

ஒரு பேட்டியில் அவர் கூறியதாவது:
'திருமணம் நின்று போனது உண்மைதான், ஆனால், அது எதிர்பாராத ஒன்று. நம் கட்டுப்பாட்டை மீறி அது நடந்தால் நாம் அதை ஏற்றுக் கொள்ளவேண்டும். நடந்து முடிந்ததை எண்ணி வருத்தப்பட்டு கொண்டே இருந்தால், அடுத்தக் கட்டத்துக்குச் செல்ல முடியாது. தற்போது என் கவனம் எல்லாம் புதிய படங்களில் தான் உள்ளது.
தற்போது எனது தொழில் ஒன்றுதான் என் கண் முன் நிற்கிறது. கடவுளின் விருப்பப்படியே எல்லாம் நடக்கும். என்னைப் பற்றித் தெரிந்தவர்களுக்கு நன்கு தெரியும், நான் வெளிப்படையாகப் பேசுபவள் என்று. வாழ்க்கை எனக்கு என்ன கொடுத்தாலும் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக உள்ளேன். நான் கடவுளின் குழந்தை. அவர் என்னைக் காப்பாற்றுவார்.' என்றார்.


Hückelhoven நகரில் புதிய இடத்தில் புதுப்பொலிவுடன் ஆசியா சமுத்திரம் Parkhofstraße-101



Vijay tv agent

Asiatischer Super markt

ஆசியா சமுத்திரம்

பசுமையான மரக்கறிகள்– கடல் உணவுப் பொருட்கள் – வீட்டுக்குத்தேயையான மளிகைப்பொருட்கள் அனைத்தும்எம்மிடம் தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்.

துரித பணமாற்றுச் சேவை
Money Transfer



Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:0178 60 68 780

R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com

Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399











## 21.06.2015 யேர்மனி – கம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத் தேர்த் திருவிழாவின் திருக்காட்சி

படம்:நந்தபாலன்

